New Rubi Jewellers
நகைகளும், திருத்த வேலைகளும் உங்கள் தேவைகளுக்கு உடனுக்குடன் செய்து தரப்படும்
7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

ASI Boucherie
ஆடு, மாடு, கோழி இறைச்சி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
195, rue du Fbg st-denis, 75010 Paris
Tel: 01 42 05 23 78
M° : La Chapele Gare du Nord

# ஈழமுரசு®

முரசு 03 | 06 – 12 மார்ச் 2012 | முழக்கம் 125

# தமிழக, உலகத் தமிழர்களின் கோரிக்கையைப் புறம்தள்ளி சிறீலங்காவைக் காப்பாற்ற இந்தியா தீவிரம்!



## சர்வதேசம் உரிய தீர்வை வழங்க மறுத்தால் ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாதது!





## காத்திருக்கும் மக்களும் காலைவாரிய சம்பந்தரும்

## சுவாமியின் சீடன்



## கூட்டமைப்பு தமிழர்கள் அணிந்திருக்கும் ஆடை. அடையாளம் அல்ல!

www. பரிஸ்தமிழ். கொம்
www.paristamil

AUTOSUR
CONTROLE TECHNIQUE AUTOMOBILE
உங்கள் வாகனங்களை Controle Technique செய்து கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்
Le Bourget விமானநிலையம் முன்பாக
C.T.M
Autosur C.T.M
Mathavan Balakrishnan
24 Route de Flandres,
95500 Bonneuil En France
Tél.: 01 45 91 06 78 Fax: 01 45 91 05 96
Portable: 06 68 10 83 85

EURO RESTO SERVICE
உணவு விடுதிகளுக்கான உபகரணங்கள், மற்றும் உங்கள் இல்ல, மண்டப வைபவங்களுக்கான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அனைத்து விதமான பிளாஸ்ரிக் பைகளும் மிகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்
33 bis, rue du Chateau Landon. 75010 Paris
M°: STALINGRAD / LA CHAPELLE
Tél.: 01 40 36 00 09 / 06 68 67 15 55

தமிழ்க்கதிர்
தமிழ்தேசியத்தின் அனல்க் கதிர்
www.tamilkathir.com

VIJAY V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92

English, French, Maths வகுப்புக்கள்
நீண்டகால அனுபவம் வாய்ந்த பல்கலைக்கழகப்பட்டதாரி ஆசிரியர் குழுவினால் வகுப்புக்கள் Parisல் தனி அல்லது குழுவாக நடைபெறுகின்றது. வீடுகளுக்கும் வருகை தரப்படும்.
தொடர்பு : 06 01 24 64 71 - 07 62 82 97 76

BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indianne et Srilankaise
www.restaurantbharath.com www.cafe-bharath.com

VG CASH & CARRY மளிகை ஸ்தாபனம்
ஆசிய மற்றும் ஆபிரிக்க மளிகைப்பொருட்கள்.
34, Avenue de la République
93150 Le Blanc Mesnil
(à côté la Poste)
Tél.: 01 48 67 56 44

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04


மாதாந்தம் 300 MB இணையம் இலவசம்
Lycamobile
Appelez le monde pour moins cher
60 க்கும் மேற்பட்ட சர்வதேச நாடுகளுக்கான இலவச அழைப்புகள்..!
இணைப்புக் கட்டணம் இல்லை.!
0 ct/நிமிடம்*
இந்தியா
இலங்கை
மலேசியா
ஐரோப்பா
கனடா
அமெரிக்கா
சிங்கப்பூர்
குவைத்
சவூதி அரேபியா
*30€ வுக்கு மீள் நிரப்பும் பொழுது 600 நிமிடம் அல்லது குறுந்தகவல் (SMS) இலவசம்
பிரான்ஸ்
வீட்டுத் தொலைபேசி 0 Ct/நிமிடம்*
கைத் தொலைபேசி 12 Ct/நிமிடம்
உள்நாட்டு குறுந்தகவல் 9 Ct/(SMS)
Lycamobile லில் இருந்து Lycamobile 0* Ct
*அனைத்து கட்டணங்களும் நிமிட கணக்கீட்டில் கணக்கிடப்படும். இலவச அழைப்புகள் பிரான்ஸிலிருந்து அல்ஜீரியா, சவூதி அரேபியா, பஹ்ரைன், வங்காளதேசம், கனடா, சீனா, கொலம்பியா, கோடே டிவோர், எகிப்து, அமெரிக்கா, ஐரோப்பா, பிரான்ஸ், ஹாங்கொங், இந்தியா, இந்தொனேசியா, ஈரான், ஈராக், ஜோர்டான், குவைத், லாவோஸ், லெபனான், மலேசியா, மொராக்கோ, மெக்சிகோ, நைஜீரியா, பாகிஸ்தான், போலாந்து, றொமேனியா, ரஸ்யா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, தாய்லாந்து, துருக்கி, வியட்நாம் வீட்டுத்தொலைபேசிக்கும் மற்றும் எல்லா நாடுகளிலுள்ள லைக்காமொபைல்களுக்கும் பொருந்தும். இச்சலுகை மீள்நிரப்பிய நாளிலிருந்து ஏழு நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இலவச அழைப்புகளும், குறுந்தகவல் சேவையும் பாவனையோ, காலாவதியோ முடிந்தால் லைக்காமொபைலில் வழமையான கட்டணம் அறவிடப்படும். *சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. Lycamobile SARL 47 boulevard de Courcelles, 75008 Paris; 528 332 505 RCS Paris.
ஒவ்வொரு சலுகையல்லாத அழைப்புக்களுக்கும் இணைப்புக்கட்டணமாக €0.09 அறவிடப்படும்.
01 77 72 23 22
www.lycamobile.fr
Lycamobile மீள் நிரப்பக்கூடிய இடங்கள்
Altadis
SPF
phoneo
extenso
saf
RELAY
PRESSE

# ஈழமுரசு®

MAISON DES MEDIAS

முரசு 03 06 – 12 மார்ச் 2012 முழக்கம் 125


“பெண் அடிமைத்தனத்தின் விலங்குகளை உடைத்தெறியாத எந்த ஒரு நாடும், எந்த ஒரு சமூகமும், முழுமையான சமூக விடுதலையைப் பெற்றதாகக் கூறமுடியாது.”

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



## தமிழக, உலகத் தமிழர்களின் கோரிக்கையைப் புறம்தள்ளி

# சிறீலங்காவைக் காப்பாற்ற இந்தியா தீவிரம்!

(06.03.2012, செவ்வாய்க்கிழமை)

ஜெனீவா மனித உரிமைகள் சபையில் போர்க் குற்றங்கள் தொடர்பில் சிறீலங்கா அரசு பொறுப்புக் கூறும் கடப்பாட்டை வெளிப்படுத்தவேண்டும் என வலியுறுத்தியும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப் படுத்துமாறு கோரியும் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட வுள்ள பிரேரணைக்கு இந்திய மத்திய அரசு ஆதரவு வழங்க வேண்டும் என தமிழக வரலாற்றில் நீண்ட நெடுங்காலத் திற்குப் பின்னர் அனைத்துக் கட்சிகளும் ஒரே குரலில் கோரிக்கை விடுத்துள்ளன.

‘ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்றும் சிறீலங் காவிற்கு இந்தியா தனது கடும் கண்டனத்தை தெரிவிக்க வேண்டும்’ என்றும் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.

‘சிறீலங்கா அரசை இந்தியா ஆதரிக்கக் கூடாது என்றும், சிறீலங்கா மீது போர்க்குற்ற விசாரணைக்கு ஆணையிட வேண்டுமென்றும்’ தி.மு.க தலைவர் கருணாநிதி வெளியிட் டுள்ள அறிக்கையில் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள் ளார். அத்துடன், தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து, ‘சிறீலங்காவிற்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிப்பது என்பதைத்தவிர வேறு எந்த விதமான நிலைப்பாட்டையும் தி.மு.க. ஏற்றுக் கொள் ளாது’ என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இதேவேளை, பா.ம.க. நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தே.மு.தி.கவின் தலைவர் விஜயகாந்த், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன், இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சி, தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் மற்றும் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் உட்பட தமிழகத்தில் உள்ள ஏனைய பல கட்சிகள் மற்றும் அமைப்புக்களும் சிறீலங்கா விற்கு எதிரான பிரேரணையை ஆதரிக்கக்கூடாது என்பதை வலியுறுத்தி வருவதுடன், தமிழகத்தில் தொடர்ச்சியான பல போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

போர்குற்ற விசாரணையினை வலியுறுத்தியும் இந்தியா வின் நிலைப்பாடு மாறவேண்டும் என்பதை வலியுறுத்தியும் நாம் தமிழர் கட்சியினர் சென்னையில் பிரமாண்டமான ஆர்ப் பாட்ட பேரணி ஒன்றினை நடத்தியுள்ளார்கள். போர்க்குற்ற விசாரணையை ஐ.நா. மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியும் ஜெனீவா கூட்டத்தொடரில் இந்தியாவின்

(19ம் பக்கம் பார்க்க)




ஜெனீவாவில் தமிழர்களின் பேரெழுச்சி

→ 12


## Shop For Sale

11 Years lease

Located on a busy main road with schools nearby and bus stop infront. very spacious shop.

Rates: £7000 Turnover £16,000 p/w

Bus pass: £8000 p/w Lottery: £2700 p/w Paypoint: £6000 p/w

Cash Machine: £1500 Every 3months

1500 square feet total

(Renewal of rent After 3years)

Renewal every 4years

Rent: £23,000

Contact: 07885775043 / 02088889453

## S.P.RAJU JEWELLERY

வாடிக்கையாளர்களுக்கு சிறப்புச் சலுகைகளை வழங்கிவரும் நாம் பிறந்திருக்கும் 2012 இப்புதுவருடத்தில் தங்கநகை சேமிப்புத் திட்டத்தை ஆரம்பிக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



13 rue du Fbg St Denis
75010 Paris
Tél: 01 58 20 17 33

13 rue cail
75010 Paris
Tél: 01 46 07 43 42

## A D IMMO

பிரான்ஸ் முழுவதும் வீடு வாங்க, விற்க, வாடகைக்குப் பெற நம்பிக்கையான முழுத் தமிழ் நிறுவனம்

APPARTEMENTS

| | | |
|---|---|---|
| APP 4P | LE GRAND | 175 000 Euro |
| APP 3P | NOISSY LE SEC | 170 000 Euro |
| APP 4P | CHOISY LE ROI | 175 000 Euro |
| APP 4P | BONDY | 170 000 Euro |
| APP 4P | BOBIGNY | 160 000 Euro |
| APP 3P | DRANCY | 155 000 Euro |
| APP 3P | EPINY | 150 000 Euro |
| APP 3P | LE BOURGET | 170 000 Euro |

PAVILLON

| | |
|---|---|
| DRANCY 4P | 270 000 Euro |
| BONDY 8P | 340 000 Euro |
| LA COURNEUVE 4P | 310 000 Euro |
| BOBIGNY 4P | 280 000 Euro |
| LE BOURGET 4P | 290 000 Euro |
| GAGNY 4P | 288 000 Euro |
| IE BLANC MESNIL 4 P | 260 000 Euro |
| SEVRAN 4 P | 255 000 Euro |



தம்பி : 06 27 50 09 57 அஜந்தன் : 06 60 93 45 27

252, Rue Anatole France 93700 Drancy RER B- Drancy Tél : 01 48 30 72 62 Fax : 01 48 32 51 32

ஈழமுரசு

Redacteur: K. Jeisanthar
Editor in chief: K. Jeisanthar
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

அனைத்து தொடர்புகளுக்கும்:
MAISON DES MEDIAS
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE **Gratuit**
22, Rue Perdonnet,
75010 Paris, France
Tel: 00 33 1 40 05 95 15
Fax: 00 33 1 40 05 95 16
இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-eelamurazu@gmail.com
விளம்பர விநியோக தொடர்புகட்கு:
E.Mail-eelamurazuadm@gmail.com

Impression / Printing:
News Fax International
Unit 16, Bow Industraial Park
London E15 2DZ

பிரித்தானியா:
Eelamurasu Weekly
E.Mail-eelamurazu.uk@gmail.com
078 3087 4808
MOHAN

அவுஸ்திரேலியா:
P.O Box 1327
Glen Waverley
Victoria 3150
Tel: 61 3 8802 8368
Fax: 61 3 9803 4932

கனடா:
Pulathil Weekly
E.Mail-pulathilcanada@gmail.com
P.O.BOX # 4068, 1235 McCowan Rd,
Scarborough, ON, M1H 0A4
416 418 0822

**சந்தா விபரம்**
(அஞ்சற் செலவு மட்டும்)
**வருட சந்தா**
**பிரான்ஸ் 60€**
**ஐரோப்பா 65€**
**ஏனைய நாடுகள் 70€**

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதிபெறவேண்டும்.

# நெடுந்தீவில் சிறுமி ஈ.பி.டி.பி உறுப்பினரால் வல்லுறவுப் படுகொலை

நெடுந்தீவில் 12 வயதான பாடசாலை மாணவி ஒருவர் சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து இயங்கும் ஆயுதக் குழுவான ஈ.பி.டி.பியினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். ஈ.பி.டி.பி ஒட்டுக்குழுவின் தலைவர் டக்ளஸ், சிறீலங்காவின் மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்தி ஆதரவு தேட ஜெனீவாவில் முயன்றநிலையில், அக்குழுவினரைச் சேர்ந்த ஒருவரால் சிறுமி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். குறிப்பிட்ட ஒட்டுக்குழு உறுப்





பினர் மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்டபோது, சிறீலங்கா காவல் துறையினர் அவரைக் காப்பாற்றி கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் ஈ.பி.டி.பியின் உறுப்பினரும் அக்கட்சியின் நெடுந்தீவு நாடாளுமன்ற உறுப்பினரான உதயன் என்றழைக்கப்படும் சில்வஸ்ரின் அலன்ரின் வலது கையுமான கந்தசாமி ஜெகதீஸ்வரன் (வயது 31) எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கொடூரச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, நெடுந்தீவு 8ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் தரம் 8ல் கல்வி பயின்று வந்தவருமான ஜேசுதாசன் லக்சினி (வயது 12) என்பவரின் சடலமே வெற்றுக்காணியில் இருந்து மீட்கப்பட்டது. கடந்த சனிக்கிழமை காலை குறித்த மாணவி மீன் வாங்குவதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டு சந்தைக்குச் சென்றுள்ளார். சந்தையில் குறித்த மாணவியை அவரின் உறவினர்கள் கண்டுள்ளனர். பின்னர் அவர் வீடு வந்து சேரவில்லை. மாலை ஆகியும் மகளைக் காணாததால் பெற்றோர் தேடி அலைந்தனர். இதன்போது நெடுந்தீவு 8ம் வட்டாரம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள காணியொன்றில் குறித்த மாணவியின் சடலம் கிடப்பது தெரியவந்தது.

மாணவியின் ஆடைகள் களையப்பட்டுள்ளதுடன் அவரது உடலெங்கும் கல்லால் தாக்கப்பட்ட அடையாளங்களும் காணப்பட்டுள்ளன. அத்துடன் சடலத்துக்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் சைக்கிள் ஒன்றும், மதுப் போத்தல் ஒன்றும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. பாலியல் துஷ்பிரயோகத்தின் பின்னரே குறித்த மாணவி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தைக்குச் சென்று கொண்டிருந்த சிறுமியை அங்கு கொண்டு சென்றுவிடுவதாகக் கூறித் தனது சைக்கிளில் ஏற்றிச் சென்றே இவர் இக் கொடூரத்தைப் புரிந்தார் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட சிறுமி கொடூரமாகப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், கல்லால் குத்தி தலை சிதைக்கப்பட்டுக் கொல்லப்பட்டார் என்று மருத்துவ உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் மரண விசாரணையைத் தொடர்ந்து சிறுமியின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. நெடுந்தீவு மயானத்தில் ஞாயிற்றுக்கிழமை சிறுமியின் உடல் புதைக்கப்பட்டது.

ஆனால் வழக்கம்போல, சந்தேகநபர் தமது கட்சியின் முன்னாள் உறுப்பினர் என்று ஈ.பி.டி.பி கதையளந்துள்ளது. ஆனால், ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலையில் மூன்றாவது சந்தேகநபர் ஜெகதீஸ்வரன் என்றும் கூறப்படுகின்றது. ஈ.பி.டி.பி.யின் முன்னணி படுகொலையாளியாக இருந்தவரான நெப்போலியனின் வலதுகரமாகச் செயற்பட்டவர் என்றும் நெடுந்தீவு வாழ் மக்கள் கூறியுள்ளனர். மூன்று மாதங்களுக்கு முன்னர் 'பிஸ்ரல்' துப்பாக்கியைக் காட்டி பெண் ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்றார் என்று சிறீலங்காக் கடற்படையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து அவர்கள் இவரைப் பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைத்திருந்தனர். இந்த முறைப்பாடு தொடர்பில் ஒவ்வொரு வாரமும் காவல் நிலையத்துக்குச் சென்று கையெழுத்திட வேண்டும் என்று நீதிமன்றம் இவருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தது.

கடந்த இரு நாள்களுக்கு முன்னும் வேறு இரு சிறுமிகளை தனியிடத்துக்கு தவறான நோக்கத்துடன் அணுகினார் என்று இவர் மீது குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையிலேயே இவர் லக்சினியை மிருகத்தனமாக வன்புணர்வு செய்து கொடூரமாகக் கொலை செய்துள்ளார்.

விடயம் தெரிய வந்ததும் ஆத்திரமடைந்த நெடுந்தீவு மக்கள் நெடுந்தீவு பத்தாம் வட்டாரத்தில் உள்ள சந்தேகநபரின் வீட்டுக்குள் புகுந்து அவரை நையப்புடைத்தனர். தாக்கியபடியே கடற்கரை நோக்கி ஜெகதீஸ்வரனை, அவர்கள் இழுத்துச்சென்ற போது இடைமறித்த சிறீலங்கா கடற்படையினரும் காவல்துறையினரும் அவரைக் காப்பாற்றிக் கைது செய்தனர். 'இல்லையேல் நாங்கள் அந்த .......யை அடித்தே கொன்றிருப்போம்' என்றார் நெடுந்தீவு வாசி ஒருவர்.

ஆத்திரமடைந்த மக்கள் நெடுந்தீவு சிறீலங்கா காவல் நிலையத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர். இதனையடுத்து அவரை அங்கிருந்து பாதுகாப்பாக காவல்துறையினர் யாழ்பாணத்திற்கு கொண்டு சென்று தடுத்து வைத்துள்ளனர்.

Tamil Speaking Call: 0203 384 7535
Email Us: info@airchoice.co.uk
Website: www.airchoice.co.uk
For Emergency Flights - Call & Select Option 3in!
IATA 91 2 8069 3
AirChoice.co.uk BEST AIR FARES WORLDWIDE

COLOMBO from £220*
FLIGHTS WORLDWIDE+Taxes

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ETIHAD AIRWAYS | fr £166* | SriLankan Airlines | fr £300* | INDIA | fr £155* |
| OMAN AIR | fr £220* | JET AIRWAYS | fr £130* | MALAYSIA | fr £150* |
| KUWAIT AIRWAYS | fr £220* | QATAR AIRWAYS | fr £285* | CANADA | fr £130* |
| Gulf Air | fr £166* | Emirates | fr £405* | | |

Subject to availability, Terms & Conditions apply. Exclude taxes *

ஈழமுரசு

# ஜெனீவாவில் சிறீலங்காவை எதிர்ப்பது யார்? ஆதரிப்பது யார்?

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர் என்றுமில்லாத எதிர்பார்ப்பை சிறீலங்கா தொடர்பாக இம்முறை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்கள் இன அழிப்புச் செய்யப்பட்டுக் கொண்டிருந்தபோது அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் ஐ.நா. எடுக்கத் தவறிய நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் அவையின் முன்னால் தன்னையே தீயாக எரித்து முருகதாசன் அதன் கண்களைத் திறக்க முயன்றான். ஆனாலும், பாராமுகமாகவே இருந்த ஐ.நா. மனித உரிமைகள் அவை, அதன் பின்னர் டப்ளின் தீர்ப்பாயமும், ஐ.நா. நிபுணர் குழுவும் ஆதாரபூர்வமாக சிறீலங்காவின் போர்க் குற்றங்களையும், மனித உரிமை மீறல்களையும் நிரூபித்துவிட்ட நிலையிலும் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. சிரியாவில் பஷார் அல் ஆசாத்தின் படைகளின் மக்கள் மீதான தாக்குதல்கள் தொடங்கி ஓராண்டுக்கு உள்ளாகவே அந்நாட்டின் மீது பிரேரணையைக் கொண்டுவந்து நிறைவேற்றிவிட முடிந்த மனித உரிமைகள் சபையினால் சிறீலங்கா நடத்திய இன அழிப்பின் கொடூரத்தின் மூன்று ஆண்டுகளை எட்டும் நிலையிலும் இன்னும் தமிழர்கள் மீதான வன்முறைகளும், இனவிரோதப் போக்குகளும் தொடரும் நிலையிலும் எந்தவித நடவடிக்கையையும் எடுத்துவிட முடியவில்லை.

எனினும், இம்முறை சிறீலங்காவின் மீது காத்திரமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அழுத்தங்கள் சிறீலங்காவை குற்றவாளியாக்கும் காத்திரமான நடவடிக்கைக்கு வழி வகுக்கும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படும் சிறீலங்காவிற்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாக குறைந்தது 24 நாடுகளின் வாக்குகள் கிடைத்தாலே அந்தப் பிரேரணையை நிறைவேற்றமுடியும். கடந்த ஆண்டு கனடாவின் முயற்சி தோல்வியைத் தழுவிய நிலையில், இந்த ஆண்டு அமெரிக்காவின் முயற்சி எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்ற கேள்வி எழாமலில்லை.

ஜெனீவா மனித உரிமைகள் சபையில் 47 நாடுகள் வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ளன. ஒவ்வொரு நாடுகளுக்கும் மூன்று ஆண்டுகள் வரையே அங்கத்துவம் என்பதால், இவ் அங்கத்துவ நாடுகளின் வரிசையில் ஒன்றரை ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றம் ஏற்படும். தற்போது இருக்கும் அங்கத்தவ நாடுகள் 20.06.2011 முதல் 31.12.2012 வரை வாக்களிக்கும் தகுதி பெற்றவை. இதில் லிபியாவில் நடைபெற்ற வன்முறைகளை அடுத்து வாக்களிக்கும் தகுதி அந்நாட்டுக்கு தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, எஞ்சியுள்ள 46 நாடுகளின் வாக்குகளே சிறீலங்காவின் மீதான நடவடிக்கையை தீர்மானிக்கும்.

இதில் வாக்களிக்கும் தகுதி பெற்ற நாடுகளாக...

**ஆபிரிக்கா**

அங்கோலா, பெனன், பொஸ்வானா, பூர்க்கினா, கமரூன், கொங்கோ, டியூபுட்டி, லிபியா, மொரித்தானியா, மொரிசியஸ், நைஜீரியா, செனகல், உகண்டா.

**தென் அமெரிக்கா**

சிலி, கோஸ்தரிக்கா, கியூபா, ஈகுவடோர், கௌதமாலா, மெக்சிக்கோ, பெரு, உருகுவே.

**ஆசியா**

சவூதி அரேபியா, மலேசியா, தாய்லாந்து, பங்களாதேஷ், சீனா, இந்தியா, இந்தோனேசியா, ஜோர்டான், குவைத், கிரிகிஸ்தான், மாலைதீவு, பிலிப்பைன்ஸ், கட்டார்.

**ஐரோப்பா (மேற்கு மற்றும் கிழக்கு)**

ஒஸ்ரியா, பெல்ஜியம், இத்தாலி, நோர்வே, ஸ்பெயின், சுவிச்சர்லாந்து, செக், கங்கேரி, போலந்து, மோல்டோவா, ருமேனியா.

மற்றும்

அமெரிக்கா, ரஷ்யா ஆகியவவை இருக்கின்றன.

இதில் சிறீலங்காவிற்கு ஆதாரவாக வாக்களிக்கப்போவதாக ரஷ்யா, சீனா, இந்தியா, கட்டார், சவூதி அரேபியா, மலேசியா, தாய்லாந்து, கியூபா, பிலிப்பைன்ஸ், ஈக்குவடோர் ஆகிய 10 நாடுகள் உறுதியளித்துள்ளன.

பங்களாதேஷ், இந்தோனேசியா, கிரிகிஸ்தான், மாலைதீவு மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் மெக்சிக்கோ தவிர்ந்த வேறு சில நாடுகளும், ஆபிரிக்காவில் சில நாடுகளும் சிறீலங்காவிற்கு ஆதரவாக வாக்களிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 46 நாடுகளில் 24 நாடுகளின் வாக்குகளைப் பெற்றாலே அமெரிக்கா கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படும் பிரேரணையை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சிறீலங்காவினால் தோற்றகடித்துவிட முடியும்.

தற்போது 10 நாடுகளின் ஆதரவை உறுதிப்படுத்தி, மேலும் 14 நாடுகளின் ஆதரவை திரட்டுவதற்காக சிறீலங்கா பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டுவருகின்றது. இந்த முயற்சிக்கு இந்தியாவும் பக்கபலமாக இருப்பதாக அறியவருகின்றது. இதேவேளை, அமெரிக்கா மற்றும் 11 ஐரோப்பிய நாடுகளே இப்போது பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் என்பது உறுதியாக உள்ளது.

எனினும், ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக செக் குடியரசு, போலந்து போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் நிலை குறித்து கேள்விகளும் இருக்கின்றன. எனவே, சிறீலங்கா இந்தப் பிரேரணையை தோற்றகடித்துவிடும் சாத்தியங்கள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. எனினும், அமெரிக்காவுடன் முரண்படாமல் இருப்பதற்காக இப்பிரேரணைக்கு ஆசிய மற்றும் ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகள் சில வாக்களிப்பில் பங்குபற்றாமல் நடுநிலை வகித்தால் சிறீலங்காவிற்கு அது சிலவேளைகளில் பாதகமாக மாறிவிடலாம் என்று அச்சம் கொண்டுள்ள சிறீலங்கா, அவ்வாறான நாடுகளுடனும், அந்நாடுகளுக்கு ஆதரவான நாடுகளுடனும் தொடர்ந்து பேச்சுக்களை நடத்திவருகின்றது. எனவே, அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணை சிறீலங்காவைக் சிக்கவைக்குமா, தப்பவைக்குமா என்பதை வாக்களிப்பின் பின்னரேயே உறுதிப்படுத்தமுடியும்.

## கூட்டமைப்பு தமிழர்கள் அணிந்திருக்கும் ஆடை. அடையாளம் அல்ல!

அறுபது வருடகால தமிழர்களின் அரசியலுரிமைப் போராட்டத்தின் முற்றுப்புள்ளி நகர்ந்து கொண்டேயிருக்கின்றது. அழிவுகள், அவலங்கள் தாண்டி தமிழரும் அதன் பின்னால் நடந்து கொண்டேயிருக்கின்றார்கள். ஆனால் கடந்தகாலம் தந்த கனதியான பாடங்களின் அடிப்படையிலும், கடந்தகாலம் தந்த அழியா வடுக்களை ஆற்றும் வகையிலும் ஒரு நிரந்தரமான முற்றுப்புள்ளி எப்போது வைக்கப்படும்? போரையும், போரின் வலியையும் வாழ்வாகக் கொண்ட மக்களிடம் இன்றிருக்கின்ற நியாயமான கேள்வி இது ஒன்று தான்.

'காற்று வெற்றிடங்களை நிலைத்திருக்க விடுவதில்லை' என்பார்கள். இதுவே 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிந்தவுடன் தமிழரின் அடுத்தகட்டப் போராட்டம் மீண்டும் ஜனநாயக வழியில் ஆரம்பமானதிலிருந்து நாம் கற்றுக் கொண்டிருக்கின்ற பாடம். ஆனால் இந்தப் போராட்டம் வரலாற்றில் வெறுமைகளையே விட்டுவைக்கப்போகின்றது என்ற மன உறுத்தலும் இன்று தமிழர்களிடம் எழுந்திருக்கின்றது. காரணம் கடந்த அறுபது வருடம் இந்த நாட்டில் நடைபெற்றிருந்த அரசியலுரிமைப் போராட்டம் தமிழர்களுடைய போராட்டம்.

**வன்னியில் இருந்து கண்ணன்**

இன்று பலர் இதை மறந்திருக்கின்றார்கள். சரி, பிழைகள் நடந்திருக்கலாம். ஆனால் ஒரு போராட்ட வடிவத்தின் முடிவில் பிறக்கின்ற அடுத்தகட்டப் போராட்டம் அதன் முன்னைய போராட்ட வடிவத்தின் வெற்றிகளை, கொள்கை வழிகளை கட்டாயம் சுமந்தேயாகவேண்டும். இந்த வரலாற்றுப் படிப்பினையினையே முப்பது வருட ஜனநாயக வழியிலான போராட்டம் மழுங்கடிக்கப்பட்டபோது, அடுத்து வந்த ஆயுதப்போராட்டம் அதற்கு முன்னைய போராட்டத்திலிருந்து பெற்றுக் கொண்ட கொள்கையினை பற்றிக் கொண்டு அடுத்த முப்பது வருடம் நடந்திருக்கின்றது.

வெளிப்படையாகச் சொல்லப்போனால் புலிகள் 30 வருடம் தனிநாட்டுக் கொள்கையினை முன்னிறுத்திப் போராடினார்களென்றால், அந்த தனிநாட்டுக் கொள்ளை ஜனநாயக போராட்டத்தின்போது 1972களில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் உருவாக்கப்பட்டது. இதுவே ஆயுதப் போராட்டம் வெற்றிகளையும், மக்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள காரணமாகவிருந்தது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் ஆயுதப் போராட்டத்திலிருந்து சமகாலத்திற்காக எதுவுமே எடுக்கப்படவில்லை என்பதையும் நாம் மறுத்துவிடக்கூடாது.

யார் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், யுத்தத்தின் பின்னர் யுத்தம் பல அழிவுகளுடன் முடிந்திருந்த நிலையில், குறைந்தபட்சம் மக்கள் போரில் இறந்துபோன தங்கள் சொந்தங்களுக்காக முழுதாக அழுது முடித்திருக்காத நிலையில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. ஆனாலும் மக்கள் சென்று வாக்களித்தார்கள். அதில் கூட்டமைப்பு முன்வைத்த கொள்ளைகளுக்காக மக்கள் வாக்களித்தார்கள். போதுமானளவு நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிந்தும் விட்டார்கள்.

இதிலிருந்து மிக எளிமையானதொரு பாடத்தை நாம் கற்றிருக்கின்றோம். இறுதியாக நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் அறுபது வருடம் தமிழர்கள்

(16ம் பக்கம் பார்க்க)

### உயிரிழந்த செய்தியாளர் மேரி கொல்வினுக்கு யாழில் நினைவஞ்சலி

உயிரிழந்த அமெரிக்காவை சேர்ந்த பிரபல யுத்த செய்தியாளரான மேரி கொல்வி நினைவஞ்சலி திங்கட்கிழமை யாழ். ஊடகவியலாளர்களினால் அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன் இவர் உயிரிழந்ததை நினைவுகூரும் முகமாக அஞ்சலி கூட்டமும் யாழ். ஊடகவியலாளர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் யாழ். ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு உரிழந்த்த செய்தியாளரான மேரி கொல்வின் உருவப்படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றினர். அத்துடன் அவரின் செய்தித்துறை பற்றிய கருத்து பகிர்வுகளும் இடம்பெற்றன.



### பற்றைக்குள் பெண் சிசு உயிருடன் மீட்பு

காரைநகர் மொந்திபுலத்தில் உள்ள வளவுப் பற்றையிலிருந்து பெண் சிசு ஒன்று உயிருடன் மீட்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் கடந்த 3ம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது. பற்றைக்குள் குழந்தையைக் கண்ட அயலவர்கள் குழந்தையை காரைநகர் வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். பின் குழந்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றது. இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை. மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### வடக்கில் 179 சிறார்கள் மீது பாலியல் துஸ்பிரயோகம்

வடக்கில் கடந்த வரும் 179 சிறுவர்கள் பாலியல் துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களைவிட 102 சிறார்கள் உடல்ரீதியான துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளனர். 45 பேர் இளவயதுத் திருமணம் செய்து கொண்டுள்ளனர். தமக்குக் கிடைத்த முறைப்பாடுகளில் இருந்து மட்டுமே இந்த எண்ணிக்கை தெரியவந்துள்ளது என்று வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் ரி.விஸ்வரூபன் தெரிவித்துள்ளார். பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சிறார்கள் அதிகளவில் யாழ்ப்பாணத்திலேயே இனங்காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இவ்வாறு 65 பேரும் வவுனியால் 39 பேரும், முல்லைத்தீவில் 32 பேரும், கிளிநொச்சியில் 28 பேரும், மன்னாரில் 15 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர். இளவயதுத் திருமணங்கள் முல்லைத்தீவிலேயே அதிகம் நடந்திருக்கின்றமையை பதிவுகள் உறுதிப்படுத்துகின்றன. முல்லைத்தீவில் 18 பேரும், யாழ்ப்பாணத்தில் 14 பேரும், மன்னாரில் 8 பேரும், கிளிநொச்சியில் 4 பேரும், வவுனியாவில் ஒருவருமாக 45 பேர் இளவயதுத் திருமணம் புரிந்துள்ளனர். தவிர மனக் குழப்பத்துக்கு உள்ளான நிலையில் 103 சிறார்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் வவுனியாவைச் சேர்ந்தவர்களே அதிகமானவர்கள். வவுனியாவில் இவ்வாறு 57 பேரும் யாழ்ப்பாணத்தில் 16 பேரும் மன்னாரில் 13 பேரும் முல்லைத்தீவில் 10 பேரும் கிளிநொச்சியில் 7 பேரும் இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளனர்.

### இலங்கையில் 5 மாதங்களில் 32 கடத்தல், 7 உடலங்கள் மீட்பு

இலங்கைத் தீவில் குறிப்பிட்ட ஐந்து மாதங்களில் 32 பேர் கடத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் ஏழு பேர் கொழும்பு மற்றும் புறநகரப்பகுதிகளில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். ஐவர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் தொடர்பில் எவ்வித தகவல்களும் இல்லை. இவர்களில் பெரும்பாலோனோர் ஆயுததாரிகளால் வெள்ளை வானில் வந்தோராலேயே கடத்தப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட சில காலப்பகுதியில் இவ்வாறான குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளதுடன் கடத்தல், படுகொலை சம்பவங்கள் ஒப்பீட்டளவில் அதகரித்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லம் இராணுவத்தினரின் பாரிய தளமாக மாற்றம்!

மாவீரர் துயிலும் இல்லங்களை இடித்தழித்து அங்கு தம் படைத்தளத்தை நிறுவிவரும் சிறீலங்காவின் காட்டுமிராண்டித்தனத்தில் மேலுமொரு துயிலுமில்லம் படை முகாமக்கப்படுகின்றது. வடமராட்சி எள்ளங்குளம் மாவீர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்ட தமது பாரிய படைமுகாமை பலப்படுத்தும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுவருகின்றனர். இதற்காக நெல்லியடி குஞ்சர் கடைச் சந்தியிலுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு அங்கிருந்த இராணுவத் தளபாடங்கள் எள்ளங்குளப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான மாவீரர்களது வித்துடல்கள் புதைக்கப்பட்ட எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம், யுத்தத்தின் பின்னர் இராணுவத்தால் இடித்து அளிக்கப்பட்டதோடு அங்கு பாரிய படைத்தலைமையகம் ஒன்றையும் இராணுவம் அமைக்கத் தொடங்கியது. இந்நிலையில், இம்முகாமிலிருந்த இராணுவத்தின் 52-1 படைப்பிரிவின் 3வது சிங்க ரெஜிமண்டைச் சேர்ந்த படையினரே இவ்வாறு குஞ்சர் கடையிலிருந்து சென்றவர்களாவார்கள். இவர்கள் எள்ளங்குளப்பகுதியில் உள்ள இராணுவத்தினருடன் இணைக்கப்பட்டு பாரிய படைத்தளமாக எள்ளங்குளம் மாவீர் துயிலும் இல்லம் மாற்றப்பட்டுள்ளது.

### பத்மினி சிதம்பரநாதனிடம் விசாரணை

வன்னியில் ஆழ ஊடுருவும் சிறீலங்காப் படையினரால் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கி.சிவநேசனின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள் தொடர்பான தகவல்களை தம்மிடம் சிறீலங்காவின் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கேட்டிருந்ததாக முன்னாள் நா.உ. திருமதி.பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார். கொழும்பிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு காவல் தலைமையகத்திற்கு விசாரணைக்கென அழைக்கப்பட்டிருந்த இவரிடம் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் குறித்து விசாரிக்கப் பட்டுள்ளது. குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரால் மூன்று மணிநேரம்



(08ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் அமெரிக்க சிறப்புப் படையினர்

# சிறீலங்கா மறுத்தது அமெரிக்கா நிரூபித்தது!

அமெரிக்காவின் விசேட படைப்பிரிவு இலங்கை, இந்தியா, நேபாளம், வங்காளதேஸ், மாலைதீவு ஆகிய ஐந்து தெற்காசிய நாடுகளில் நிலைகொண்டிருப்பதாக பசிபிக் பிராந்திய அமெரிக்கப் படைகளின் கட்டளைத் தளபதி அட்மிரல் ராபர்ட் வில்லார்டு கடந்த வியாழக்கிழமை அமெரிக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அந்நாடுகளில் தங்கியிருக்கும் அமெரிக்கப் படைகள் பயங்கரவாதத்திற்கு எதிராக மிக உன்னிப்பாக செயற்படுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார். முக்கியமாக இந்தியாவில் இவர்களின் பணி மிக முக்கியமானது. பாகிஸ்தானின் தலிபான் படைகள் மிகவும் அச்சுறுத்தல் மிக்கவை. இவற்றிக்கு எதிராக செயற்படுவது மிகவும் சிரமமானது எனவும் அவர் தெரிவித்திருந்தார். அமெரிக்காவின் இந்த அறிவிப்பு ஐந்து தெற்காசிய நாடுகளிலும் சார்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



அத்துடன், இந்திய இராணுவத்துடனான தமது இராணுவ ஒத்துழைப்பு இருதரப்பு ஒத்துழைப்பு எனக் குறிப்பிட்ட அந்தக் கட்டளை அதிகாரி, பயங்கரவாத ஒழிப்பு தொடர்பில் இந்தியாவுடன் மிக நெருக்கமாக செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டதுடன், இருதரப்புப் பயிற்சி பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என விரிவடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அவர் மேலும் கூறுகையில், அமெரிக்காவைப் பொறுத்தவரையில் தெற்காசியப் பகுதி முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐரோப்பாவிலிருந்து ஆசியாவுக்கும், அமெரிக்காவுக்கும் எரிபொருள் மற்றும் பல்வேறு வர்த்தகப் பொருள்களை கொண்டு செல்லும் வழியாக உள்ளதால், தெற்காசியாவின் பாதுகாப்பு பசிபிக் பிராந்திய அமெரிக்கப் படைகளின் பணிகளில் தலையானதாகும்.

அணு ஆயுத வல்லமை பெற்ற நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும் பகை நாடுகளாக உள்ளதால் தெற்காசியப் பகுதி சவால்கள் நிறைந்ததாகும். இந்தியா, நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளில் தீவிரவாதக் குழுக்களின் இயக்கம், எல்லைப் பிரச்னைகள், போதை மருந்து கடத்தல், போன்ற பிரச்னைகள் உள்ளன.

தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒடுக்குவதில் இந்தியாவுடனும், அமெரிக்காவுடனும் வங்கதேசம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அந்நாட்டின் இராணுவம், ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்புப் படைகளில் அதிகளவில் தனது பங்களிப்பை அளித்து வருகிறது என்றார்.

இந்நிலையில், தமது நாட்டில் அமெரிக்கச் சிறப்புப் படையினர் நிலைகொண்டுள்ள செய்தியை சிறீலங்காவும், இந்தியாவும் உடனடியாகவே மறுத்திருந்தன. இந்தியாவின் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகமும் பாதுகாப்பு அமைச்சகமும் கட்டளைத் தளபதியின் கருத்தை நிராகரித்தன. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற கூட்டுப்பயிற்சிகளின் போது மாத்திரமே அமெரிக்க துருப்புகளுடன் இந்தியா இணைந்து செயற்பட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்த நிலையில், அமெரிக்க துருப்புகள் கடந்த காலத்திலோ தற்போதோ இந்தியாவில் நிலைகொண்டிருக்கவில்லை என இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இலங்கையில் அமெரிக்க சிறப்புப் படைகள் இருப்பதாக வெளியான தகவல்களை சிறீலங்கா இராணுவமும் மறுத்துள்ளது. அமெரிக்காவினதோ வேறெந்த வெளிநாட்டினதோ துருப்புகள் தற்போது இலங்கையில் இல்லை என இராணுவப் பேச்சளார் நிஹால் ஹப்புஆரச்சி கூறினார். எனினும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள வருடாந்த 'நீர்க் காகத் தாக்குதல்' எனும் பெயரிலான கடல், ஆகாய, தரை பயிற்சிகளில் சிறீலங்காவின் 2500 துருப்புகளுடன் இணைந்து பயிற்சிகளில் ஈடுபடுவதற்காக 8 பேர் கொண்ட அணிகளை அனுப்புமாறு நான்கு நாடுகளுக்கு சிறீலங்கா இராணுவம் அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் அமெரிக்க விசேட படையினர் நிலைகொண்டுள்ளதாக வெளியான செய்தியை சிறீலங்காவிற்கான அமெரிக்கத் தூதரகமும் மறுத்திருந்தபோதும், அத்தூதரகத்தில் பணியாற்றுவதற்கு அமெரிக்க படை அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது. அமெரிக்காவுக்கும் சிறீலங்காவிற்கும் இடையிலான இரு தரப்பு உடன்படிக்கையின் ஒரு பகுதியாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணியாற்றுவதற்கு அமெரிக்க படை அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தூதரகத்தின் பாதுகாப்பு விவகார பொறுப்பதிகாரியானவர் அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தினதும் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் அந்த அலுவலகத்தின் உதவி செயற்திட்டங்களுக்கும் பயிற்சிகளுக்குமான தலைமைப் பிரதிநிதியாவார்' என அமெரிக்கத் தூதரகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009ம் ஆண்டிலிருந்து இலங்கையில் வைத்திய சாலைகள், பாடசாலைகளை நவீனமயப்படுத்தல், புனரமைத்தல் போன்ற திட்டங்களுக்காக அமெரிக்க பசுபிக் கட்டளைப்பீடத்திற்கு ஊடாக 9 மில்லியன் டொலர்களை அமெரிக்கத் தூதரகம் வழங்கியுள்ளது எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் அண்மைக்காலத்தில் 'பசுபிக் எயார்லிப்ட் றெலி' மற்றும் மருத்துவ, மனிதாபிமான உதவிகளுக்கான கூட்டுப்பரிமாற்றப் பயிற்சி போன்ற கூட்டு செயற்திட்டங்களில் அமெரிக்க படையினர்

(08ம் பக்கம் பார்க்க)

**மத்திய கிழக்கு நாடுகளில் மட்டுமே தனது நேரடி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுவந்த அமெரிக்கா, தற்போது தெற்காசியாவிலும் அதனை ஆரம்பித்துள்ளது இதன்மூலம் அம்பலமாகியுள்ளதாக குற்றம்சாட்டப்படுகின்றது.**

# சர்வதேசம் உரிய தீர்வை வழங்க மறுத்தால் ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாதது!

தாயகத்தில் இருந்து வீரமணி

**எதற்காக அடிக்கடி வன்னிக்குப் போனீர்கள்..?
நீங்கள் கல்வி கற்பதற்கு புலிகள் பணம் வழங்கினார்களா..?
புலிகளுக்காக பிரச்சாரத்தில் ஈடுபட்டீர்களா?
உங்கள் குடும்பத்திற்கும் புலிகளுக்கும் எந்த வகையான தொடர்புகள் இருந்தன..?**

இது சிறீலங்கா இராணுவப் புலனாய்வாளர்களின் அடுக்கடுக்கான கேள்விகள். வன்னியிலிருந்து வருகை தந்து யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்களை நோக்கியே இந்தக் கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 2005, 2006, 2007, 2008 மற்றும் யுத்தம் முடிவடைந்த 2009ம் ஆண்டு ஆகிய காலப்பகுதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்களை இலக்குவைத்து சிறீலங்கா இராணுவ புலனாய்வுக் குழுவொன்று களமிறக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வன்னியிலிருந்து வருகை தந்து கல்வி கற்ற மாணவர்களை இலக்கு வைத்தே சிங்கள இராணுவப் புலனாய்வுக் குழு வலை விரித்திருக்கின்றது.

தமிழர் தாயகப் பகுதியில் இரண்டு பல்கலைக்கழகங்கள் உள்ளன. வடக்கில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களின் மாணவர்களை உள்ளடக்கியதாக யாழ். பல்கலைக்கழகமும் கிழக்கில், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக மட்டக்களப்புப் பல்கலைக்கழகமும் அமைந்துள்ளன.

வடபகுதி மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்திலும் கிழக்கு மாணவர்கள் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்கின்ற போதிலும் சிறீலங்காவிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களைப் போலவே மேற்படி இரு பல்கலைக்கழகங்களும் பாட வசதி மற்றும் இட ஒதுக்கீடுகளுக்கு ஏற்ப மாணவர்களைப் பரிமாறிக் கொள்வதும் உண்டு.

ஆயினும் தமிழீழத் தேசியப் போராட்ட வரலாற்றில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு காத்திரமான பங்கு உண்டு. போராட்டத்தின் ஆரம்பகாலம், போராட்ட வளர்ச்சி, போராட்டத்தின் நியாயப்பாடும் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளும் சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டமை போன்ற பல்வேறு பரிணாமங்களிலும் யாழ்.பல்கலைக்கழகம் முனைப்புடனேயே செயலாற்றியது. பொங்கு தமிழ் என்ற எழுச்சிப் போராட்டம் மூலம் யாழ். பல்கலைக்கழகம் உலகின் மூலை முடுக்கெங்கும் புகுந்து கொண்டது. ஈழத் தமிழ் மக்களின் பேசு பொருளாகவும் ஆணித்தரமான குரலாகவும் விளங்கிய யாழ். பல்கலைக்கழகம் இன்று வரை சிறிதும் பிசகின்றி – நிலை தளம்பாமல் – தடுமாறாமல் தன் பணியை ஆற்றி வருகின்றது.

கடந்த 2011ம் ஆண்டு மாவீரர் தினத்தன்று, யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுதியில் உள்ள பாரிய நீர்த்தாங்கியின் மேலே ஏறி, வானளாவக் கொழுந்து விட்டு எரியக்கூடிய ஈகைச்சுடரை ஏற்றி மாணவர்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள். சந்திக்குச் சந்தி காவலரண்களும் தினமும் இராணுவ ரோந்துகளும் நடைபெறுகின்ற யாழ். மண்ணில் இவ்வாறான செயல்களைச் செய்வதற்கு அசாத்தியமான துணிவு தேவை. இந்த எவருக்கும் அஞ்சாத மிடுக்கோடு தமிழ் மக்களுக்கான பணியை இன்று வரை யாழ். பல்கலைக்கழகம் ஆற்றி வருகின்றது.

விடுதலைப் பாசறையில் வளர்கின்ற வேங்கைகளுக்கு இயல்பாகவே வீரம் பிறப்பதைப் போல யாழ். பல்கலைக்கழகத்தில் கற்கின்ற மாணவர்களுக்கும் தானாகவே வீரமும் துணிவும் பிறக்கிறது. இதனால் தான் சிங்கள இராணுவத்திற்கும் இராணுவப் புலனாய்வாளார்களுக்கும் யாழ். பல்கலைக்கழகம் சிம்ம சொப்பனமாகத் தெரிகிறது. இலங்கையிலேயே ஒரு பல்கலைக்கழகத்தைச் சுற்றி அதிகமான படையினர் காவல் நிற்கின்றனரென்றால் அது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமாகவே இருக்க முடியும்.

இந்தப் பின்னணியில், யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற மாணவர்களென்றால் சிங்களத்திற்கு சினம் வருகின்றது. கடந்த காலங்களில் இங்கு கல்வி கற்று வெளியேறிய மாணவர்களிடம் யுத்தம் முடிவடைந்த தற்போதைய காலப்பகுதியில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. முதற் கட்டமாக யாழ். பல்கலையில் கல்வி கற்ற வன்னி மாணவர்கள் மீது சிங்களத்தின் பார்வை திரும்பியிருக்கிறது.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் 2005 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி மிக முக்கியமான காலகட்டமாகும் பல்வேறு திருப்பங்களும் இன அழிப்புகளும் இடம்பெற்றது இக் காலத்திலேயேயாகும். இக் காலப் பகுதியில் யாழ். பல்கலைகயில் கல்வி கற்ற வன்னி மாணவர்கள் எதிர்காலத்தில் அரசுக்கெதிரான சக்திகளாக உருவெடுக்கலாமென்ற அச்சம் ஏற்பட்டதன் காரணமாகவே அவர்களை அச்சுறுத்தி அடக்கும் பணியை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தினால் இராணுவ புலனாய்வுத்துறை ஏவிவிடப்பட்டுள்ளது.

**இலங்கையிலேயே ஒரு பல்கலைக்கழகத்தைச் சுற்றி அதிகமான படையினர் காவல் நிற்கின்றனரென்றால் அது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமாகவே இருக்க முடியும். இந்தப் பின்னணியில், யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற மாணவர்களென்றால் சிங்களத்திற்கு சினம் வருகின்றது.**

ஏற்கனவே திரட்டப்பட்ட மேற்படி மாணவர்களின் விபரங்களுடன் யாழ்ப்பாணம், மற்றும் வன்னியில் இருக்கின்ற மாணவர்களின் வீடுகளுக்கு நேரடியாகச் செல்கின்ற இராணுவப் புலனாயவாளர்கள், குறித்த மாணவர்களை விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர்.

**படிக்கின்ற காலப் பகுதியில் எதற்காக அடிக்கடி வன்னிக்குச் சென்றீர்கள்..?**

**பல்கலைக்கழகத்தில் நீங்கள் தங்கி நின்று கல்வி கற்றபோது செலவுகளுக்கு யார் பணம் வழங்கியது..? புலிகளிடம் ஆயுதப் பயிற்சி எடுத்தீர்களா.?**

என்ற கோணத்தில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

மேற்படிக் காலப்பகுதியில் கல்வி கற்று வெளியேறிய சிலர் திருமணமாகிய நிலையில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். ஏனைய பலர் வேலையற்ற பட்டதாரிகளாக உள்ளனர். இவர்களில் திருமணம் செய்து குழந்தைகளுடன் வாழ்பவர்களை விடுத்து ஏனையவர்களிடமே விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த சில மாதங்களாக இந்த விசாரணைகள் இடம்பெற்று வருகின்ற போதிலும், இத் தகவல்களை வெளியே கூறவேண்டாமென்று இராணுவம் புனாய்வாளர்கள் தங்களை அச்சுறுத்தியதாகவும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டோர் தெரிவித்தனர். விசாரணையின் போது தமது கை, கால்கள் மற்றும் உடற்கட்டமைப்பு மற்றும் உடல் பகுதியில் காயங்கள் ஏதும் உள்ளனவா போன்றவற்றை இராணுவப் புலனாய்வாளர்கள் தீவிரமாக அவதானிப்பதாகவும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டோர் கூறுகின்றனர்.

இராணுவப் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்கள் காரணமாக இந்த விசாரணை விடயங்கள் வெளியே தெரிய வராத போதிலும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டோரும் அவர்களின் குடும்பத்தினரும் கடும் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர். வன்னியில் பெற்றோரைப் பார்க்கப் போனதும், மீண்டும் வந்து கல்வி கற்றதும், விடுமுறைகளின் போது வீட்டுக்குச் சென்றதும் தவறா என்றும் மேற்படி விசாரணைக்குட்படுத்தப்பட்ட, பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் கேள்வியெழுப்பினார்.




தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த சம நேரத்திலேயே தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்கள், தமிழ் மக்களின் கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு போன்ற துறைகளையும் கட்டி வளர்த்துக் கொண்டிருந்தார். 'கல்வியும் மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக் கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள்' என்று தெளிவாகவே அவர் எடுத்தியம்பினார்.

தலைவரின் கொள்கை வழி நடந்த புலிகள் இயக்கத்தின் அரசியல் பீடம், தமிழ் மக்களின் பாதிப்புக்களை ஓரளவேனும் குறைக்க வேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டு `தேசியத் தலைவர் நிதியம்` என்ற ஒன்றை ஆரம்பித்தது. தலைவரின் நேரடி நெறிப்படுத்தலில் இயங்கிய இந்த நிதியத்தின் ஊடாக, வறுமையில் வாடிய நிலையில் அவசர சிகிச்சைக்கு நிதி தேவைப்பட்டோர், வறுமை காரணமாக கற்றலைத் தொடர முடியாதோர், போன்றோருக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

கடந்த 2006ம் ஆண்டு இடம்பெற்ற சுனாமிப் பேரவலத்தின் போது தமிழர் தாயகப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக இதே நிதியத்திலிருந்தே தேசியத் தலைவர் 30 கோடி ருபாவை ஒதுக்கீடு செயதிருந்தார். ஈழத் தமிழர்களும் புலம்பெயர்ந்த தமிழர்களும் இதனை இலகுவில் மறந்து விட மாட்டார்கள். மறக்கவும் முடியாது.

(19ம் பக்கம் பார்க்க)

தடுத்து வைக்கப்பட்டு சுமார் ஒரு மணிநேரமே தீவிர விசாரணைக் குட்படுத்தப்பட்டதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். சிவநேசனின் இறுதிக் கிரியைக்குச் சென்றது தொடர்பிலும் யார் யார் அவருடன் சென்று அதில் பங்கு பற்றினர் என்பது குறித்தும் எந்த வாகனத்தில் அங்கு சென்றார்கள் என்பது தொடர்பிலும் விசாரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். சட்டத்தரணி என்ற வகையில் தான் அவரை அழைத்துச் சென்றதாகவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார். 2008ம் ஆண்டின் பங்குனி 6ம் திகதி கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்திருந் சிவநேசன் அவர்களது, இறுதி நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவர், விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தளபதிகள் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சாதனை படைக்கமுயன்ற சிப்பாய் பலி

கின்னஸ் சாதனை முயற்சியில் இறங்கிய சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். கந்தளாய் பிரதேசம் ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மரணமான சிப்பாய் அப்பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதான ஊர்க்காவல் படையினன் எனத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சிப்பாய் ஆறு அடி ஆழமான குழி ஒன்றில் இறங்கி தன்னை முற்றாக மண்ணால் மூடிய நிலையில் அதன் மேல் தீ மூட்டிய நிலையில் உள்ளிருந்தபோதே இந்த மரணம் சம்பவித்துள்ளது.சுமார் ஐந்து ம்ணித்தியாலங்களின் பின்னர் குழியைத் தோண்டிப் பார்த்த போது அவர் உயிரிழந்திருந்தது தெரியவந்தது.

### 52 நாட்களில் 86 இலங்கையர் வெளிநாடுகளில் மரணம்

இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் பெப்ரவரி 21ம் திகதி வரையான காலப் பகுதிக்குள் மாத்திரம் 86 இலங்கையர்கள் வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளனரென சிறீலங்கா வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். வழமையிலும் பார்க்க இவ்வருடம் முதல் இரண்டு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்பாகவே வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் மரணவீதம் பாரிய அதிகரிப்பை எட்டியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். சாதாரணமாக வருடத்திற்கு 60 தொடக்கம் 65 வரையான இலங்கையர்களே வெளிநாடுகளில் உயிரிழப்பது வழமை. ஆனால் கடந்த 52 நாட்களுக்குள் 86 இலங்கையர்களின் மரண வீதம் பாரிய அதிகரிப்பைக் காட்டுவதாகவும் அவர் கூறினார். மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள இலங்கையர்களே அதிகளவில் உயிரிழந்துள்ளனர். இவர்கள் விபத்து, சுகயீனம் மற்றும் தற்கொலை ஆகிய காரணங்களினாலேயே கூடுதலாக மரணமடைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### கடற்படைப் புலனாய்வாளரின் தாக்குதலால் குடும்பஸ்தர் படுகாயம்

யாழ் தீவகத்தில் குடும்பஸ்தர் ஒருவர், சிறீலங்காக் கடற்படைப் புலனாய்வாளர் எனக் கூறப்படும் ஒருவரால் சரமாரியாக தாக்கப்பட்டு கடந்த 2ம் திகதி யாழ். போதன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனலைதீவு 7ம் வட்டாரத்தில் வசிக்கும் குடும்பஸ்தர் தனது உறவினர் ஒருவருடன் தகராறில் ஈடுபட்டு வந்த சமயம் அந்தப் பகுதியால் சென்ற கடற்படைப் புலனாய்வாளர், தகராறில் தலையிட்டு தாக்கியுள்ளார். அதன்போது, 'இது எமது குடும்பப் பிரச்சினை இதில் நீங்கள் தலையிட வேண்டாம்.' என குறித்த குடும்பஸ்தர் புலனாய்வாளர் எனக் கூறப்படுபவரைத் தடுத்துள்ளார். உடன் அவ்விடத்தை விட்டு அகன்ற புலனாய்வாளர், பின்னர் கடற்படை அதிகாரி ஒருவருடன் வந்து குறித்த குடும்பஸ்தரிடம் முரண்பட்டுள்ளார். அதன் போது குடும்பஸ்தர், எமது குடும்பப் பிரச்சனையில் தலையிடுவதற்கு நீங்கள் யார்? பிரச்சனைகளில் தலையிட காவற்துறையினர் இருக்கின்றார்கள்.' என்று கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த கடற்படைப் புலனாய்வாளர், குடும்பஸ்தரை மிதிவண்டிக்கு காற்றடிக்கும் கருவியால் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளார். கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகிப் படுகாயமடைந்த குடும்பஸ்தர், யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ் குடாநாட்டில் அண்மைக் காலங்களாக இராணுவத்தினர் பொதுமக்களின் தனிப்பட்ட குடும்ப விடயங்களில் தலையிடுவதும் அதனைப் பயன்படுத்தி தமக்கு எதிரானவர்களைத் தாக்குவதாகவும் குற்றம்சாட்டப்பட்டு வருகின்றது.

### மன்னாரில் திருடப்படும் தமிழர் வளங்கள்!

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட சன்னார் கிராமத்தில் உள்ள வெற்றுக் காணிகளில் உள்ள விலை உயர்ந்த மரங்கள் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்டு தென்பகுதிக்கு கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. சன்னார் கிராமத்தில் தமிழ் மக்கள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பகுதிக்கு பின்புரம் உள்ள காணியில் விலை உயர்ந்த காட்டு மரங்கள் காணப்படுகின்றன. குறித்த மரங்களை தனிப்பட்ட சிலர் சில அதிகாரிகளின் ஆதரவுடன் கனரக வாகனங்கள் மூலம் வெட்டி துப்பரவு செய்து வருகின்றனர். வெட்டப்படுகின்ற மரங்கள் வாகனங்களில் ஏற்றப்பட்டு சிறீலங்காவின் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றது.

# தொடர்கின்றது சிங்களத்தின் கொலைவெறி!




– கந்தரதன்

ஜெனிவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வுகளில் சிறீலங்காவிற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற தமிழ் மக்கள் குரல் எழுப்பிக் கொண்டிருந்த வேளையிலும் சிங்களக் கொடுங்கோல் இராணுவத்தினர் தமிழ் மக்களை சீண்டிச் சின்னாபின்னமாக்கி சூறையாடும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்ட நிலைமை வர்ணிக்கமுடியாத கொடுமை.

நெடுந்தீவு 10ம் வட்டாரத்தில் பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. நெடுந்தீவு 6ம் வட்டாரத்தைச் சேர்ந்த லக்சனா வயது 13 என்ற குறித்த மாணவி கடந்த 3ம் திகதி சனிக்கிழமை காலை கடைக்குச் சென்றபின்னர் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாத நிலையில் குறித்த சிறுமி நெடுந்தீவு 10ம் வட்டாரத்தில் கைவிடப்பட்ட வளவு ஒன்றில் தலையில் பலமாக அடித்து படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் இவரது சடலத்திற்கு அருகில் வெற்று மதுப் போத்தல்களும் சிறுமியின் உள்ளாடைகள் கிழித்தெறியப்பட்ட நிலையிலும் காணப்பட்டுள்ளன. இராணுவத்தினரும் ஒட்டுக் குழுக்களும் நெருக்கமாக வாழும் நிலையில் இராணுவத்தினரே இந்த கொடுஞ்செயலைப் புரிந்துள்ளதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து நெடுந்தீவு மக்கள் கடும் அச்சத்தின் மத்தியில் காணப்படுவது அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், கிளிநொச்சியில் 16 வயது மாணவி மீது பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட படைச் சிப்பாய் மீது காவல்துறையினர் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று பெற்றோர் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி நகரில் கடமையாற்றும் சிப்பாய் ஒருவர் 16 வயதான மாணவி ஒருவரை காதலிப்பதாக கூறி அவரை மதவாச்சிக்கு அழைத்துச் சென்று அங்கு நிராதரவாக கைவிட்டுச் சென்றுள்ளார்.

பின்னர் காவல்துறையினர் குறித்த மாணவியை மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்தனர். 16 வயதுக்குட்பட்ட பெண்களை அவர்களது சம்மதத்துடன் திருமணம் செய்தாலும் கூட அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது வழமை. எனினும் இந்தச் சிப்பாய் மீது காவல்துறையினர் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருப்பது குறித்து பெற்றோர் குழப்பமடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவர் வெள்ளை வானில் கடத்தப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த 27ம் திகதி திங்கட்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி உதயபுரம் கிழக்கைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான முத்தையா சுப்பிரமணியம் (வயது 60) என்னும் நபரே கடத்தப்பட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரிவில் பணியாற்றிய மேற்படிக் குடும்பஸ்தர், இறுதி யுத்தத்தின் பின்னர் இரகசிய தடுப்பு முகாங்களில் வைந்திருக்கப்பட்டு பின்னர், 2010ம் ஆண்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.

கடத்தல் சம்பவம் நடைபெற்ற தினத்தில் இரவு 9 மணியளவில் வெள்ளைநிற வாகனத்தில் மேற்படிக் குடும்பஸ்தரின் வீட்டிற்கு முன்னால் வந்திறங்கிய இனம் தெரியாத குழுவினர், விலாசம் விசாரிப்பது போல் அக் குடும்பஸ்தரை வீட்டிற்கு வெளியே அழைத்துச் சென்று வீட்டு வாசலில் வைத்து கடத்திச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக அவரது குடும்பத்தினரால் வவுனியா மனித உரிமைகள் அலுவலகத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வாறான பல கடத்தல்கள், காணாமல் போதல்கள், பாலியல் வன்கொடுமைகள் நாளாந்தம் தமிழர் தாயகப் பகுதியில் சிங்களத்தினால் நாளும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. இவற்றில் பல உயிராபத்துகள் கருதி அச்சத்தில் மூடி மறைக்கப்பட்டுவருகின்றன.

இதனைச் சர்வதேசம் கவனத்தில் எடுக்கவேண்டியது மிகமிக அவசியமானது. இலங்கையில் எல்லாம் முடிந்துவிட்டது என்று தமிழர்களுக்கு வதிவிட உரிமை மறுக்கும் நாடுகளே, உரிமை மறுத்து தமிழர்களை நாடுகடத்திவரும் நாடுகளே இலங்கையில் இன்றும் தமிழர்கள் மீது அரங்கேறிவரும் கொடுமைகள் உங்கள் கண்களுக்கும் காதுகளுக்கும் எட்டவில்லையா ?

உரியவர்களே விடை உங்களின் மனங்களில் தான். உலகெங்கும் வாழ் தமிழ் மக்களே நாம் சிந்திக்கும் நேரமல்ல இது ஒன்றுபட்டு செயற்படவேண்டிய நேரம்!

*(சூறையாடல்கள் தொடரும்)*

## இலங்கையில் அமெரிக்க...

பங்குபற்றியுள்ளனர் எனவும் அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் மட்டுமே தனது நேரடி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுவந்த அமெரிக்கா, தற்போது தெற்காசியாவிலும் அதனை ஆரம்பித்துள்ளது இதன்மூலம் அம்பலமாகியுள்ளதாக குற்றம்சாட்டப்படுகின்றது.

இதுஇவ்வாறிருக்க, இந்து சமுத்திரத்தை அண்டிய நாடுகள் பங்கேற்கும் இந்து சமுத்திர கடற்படை மாநாடு கொழும்பு கலதாரி விடுதியில் கடந்த வாரம் இரண்டு நாட்கள் நடைபெற்றன. இம் மாநாட்டில் 14 நாடுகளைச் சேர்ந்த 60ற்கும் மேற்பட்ட கடற்படை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். செயற்பாட்டுத் திறன் தொடர்பாக தகவல் பரிமாற்றம் மற்றும் கூட்டிணைப்பை மேம்படுத்தல் என்ற தொனிப் பொருளில் ஆரம்பமாகிய இம் மாநாட்டை சிறீலங்கா கடற்படையின் நடவடிக்கை பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் ஜயந்த பெரேரா உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்திருந்தார்.

இம் மாநாட்டில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், இந்தோனேசியா, கென்யா குவைட், ஓமான், சவூதி அரேபியா, தென் ஆபிரிக்கா, தன்ஸானியா, தாய்லாந்து மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளின் கடற்படை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழமுதம்
Satellite: Hotbird
Frequency: 12597
Polarisation: Vertical
Symbol Rate: 27500
தமிழமுதம் வானொலி
இது ஓர் உலக தமிழோசை
THAMIZHAMUTHAM RADIO - On iPhone
Available on
SHOUTcast

Eelamurazuleaks

# சேரமான்

## தந்திரிகளின் மறுமுகம் - 44

**சேரமானின் இந்தத் தொடர் கட்டுரைக்கு இதில் பெயர்குறிப்பிடப்பட்ட சம்பந்தப்பட்டவர்கள் மறுப்புத் தெரிவித்து தங்களது மறுப்பை எழுத்துமூலமாகத் தருவார்களானால் அதனைப் பிரசுரிப்பதற்கும் நாம் தயாராகவே உள்ளோம்.**

**[ஆ-ர்]**

# சுவாமியின் சீடன்

**போர்நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்கும், இதுவிடயத்தில் இந்தியாவினதும், அமெரிக்காவினதும் ஆதரவைப் பெறுவதற்கும் தேவையான அரசியல் முன்னெடுப்புக்களை சுவாமியின் அனுசரணையுடன் மேற்கொள்வது சாதகமானது என்றும், இதற்கு முன்னோடியாக சுவாமியுடன் தேசியத் தலைவர் அவர்கள் உரையாடுவது நற்பயனை ஈட்டிக்கொடுக்கும் என்ற தொனியிலுமே கே.பியின் ஆலோசகரின் கடிதம் எழுதப்பட்டிருந்தது.**

2008ஆம் ஆண்டின் இறுதி நாட்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியுறவுத் தொடர்பாளராக கே.பி நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரை மையப்படுத்தி உருத்திரகுமாரனை உள்ளடக்கிய குழுவொன்று உருவகம் பெற்றமை பற்றி எமது கடந்த தொடரில் பார்த்திருந்தோம்.

நிரந்தர போர்நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்கான அரசியல் முன்னெடுப்புக்களை மேற்கொள்வதை விட தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பான மேற்குலகின் அணுகுமுறை பற்றிய போலி நம்பிக்கைகளை வன்னியில் விதைப்பதும், ஆயுதக் களைவின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளை சரணாகதி நிலைக்கு இட்டுச்செல்வதுமே இக்குழுவின் முக்கிய நோக்கமாக இருந்தது எனக்கூறலாம்.

இவர்களில் உருத்திரகுமாரன் போன்றோர் நேரடியாக டில்லியின் கையாட்களாகவும் (ஈ.என்.டி.எல்.எவ் பரந்தன் ராஜன், சந்திரகாசன், எம்.கே.நாராயணன் போன்றோரின் தொடர்புகள் வழியாக), அவரது உதவியாளரான வழுதி போன்றோர் வல்லரசுப் புலனாய்வு நிறுவனம் ஒன்றின் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவோராகவும் விளங்கியமை பற்றி ஏற்கனவே எமது கடந்த தொடர்களில் வெளிக்கொணர்ந்திருந்தோம். இவற்றைவிட தாய்லாந்திலும், அதன் பின்னர் மலேசியாவிலும் கே.பி தங்கியிருந்த பொழுது அவரது இருப்பிற்கான உத்தரவாதத்தை வல்லரசுப் புலனாய்வு நிறுவனம் ஒன்றின் முகவர்களே அளித்திருந்தனர். இந்த வகையில் இராசதந்திரத்தின் பெயரில் புகலிட தேசங்களில் மிகவும் கச்சிதமாக இக்குழுவினர் அரங்கேற்றிய பொம்மலாட்டத்திற்கான கயிறு டில்லியிடம் மட்டும் இருக்கவில்லை எனக்கூறின் மிகையில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே கே.பியின் ஆலோசகராக விளங்கியவரும், உருத்திரகுமாரனின் நெருங்கிய நண்பருமான பாஸ்கரன் என்பரால் 06.01.2009 அன்று ஒஸ்லோவிலிருந்து வன்னிக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. குருஜீ அல்லது பூஜ்ய சிறீசிறீ என்றழைக்கப்படும் சுவாமி சிறீசிறீ ரவிசங்கர் அவர்களுடன் 05.01.2009 அன்று நடைபெற்ற சந்திப்பின் பெறுபேறுகளை உள்ளடக்கியே இக்கடிதம் அமைந்திருந்தது. இச்சந்திப்பில் உருத்திரகுமாரனின் 'மதியுரைஞராக' விளங்குபவரும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பொழுது உருவாக்கப்பட்ட சிரான் உப குழுவின் பணிப்பாளராக விளங்கியவருமான இரேணியஸ் செல்வின் அவர்களும் கலந்து கொண்டிருந்தார்.

செய்கோள் தொலைபேசி வழியாக அல்லது 'ஸ்கைப்' இணைப்பு வாயிலாக தமிழீழ தேசியத் தலைவருடன் உரையாடுவதற்கு 07.11.2008 அன்று ஊடகவியலாளர் வித்தியாதரன் ஊடாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களுக்கு சுவாமி சிறீசிறீ ரவிசங்கர் அவர்கள் அனுப்பிய செய்தி குறித்தும், பாதுகாப்புக் காரணங்களுக்கான அதனை தேசியத் தலைவர் அவர்கள் தவிர்த்துக் கொண்டமை பற்றியும் எமது 2ஆம், 3ஆம் தொடர்களில் நாம் வெளிக்கொணர்ந்தமை வாசர்களுக்கு நினைவில் இருக்கக்கூடும். இதற்கு முன்னர் 2006ஆம் ஆண்டு கிளிநொச்சிக்கு சுவாமி அவர்கள் பயணம் செய்து தமிழீழ தேசியத் தலைவரை சந்திப்பதற்கு முற்பட்ட பொழுதும் அது கைகூடவில்லை. சுவாமியுடன் உரையாடுவதை தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் தவிர்த்திருந்தாலும், அவருடனான தொடர்பை தமிழீழ விடுதலைப் புலிகள் முறித்துக் கொள்ளவில்லை. இந்தியாவில் செல்வாக்கு மிக்க ஓர் ஆன்மீகத் தலைவர் என்ற வகையில் சுவாமியுடன் பா.நடேசன் அவர்களும், சீ.புலித்தேவன் அவர்களும் தொலைபேசித் தொடர்புகளைப் பேணிவந்தனர்.

இந்நிலையில் போர்நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்கும், இதுவிடயத்தில் இந்தியாவினதும், அமெரிக்காவினதும் ஆதரவைப் பெறுவதற்கும் தேவையான அரசியல் முன்னெடுப்புக்களை சுவாமியின் அனுசரணையுடன் மேற்கொள்வது சாதகமானது என்றும், இதற்கு முன்னோடியாக சுவாமியுடன் தேசியத் தலைவர் அவர்கள் உரையாடுவது நற்பயனை ஈட்டிக்கொடுக்கும் என்ற தொனியிலுமே கே.பியின் ஆலோசகரின் கடிதம் எழுதப்பட்டிருந்தது. அமெரிக்க துணை அதிபர் டிக் செய்னி அவர்களின் 'ஆன்மீக குரு' என்ற வகையிலும், இந்திய எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே. அத்வானிக்கு 'நெருக்கமானவர்' என்ற விதத்திலும், சுவாமி நினைத்தால் எதனையும் சாதிக்க முடியும் என்பதும் கே.பியின் ஆலோசகரின் கடிதத்தின் மற்றுமொரு சாராம்சமாக அமைந்திருந்தது.

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அக்கடிதத்தின் தமிழ்வடிவம் பின்வருமாறு:

**"பண்டித் ரவிசங்கர் அவர்களுடன் 05.1.2009 அன்று ஒஸ்லோவில் நடைபெற்ற சந்திப்பு**

கிளிநொச்சி வீழ்ச்சியடைந்ததையிட்டு தனது ஆழ்ந்த கவலையை சுவாமிஜி தெரிவித்தார்.

போர்நிறுத்தம் பற்றி எரிக் சுல்கைம், ஜோன் ஹன்சன் போவர் ஆகியோருடனும், ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள தனது தொடர்புகளுடனும் சுவாமிஜி உரையாடியுள்ளார். தேவைப்பட்டால் அமெரிக்க துணை அதிபருடனும் அவரால் உரையாட முடியும். அமெரிக்க துணை அதிபர் சுவாமிஜியின் சீடர்.

ஆனால் துர்ப்பாக்கியவசமாக 'கிளிநொச்சியில் (வன்னியில்) முடிவுகளை எடுக்கக்கூடியவர்களுடன் சுவாமிஜிக்கு தொடர்பு இருக்கின்றதா? எந்த வகையில் அதிகார பூர்வமாக அவர்களுடன் சுவாமிஜியால் உரையாட முடியும்?' என்று அவரிடம் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து கேட்கப்பட்டுள்ளது. அது சுவாமிஜிக்கு பாதகமாக உள்ளது. அவர் முன்னர் கிளிநொச்சிக்கு சென்றிருந்தாலும் முக்கியமான ஆட்களை அவரால் சந்திக்க முடியவில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை அதன் இப்போதைய அரசாங்கம் எங்களுக்கு உதவி புரியப் போவதில்லை. அடுத்த தேர்தலில் பிரதமராகும் வாய்ப்பைப் பெற்றுள்ள பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த அத்வானியுடன் சுவாமிஜி உரையாடியுள்ளார். அத்வானி எமக்கு நிச்சயம் உதவி செய்வார். ஏற்கனவே மத்திய அரசில் – றோ உட்பட – எமக்கு சாதகமான மாற்றங்கள் தென்படுகின்றன. சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளால் இந்தியாவிற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை காங்கிரஸ் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறினாலும்கூட, சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றின் திசையில் சிறீலங்கா சாய்வதை தவிர்ப்பதற்கு அதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதே பொருத்தமான முடிவு என்று அவர்கள் கருகின்றார்கள்.


கடந்த காலத்தில் நாம் செய்த இராசதந்திர முயற்சிகளையிட்டு தனது அதிருப்தியை சுவாமிஜி தெரிவித்தார். ஆட்சி மாற்றம் ஏற்படும் வரை நாங்கள் காலத்தைக் கடத்த வேண்டும் என்று அவர் கருதுகின்றார். இதை சிறீலங்கா அரசாங்கம் நன்கு புரிந்து கொண்டிருப்பதன் காரணமாகவே இந்தியாவிலும், அமெரிக்காவிலும் மாற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னர் முழு வளத்தையும் பயன்படுத்தி யுத்தத்தில் வெற்றியீட்ட முற்படுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் இந்தியாவின் முக்கியத்துவம் பற்றியும், இந்தியாவுடன் – குறிப்பாக தமிழ்நாட்டுடன் – எமக்கு உள்ள வரலாற்று, மொழி, பண்பாட்டுத் தொடர்புகள் பற்றியும், தற்போது தமிழ்நாட்டு மக்களிடம் ஏற்பட்டுள்ள எழுச்சி குறித்தும் நாங்கள் வலியுறுத்திக் கூறினோம். இலங்கைப் பிரச்சினை பற்றி வரும் பொழுது இந்தியாவின் சொற்படியே உலகின் வல்லரசு நாடுகள் நடந்து கொள்ளும். இந்தியாவை மீறி அவர்கள் செயற்படப் போவதில்லை.

கிளிநொச்சியில் (வன்னியில்) அதிகாரமுடைய ஒருவருடனோ அல்லது வெளிநாட்டில் அதே அதிகாரத்தைக் கொண்டவருடனோ நேரடித் தொடர்பைப் பேணுவதற்கு சுவாமிஜி விரும்புகின்றார்.

போர்நிறுத்தத்திற்கான அவசர தேவை பற்றி நாம் சுவாமிஜிக்கு எடுத்துக்கூறியதோடு, காங்கிரஸ் கட்சியின் ஊடாக அல்லது இந்திய அரசாங்கத்தின் உயர்பீடத் தொடர்புகள் வழியாக இதற்கான முயற்சிகளை எடுக்குமாறும் கோரியுள்ளோம்.

தான் இந்தியாவிற்கு திரும்பியதும் இதற்கு தேவையான



இயலுமான முயற்சிகளை டில்லியில் எடுப்பதாக சுவாமிஜி உறுதியளித்துள்ளார்."

இக்கடிதத்தை நாம் உற்றுநோக்கும் பொழுது, ஏற்கனவே சுவாமியுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தைச் சேர்ந்த முடிவெடுக்கும் அதிகாரமுடைய ஒருவரான பா.நடேசன் அவர்கள் தொடர்புகளைப் பேணி வந்த நிலையில், அவருக்கு அப்பால் சென்று தமிழீழ தேசியத் தலைவருடன் சுவாமியை உரையாட வைப்பதும், அடுத்தபடியாக தேசியத் தலைவருக்கு நிகரான அதிகாரமுடைய ஒருவராக கே.பியை முன்னிறுத்துவதுமே இதன் சாராம்சமாக அமைந்தது கண்கூடாகும்.

மறுபுறம் இக்கடிதத்தை நாம் மறுவாசிப்பிற்கு உட்படுத்தினால், இந்தியாவில் எல்.கே.அத்வானியின் தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அமெரிக்காவில் ஒபாமாவின் புதிய அரசாங்கம் பலம்பெறும் வரை தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தைக் கடத்த வேண்டும் என்றும், அதன் பின்னர் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு சாதகமான உலகச் சூழல் ஏற்படும் என்ற போலி நம்பிக்கையையும் இக்கடிதம் உள்ளடக்கியிருந்தது.

இவ்வாறு போலி நம்பிக்கைகளை விதைக்கும் கடிதத்தை வன்னிக்கு கே.பியின் ஆலோசகர் அனுப்பி வைத்த இரண்டு நாட்களில், கே.பி – உருத்திரகுமாரன் குழுவினரின் பொம்மலாட்டத்தை தோலுரித்துக் காட்டும் தகவல் ஒன்று வன்னியை சென்றடைந்தது. இதில் உருத்திரகுமாரனின் சுயரூபத்தை வெளிப்படுத்தும் புகைப்படம் ஒன்றும் உள்ளடங்கியிருந்தது.

*(தொடரும்)*

## DANS LA COUR DU JUGE RÉGIONAL PRINCIPAL HONORABLE À PONDICHERRY, L'INDE

VALIDATION o.p. No 3 2012

P.Chellappa .................. Petitioner

VS

1.JOSEPH Anne arokiamary
2.JOSEPH Christian
3.JOSEPH Marie Antoinette ............Défendeurs(Personnes interrogées)

**Remarquez défendeurs(personnes interrogées) No 1 à 3**
Tous les défendeurs(les personnes interrogées) sont résidents à No: 90 , rue de Saint Theresa, pondicherry

**Remarquez comme contre les défendeurs(les personnes interrogées)**

Faites s'il vous plaît attention que le pétitionnaire a classé(déposé) le susdit cas(caisse) dit comme contre les défendeurs(les personnes interrogées) à la validation les dates(rendez-vous) de VOLONTÉ 09.03.2011 dûment exé cutées par le testateur tard .Joseph Nithayanantham susainathan S/o Durairaj et des stands(positions) postés(affichés) 09.03.2012 Pour service d'avis comme contre les défendeurs(les personnes interrogées) en ceci. Si les déf endeurs(si les personnes interrogées) ont non l'objection ils peuv ent appar aître en personne ou par le défenseur peut augmenter(lever) importer quelle objection avant la susdite cour 09.03.2012 à environ 10.00 du matin, laissant tomber quelle la matière(question) sera choisie finalement des mérites en faveur du petitioner

(S.S PAJANIRADJA)
ADVOCATE & NOTARY,
PONDICHERRY, INDIA



(M° : Gare du Nord La Chapelle)
10 வது வருடத்தில்
குணா ரெயிலர்ஸ்
ஸ்தாபனத்தாரின் சிறப்புச்சலுகை
2 சாறி பிளவுஸ் தைப்பவர்களுக்கு 3 வது சாறி பிளவுஸ் இலவசம்!
8 rue Cail 75010 Paris Tél: 01 42 05 03 95

பாரிஸ் அறிவாலயம்
Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34

BEST SEA FOOD
(S.A.R.L - SANTHOSH - Import Export)
17 Rue Perdonnet, 75010 PARIS Tel : 01 44 65 34 18
Gare du Nord - La Chapelle 06 46 84 23 69


லக்கி ஸ்டார் சலூன்
LUCKY STAR SALOON
23, Avenue P.V.Couturier
93120 La Courneuve
07 51 42 04 72

Sport சாரதி பயிற்சி நிலையம்
Sport Auto Ecole - 4, rue de Jules Ferry, 95400 Villiers Le Bel
Tél.: 01.39.94.10.28 / 06.13.38.85.50

CENTRE DE BEAUTE INDIEN

தமிழர்களால் நடத்தப்படும்
ஆண்கள் அழகு நிலையம்
தொடர்புகளுக்கு: பாலன்
33, rue Philippe de Girard
75010 Paris, M° : La Chapelle.
Tél.: 06 63 01 75 80

KABISHA IMMOBILIER
வீடு வாங்குதல், விற்றல், வாடகை, மற்றும் கடன் வசதிகளும்
பொ. கண்ணதாசன்
அலுவலக நிர்வாகி
122, Avenue du Maréchal Leclerc - 93330 Neuilly sur Marne
Tél.: 01 43 81 99 46 - Fax: 09 70 62 70 36
email: kannathasan-kabishaimmobilier@hotmail.fr
www.kabishaimmobilier.com
FNAIM

DRANCY மக்களின் நன்மதிப்பைப்பெற்ற சிகையலங்கார நிலையம்
M.G.A COIFFURE
முடிவெட்டு 7€
20 rue Roger Salengro, 93700 Drancy
திரெஞ்சி பப்பிளிக்கு முன்னால்
Bus : 146/148 Arrêt : Georges Ducerf
Tel : 06 66 66 06 13


NSV CASH & CARRY
ALIMENTATION GENERALE
N.S.V. பல் பொருள் வாணிபம்
TEL /FAX : 01 48 60 96 45
10 Ave. Henri Barbusse 93150 Le Blanc Mesnil

Noisiel, Torcy, Lognes, Noisy Champs வாழ் மக்களுக்காக....
Nila Cash & Carry
8, Allée Boris Vian - 77186 Noisiel
Tél: 09 51 89 69 80
இலங்கை, இந்திய, ஆபிரிக்க மற்றும் ஆசிய மளிகைப்பொருட்கள், மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், தொலைபேசி அட்டைகள்
Noisiel RERக்கு முன்பாக,
Mairie Annexe du Luzard, Police Municipale, Hotel Hipotel Marne la vallée,
பாடசாலைகள், சந்தை ஆகியவற்றுக்கு அருகில்


தாயகத்தில் இருந்து இளங்கீரன்

# காத்திருக்கும் மக்களும் காலைவாரிய சம்பந்தரும்

**2009ம் ஆண்டு விடுதலைப் புலிகளுடனான ஆயுதப்போராட்டம் முடிந்துவிட்டது, தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் என்று சிறிலங்காவினால் அறிவிக்கப்பட்டபோது இதே சம்பந்தர் மேசையில் ஒரு அடிஅடித்து மகிழ்ந்து கொண்டார். இதற்குச் சாட்சிகளும் உண்டு.**

சுதந்திரத்திற்காக சுமார் 400 வருடங்கள் அளப்பரிய உயர்க்கொடைகளை ஈந்து, தங்கள் தாயக விடுதலைக்காக போராடிய பல இனங்களை உலக வரலாற்றுப் பக்கங்களில் நாங்கள் பார்த்திருக்கின்றோம். ஆனால் அங்கெல்லாம் கொள்கைகளும், சுதந்திரத்தேடலும் உண்மையானதாக, உளப்பூர்வமானதாக இருந்தது. அது மிதவாதக் தலைமைகளாக இருக்கட்டு, ஆயுத வழியிலான தலைமைகளாக இருக்கட்டும். அதனால்தான் அந்த இனங்கள் ஈற்றில் வெற்றி பெற்றிருக்கின்றன. உலக வரலாற்றில் சுதந்திரத்திற்காகப் போராடும் ஏனைய இனங்களுக்கு முன்னுதாரணமாகவும் அமைந்து விட்டிருக்கின்றார்கள்.

இனம் சர்வதேசத்தின் ஆதரவு இல்லாமல் போராட முடியாது. அதனை நியாப்படுத்த அரசியல் ரீதியான அமைப்புக்கள் இருக்கவேண்டும் என்பதனாலேயே, கூட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் விடுதலைப் புலிகளும் ஒரு தவறிழைத்திருக்கின்றார்கள் என்றே நான் கருதுகிறேன். அடிப்படையில் துரோகிகள் யார்? எதிரிகள் யார்? என்பதை கூட்டமைப்பு விடயத்தில் அவர்கள் தீர்மானித்திருக்கவில்லை என்றே நாம் கருதுகின்றோம்.

இலங்கையிலும், வடக்கு, கிழக்கு நிலத்தை அடிப்படையாகக் கொண்டு, கடந்த 60 வருடங்களாக தமிழ்த் தேசம் தனது சுதந்திரப் போராட்டத்தை நடத்தியிருக்கின்றது. இன்றும் அது நடந்து கொண்டிருக்கின்றது, நாளையும் நடக்கும் என்பதில் எமக்குச் சந்தேகம் கிடையாது. ஆனால் கடந்தகால வரலாற்று படிப்பனைகளின்படி எமது ஜனநாயக வழி போராட்டத் தலைமைகள் எப்போதும், கொள்கைதவறியவர்களாகவும், மக்களை மதிக்காதவர்களாகவும் இருந்ததாகவே நான் கருதிகிறேன். அதனாலேயே எம் தலைவர் பிரபாகரன் ஆயுதங்களைச் சுமக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்.

ஆனால் அந்த வழி வெற்றிகரமானதாகவும், சாத்தியப்பாடுடையதாகவும் நகர்ந்து கொண்டிருந்தபோது, காட்டிக் கொடுப்பாளர்களால் அது சிதைக்கப்பட்டது. இதில் முக்கிய பாகம் இன்றைய தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும் இருக்கின்றது என்று உண்மை எல்லோருக்கும் தெரியும். 2009ம் ஆண்டு விடுதலைப் புலிகளுடனான ஆயுதப்போராட்டம், முடிந்துவிட்டது, தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் என்ற சிறீலங்காவினால் அறிவிக்கப்பட்டபோது இதே சம்பந்தர் மேசையில் ஒரு அடிஅடித்து மகிழ்ந்து கொண்டார். இதற்குச் சாட்சிகளும் உண்டு.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் தந்தை செல்வநாயகம், தனிநாட்டுக் கொள்கையை முன்வைத்த பின்னர் திருகோணமலை சென்று இன்றைய சம்பந்தர் வீட்டில் தங்கியபோது, 'நாங்கள் ஏதும் அவசரப்பட்டுவிட்டோமோ என்று எண்ணத்தோன்றுகின்றது' என தனிநாட்டுக் கொள்ளை தவறு என்ற தொனியில் சம்பந்தர் செல்வநாயகத்திடம் கேட்டாராம். இதே சம்பந்தர்தான், அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில், அமிர்தலிங்கத்திற்கு இந்திராகாந்தி தனிநாட்டுக் கொள்கைக்கு தாம் உதவமுடியாது என தெரிவித்திருந்ததாக பேசினார்.

உண்மை இங்கேதானிருக்கின்றது. இவர்கள் தங்கள் அரசியல் இருப்பிற்காக, அன்று இந்திராகாந்தி சொன்னதை கேட்டுக்கொண்டு வந்தார்கள். இவர்கள் நினைத்திருந்தால் ஆயுதப் போராட்டத்தை நியாப்படுத்தியிருக்க முடியும். ஜனநாயக வழியிலான போராட்டம் முற்றாக சிதைக்கப்பட்டிருந்தது, முற்றாக தோற்கடிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தமிழர்களுக்கு வேறு வழிகிடையாது. இதை நாம் நிறுத்தவேண்டுமானால், உடனடியாக எமது மக்கள் விரும்பும் தீர்வொன்றினை பெற்றுக்கொடுங்கள், அதன் பின்னர் நாம் நிறுத்துகின்றோம். என்ற தமது நிலைப்பாட்டை தெரிவித்திருக்கவேண்டும்.

ஆனால் அவ்வாறான ஒன்றை கேட்பதற்கு இவர்களும் தயாரில்லை, கொடுப்பதற்கு இந்தியாவும் தயாரில்லை. ஆனால் இன்று அழிவுகளுக்கும், அவலங்களுக்கும் அப்பால் வந்து வெறுமைகளோடு நிற்கும் எமது மக்களிடம் வந்து வரலாற்றில் மீண்டும் ஒரு தரம் நினைக்கப்படக்கூடாதவர்கள் என நாம் நினைக்கின்றவர்களை, அவர்களது சித்தாந்தங்களை சம்பந்தர் புகுத்தப்பார்க்கிறார். ஆனால் எங்கள் சிந்தனைகளில் வெறுமையில்லை, யாரும் அளவிடமுடியாதளவில், அர்ப்பணிப்பும் சுதந்திர எண்ணமும் எங்களுக்குள் இருக்கின்றது.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் ஆரம்பத்தில் எது நடந்ததோ, அதுவே ஈற்றிலும் நடந்தது. நீண்டகாலம் ஒரு



காரணம் கூட்டமைபிலிருந்தவர்களின் கடந்தகாலம் விடுதலைப் புலிகளுக்குத் தெரியும்.

இதே சம்பந்தர் குண்டுதுளைக்காத காரில் பயணித்த வரலாறு புலிகள் நன்கறிந்ததே, இதே சம்பந்தர் சந்திரிகா அரசாங்கத்திற்கு விடுதலைப் புலிகளைப் பற்றிப்போட்டுக் கொடுத்ததை பொட்டம்மான் அறியாமலும் இல்லை. இந்த நிலையில் அடிப்படையிலேயே தன் இனத்தின் மீது பற்றற்ற சம்பந்தரை கூட்டமைப்பிற்குள் ஈர்த்துக் கொண்டது ஏன் என்ற கேள்வி பெரும் புதிராகவேயிருக்கின்றது. இந்த சம்பந்தர் விடுதலைப் புலிகளுக்கு ஒரு முகத்தையும், அரசாங்கத்திற்கும் மற்றொரு முகத்தையும் காட்டிக் கொண்ட போதாவது இவர்களை மக்களுக்கு முகமூடி கழற்றி அடையாளம் காட்டியிருக்கவேண்டும்.

கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் அதிலிருந்த ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமே விடுதலைப் போராட்டத்தை நியாப்படுத்தினார்கள். ஆனால் அவர்களும் இந்த மண்ணில் மடிந்து மாமனிதர்களாகிப் போனார்கள். இந்த நிலையில் இவர்கள் மட்டும் எப்போதுமே எதைப் பற்றியுமே கதைப்பது கிடையாது. அதனால் இன்றும் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்போதும் அதுதான் நடந்திருக்கின்றது. ஜெனீவாவில் இடம்பெறும் மனிதவுரிமைகள் அமர்வில் கூட்டமைப்பு கலந்து கொள்ளவில்லை. அந்த அறிவிப்பை 25ம் திகதி மாலையே சம்பந்தர் வெளியிட்டுவிட்டார்.

சுரேஷ் பிரேமச்சந்திரனை வலிந்து இந்தியா அனுப்பிவிட்டு, சம்பந்தரும், சுமந்திரனும் சேர்ந்து அந்த அறிவிப்பை விடுத்த வரலாற்றுத் துரோகப் பக்கங்கள் வெளியே கசிந்து விட்டிருக்கின்றது. இத்தனைக்கும் இந்த முடிவு எடுக்கப்படுவது தொடர்பாக கூட்டமைப்பிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாருக்குமே தெரியாது. 3ம், 4ம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும் ஜெனீவா அமர்விற்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களை நடத்தப்போவதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கதைவிட்டிருக்கின்றார். அவ்வாறு எதுவுமே இங்கு நடக்கப்போவதில்லை, நடத்துவதற்கு அரசும், அதன் படைகளும் அனுமதிக்கப்போவதுமில்லை.

எனவே 2009ம் ஆண்டு, யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது, உணவில்லாமல், மருந்தில்லாமல், மக்கள் செத்துக் கொண்டிருந்தபோது பார்த்துக்கொண்டிருந்த கூட்டமைப்பு இன்று அந்த அவலங்களுக்கான நியாயம் கேட்கும் இடத்திலும் பார்த்துக் கொண்டுதானிருக்கப் போகின்றது. எனவே இவர்கள் கூட்டமைப்பில் இருப்பதைக் காட்டிலும் இல்லாமல்பேவது மேலானதென்று எண்ணத்தோன்றுகின்றது. உண்மையும் அதுதான். வடகிழக்கில் அதிகளவு மக்கள் ஆதரவுடன் வெற்றி பெற்றிருந்த கூட்டமைப்பு அதன் வரலாற்றுக் கடமையிலிருந்து தவறியிருக்கின்றது.

இதன்மூலம் அரசிற்கு நாம் எதிரிகள் அல்ல உங்கள் நண்பர்கள்தான், வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் மக்களைக் கொல்லுங்கள் என அங்கீகாரத்தை வழங்கி

(17ம் பக்கம் பார்க்க)

# நீதிக்கான நடைப்பய
# ஐ.நா. மனித உரிமை





ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் 19வது கூட்டத்தொடரில் மனித உரிமை ஆணையகத்திற்கு, எமது மக்கள் மீது தொடர்ச்சியாக நடாத்தப்படும் படுகொலை தொடர்பாக தீர ஆராய்ந்து அனைத்துலக நீதி மன்றில் விசாரணை நடாத்தி எம் மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க அனைத்துலக சமூகம் முனவரவேண்டும் என வலியுறுத்தி, ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பெல்ஜியத்தின் தலைநகரில் அமைந்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் இருந்து கடந்த 05.02.2012 ஆரம்பிக்கப்பட்ட நடைபயணம் 05.03.2012 திங்களன்று ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முருகதாசன் திடலில் பேரெழுச்சியுடன் நிறைவடைந்துள்ளது.

இப்பேரெழுச்சி நிகழ்வில் பிரான்சில் இருந்து முதற்தடவையாக வரலாற்றுப் பயணம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது. சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பயணம் செய்யக்கூடிய அதிவேக சிறப்புத் தொடருந்து தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தொடருந்து நிறைந்த மக்களுடன் பிரான்சில் இருந்து சென்று மக்கள் பேரெழுச்சி நிகழ்வில் பங்கேற்றதுடன், ஏராளமானோர் தனியார் வாகனங்களிலும் சென்றிருந்தனர்.

தொடருந்துப் பயணத்திற்கான ஏற்பாட்டினை கடந்த ஒரு மாதமாக தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் திட்மிடல் ஒழுங்கமைப்பு செய்திருந்தனர். இது சம்பந்தமான இறுதிச்சந்திப்பும், பொறுப்புகளும் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டன. அதன் பிரகாரம் மக்கள் அவர்களுக்குரிய பிரயாணச்சீட்டுக்கள் கவனிக்கப்பட்டு இருக்கைகள் ஒதுக்கி கொடுக்கப்பட்டிருந்தன.

மக்களும் வரும்போது கைகளில் தமிழீழ தேசியக்கொடி, பிரெஞ்சு நாட்டு தேசியக்கொடி, ஐரோப்பியக் கொடிகளையும் கைகளில் தாங்கி நிரையாக நின்றிருந்தமை, பிரபல்யம் வாய்ந்த இலட்சக்கணக்கான மக்கள் தினந்தோறும் பயணம் செய்யும் பிரான்சின் கார் டி லியோன் தொடருந்து நிலையத்திற்கு காலை வந்திருந்த பிரெஞ்சு மக்கள் மற்றும் வெளிநாட்டு மக்களை திரும்பிப்பார்க்க வைத்ததுடன் விடயத்தையும் வினாவவும் செய்திருந்ததோடு வாழ்த்துதல் சொல்லியிருந்தது குறிப்பிடத்தக்கது.




இதேவேளை, ஐநா சபையிடம் நீதி கேட்பதற்காக கடும் பனிப்பொழிவு, குளிருக்கு மத்தியில் நீதிக்கான நடைப்பயணம் மேற்கொண்ட மூவரும் திங்களன்று முற்பகல் 11 மணியளவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவர்களை சந்தித்த அவர்கள் தாம் நீண்டதூரம் நடந்து வந்த நோக்கத்தை கூறி, ஐந்து அம்ச கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றினையும் கையளித்தனர்.

இந்நிலையில், பிற்பகல் இரண்டு மணியளவில் ஜெனீவாவின் தொடரூந்து நிலையத்தில் இருந்து எழுச்சிப் பேரணி சிங்கள அரசின் இன அழிப்புக்குறித்த நிழற்படங்கள் மற்றும் வாசகங்கள் அடங்கிய பாதாகைகள், தமீழிழத் தேசியக் கொடி, தமிழீழத் தேசியத் தலைவரின் படங்களை தாங்கிய வண்ணமும் எங்கள் தலைவன் பிரபாகரன், எங்களுடைய நாடு தமிழீழம் என்ற கோசங்கள் எழுப்பியவாறு ஆயிரக்கணக்கான தமிழ் உறவுகள் ஐ.நா முன்றலை .நோக்கி நகர்ந்து தமது போராட்டத்தை நடத்தியதுடன், எழுச்சிப் பிரகடனத்தையும் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து எழுப்பினர்.





# யணம்
# மைகள் முன்றலில் தமிழர்களின் பேரெழுச்சி












Nisan Euro Exo Marché
உங்கள்
சகல மளிகைத்
தேவைகளுக்கும்
ஒரே இடம்!
01 48 35 45 03
37, Av.Paul Vaillant Couturier
93120 La Courneuve


Blanc Mesnil - Drancyயில் தமிழர்களுக்கான புதிய உதயம்
NARU COIFFURE
21, AV DE LA REPUBLIQUE
93150 LE BLANC MESNIL
06 59 49 16 80
RER: B - DRANCY


RATHUS
COIFFURE
உங்கள் எண்ணம் போல்
சிகை அலங்காரம்
செய்து கொள்ள
Drancy RER தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில்
11-13 RUE MORIN, 93700 DRANCY Tel.:09 53 04 00 57


23, rue Cail - 75010 Paris
Tél.: 01 46 07 82 90
M: GARE DU NORD
LA CHAPELLE
இந்திரா
உணவகம்
இலங்கை
இந்திய
உணவுகளின்
சுவையகம்.
INDRA
RESTAURANT


64, rue louis blanc
75010 PARIS
Tél: 01 42 05 16 66
உங்கள் சாதாரண தோற்றத்தை
கவர்ச்சியானதாக்கும்
கலை வண்ணம் எம்மிடம் உள்ளது.
NEW SAGANA
COIFFURE


மேனகா அழைப்பிதழ்கள்
மெக்குறைந்த விலையில்....
INVITATIONS
MENAKA
CARD
CHENNAI • INDIA
திருமணம் • பூப்புனித நீராட்டுவிழா
பிறந்த நாள் • முதல் நன்மை • புது நன்மை
அழைப்பிதழ்கள் அனைத்தையும் தரமாகக் குறித்த தவணையில்
மலிவு விலையில் அச்சிட்டுக்கொள்ள நீங்கள் நாடவேண்டியது
தமிழாலயம் ISHWARA
19 rue Cail - 75010 Paris
Tél.: 01 53 26 59 21 Fax: 01 53 26 90 88


Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள்
வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60


விமல்
Vimal Directeur Commercial
1 Bis rue du chemin Vert
93800 Epinay sur Seine
Tél / Fax.: 01 39 83 68 81 Rép.: 01 58 34 04 22
Port: 06 66 79 56 89 / 06 16 81 22 00


தங்க மாளிகை
THANKA MALIKAI
தங்க நகைகள்
ஆடை அணிகலன்கள்
அன்பளிப்பு பொருட்கள்...
199 rue de Fbg.St.Denis
75010 PARIS
01 42 05 39 05


NEW MADRAS
Spécialités Indiene & Srilankaise
உங்கள் விருப்பம் போல்...விழாக்கள்,
கொண்டாட்டங்களுக்குத்தேவையான
உணவு வகைகளை
பெற்றுக்கொள்வதற்கு உகந்த இடம்!
5 Rue Caill - 75010 PARIS
Tél : 01 42 05 08 94


ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான
சிகையலங்கார நிலையம்.
COIFFURE
VITHUSA
TÉL: 01 48 34 90 44
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS
M°: Aubervilers 4 chemmins
Bus: 170,150,249,152


MOB: 06 13 06 20 29
Tel : 01 39 80 85 23
மணவறை, வீடியோ, போட்டோ
அகன்ற திரை, உணவு வகை,
மண்டப ஒழுங்குகள், மற்றும்
உங்கள் விழாக்களுக்கான ஒழுங்குகள்
அனைத்திற்கும்.
BABY
BALOON DECORATION


SRI MAHAL
உங்கள் அனைத்து
மளிகைத்
தேவைகளுக்கும்.
197, rue du Fbg St.Denis
75010 PARIS
Tél : 01 46 07 83 12


S.P TRADERS
உங்கள்
மளிகைத்தேவைகள் அனைத்தும்
ஒரே கூரையின் கீழ்!
197,Rue Faubourg Saint-Denis
Tél : 01 40 36 53 99 75010 PARIS
M°: Gare du Nord / La Chapelle


La Gare
EXO MARCHE
DRANCY
RER முன்பாக.
அனைத்து மளிகைத்
தேவைகளுக்கும்
நீங்கள் நாட வேண்டிய இடம்.
214, rue Anatole France; 93700 Drancy
Tél : 01 48 95 24 80


AMBAL
STORE
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.St.Denis-75010 PARIS


M.S Photo
உங்கள் மங்கள்
நிகழ்வுகளை
பதிவாக்கிக்கொள்ள.
RATHAN &
RUBHAN
Tel: 06 69 08 29 38


திருப்பதி
வீடியோ
வீடியோ
படப்பிடிப்புக்களுக்கும்
மண்டப ஒழுங்குகளுக்கும்.
அனைத்து மங்கள
நிகழ்வுகளுக்கும்!!!
மகேசன் 01 60 17 74 86
WWW.THIRUPPATHYVIDEOS.COM

## உணவு முறையும் நோயற்ற வாழ்வும்

'வெள்ளம் வரும் முன்னே அணைகட்ட வேண்டும்' என்பது ஒரு முதுமொழி. அதேபோன்றுதான் நோய் வந்ததன் பின்னர் அதற்குத் தீர்வு தேடுவதை விட, நோய் வருவதற்கு முன்பே அதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதே சரியான மருத்துவமாக இருக்கமுடியும். அந்த வகையில் பலவேறு ஆய்வுகளிலும், அனுபவங்களிலும் கண்டறியப்பட்ட சில மருத்துவ ரீதியான உண்மைகளை இந்தப் பகுதியூடாகத் தொடர்ந்து பார்ப்போம். இவற்றைப் பின்பற்றவேண்டுமா இல்லையா என்பதை உங்கள் உங்கள் மருத்துவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். இவை சில கண்டறியப்பட்ட ஆலோசனைகள் மட்டுமே.

# அறுசுவை உணவும் ஆரோக்கிய வாழ்வும்

தமிழர்களின் பண்பாடு எப்போதும் அறு சுவைகளோடு உண்ண வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. இந்த அறுசுவை என்பது நாவிற்கு ருசியாக இருக்கவேண்டும் என்பதற்காக சொல்லப்பட்டதல்ல. உடலின் ஆரோக்கியத்தை கொண்டே அறுசுவை உணவை தமிழர்கள் தங்கள் வாழ்வினில் சேர்த்துக்கொண்டார்கள். இன்று விஞ்ஞானமும் மருத்துவமும் இதனை உறுதிப் படுத்தியிருக்கின்றன.



உடலின் ஆறு முக்கிய தாதுக்களுடன் இச்சுவைகளைச் சம்பந்தபடுத்தி, உடல் வளர்ச்சியில் இச்சுவைகளின் பங்குகளை விளக்குகின்றது. இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, கசப்பு, கார்ப்பு மற்றும் துவர்ப்பு ஆகிய இந்த ஆறுசுவைகளின் பண்புகளையும், உடல் நலத்திற்கு இவற்றின் பங்குகளைப் பற்றியும் சற்று விரிவாய் பார்க்கலாம். உடலானது இரத்தம், தசை, கொழுப்பு, எலும்பு, நரம்பு, உமிழ்நீர், மூளை ஆகிய ஏழு முக்கிய தாதுக்களைக் கொண்டது என்பதனால், உடலை 'யாக்கை' என்று கூறினர். இதில் ஏழாவது தாதுவான மூளை சரிவர இயங்க முதல் ஆறு தாதுக்கள் தகுந்த அளவில் இருத்தல் அவசியம். இந்த ஆறு தாதுக்களும், ஆறு சுவைகளுடன் கீழ்கண்டவாறு சம்பந்தப்பட்டுள்ளன.

துவர்ப்பு – இரத்தத்தைப் பெருக்குகின்றது
இனிப்பு – தசையை வளர்க்கின்றது
புளிப்பு – கொழுப்பினை வழங்குகின்றது
கார்ப்பு – எலும்புகளை வளர்க்கின்றது
கசப்பு – நரம்புகளை பலப்படுத்துகின்றது
உவர்ப்பு – உமிழ்நீரைச் சுரக்கச் செய்கின்றது

அந்த கால மருத்துவங்களும், உணவு முறைகளும் இதனை அடிப்படையாகக் கொண்டே இருந்துவந்தது. உடல் தாதுவைப் பெருக்க, சமன் செய்ய அதற்கு ஏற்றவாறு உணவு வகைகளைத் தயாரித்து வந்தனர். இதனைக் கொண்டுதான் 'உணவே மருந்து, மருந்தே உணவு' என்று சொல்வார்கள்.

### துவர்ப்புச் சுவை (Astringent)

இது அதிகம் விருப்பு, வெறுப்பு காட்டப்படாத சுவை. உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் உகந்த சுவை. அதிக வியர்வையைக் கட்டுப்படுத்துகின்றது. இரத்தப்போக்கினைக் குறைக்க வல்லது. வயிற்றுப்போக்கினை சரி செய்யவல்லது. இது அதிகமாயின், இளமையில் முதுமை தோற்றத்தை உண்டுவிக்கும். வாய் உலர்ந்து போகச் செய்யும், சரளமாக பேசுவதைப் பாதிக்கும். வாத நோய்கள் தோன்ற வழிவகுக்கும்.

கிடைக்கும் உணவுப் பொருட்கள்

வாழைக்காய், மாதுளை, மாவடு, மஞ்சள், அவரை, அத்திக்காய் போன்ற காய் வகைகளில் அடங்கியுள்ளது.

### இனிப்புச் சுவை (Sweet)

மனிதர்களால் அதிகம் விரும்பப்படும் சுவை இதுதான். மனதிற்கு மட்டுமல்லாமல் உடலுக்கும் உடனடி உற்சாகத்தைத் தரக்கூடிய சுவையிது. குழந்தைகளின் வளர்ச்சிக்கு மிகவும் உதவுகின்றது. இது அதிகமாயின் உடல் தளர்வு, சோர்வு, அதிகத் தூக்கம், இருமல், உடல் எடைக் கூடுதல் போன்ற சிக்கல்கள் நோய்கள் தோன்ற வாய்ப்பு உள்ளது.

கிடைக்கும் உணவுப் பொருட்கள்

பழவகைகள், உருளை, கரட் போன்ற கிழங்கு வகைகள், அரிசி, கோதுமை போன்ற தானியங்கள் மற்றும் கரும்பு போன்ற தண்டு வகைத் தாவரங்களிலும் இனிப்புச் சுவை அதிக அளவில் அடங்கியுள்ளது.

*ஏனைய நான்கு சுவைகளையும் அடுத்த இதழில் பார்ப்போம்.*

# வேலைக்கார பெண்ணை கொடுமைப்படுத்திய இந்திய தூதரக முன்னாள் அதிகாரி

## 1.5 மில்லியன் டொலர் நட்டஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவு



அமெரிக்காவில் மன்ஹட்டனில் உள்ள இந்திய துணை தூதரகத்தில் அதிகாரியாக பணியாற்றியவர் நீனா மல்ஹோத்ரா. இவரது வீட்டில் சாந்தி குருங் என்ற பெண், 3 ஆண்டுகளாக வீட்டு வேலை பார்த்து வந்தார். இவர் தனக்கு அறிமுகமான ஒரு பெண்ணின் உதவியுடன் நீனா மல்ஹோத்ராவின் வீட்டில் இருந்து தப்பிச் சென்று, நியூயோர்க் நகரில் உள்ள அமெரிக்க மாஜிஸ்திரேட்டு நீதிமன்றத்தில் நீனா மல்ஹோத்ராவுக்கும் அவரது கணவருக்கும் எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். அதில், உறுதி அளித்தபடி தனக்கு சம்பளம் வழங்கப்பட வில்லை என்றும், உணவு கொடுக்காமலும், பெற்றோருடன் தொலைபேசியில் பேச விடாமலும் கணவனும் மனைவியும் சேர்ந்து சித்ரவதை செய்ததாகவும் கூறி இருந்தார்.

இந்த மனுவை விசாரித்த மாஜிஸ்திரேட் பிராங்க் மாஸ், வேலைக்கார பெண் சாந்தி குருங்குக்கு 1.5 மில்லியன் டொலர் (இந்திய பணம் 7 கோடி ரூபா) இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று நியூயோர்க் தெற்கு மாவட்ட நீதிமன்ற நீதிபதிக்கு சிபாரிசு செய்துள்ளார். இதன் அடிப்படையில், மாவட்ட நீதிபதி இவ்வழக்கில் இறுதி உத்தரவை பிறப்பிப்பார்.

## அமெரிக்க தேவாலயத்தில் காந்திக்கு ஞானஸ்நானம்

மகாத்மா காந்திக்கு அமெரிக்காவில் சால்ட் லேக் நகரில் உள்ள மார்மோன் தேவாலயத்தில் 'ஞானஸ்நானம்' செய்யப்பட்டது தெரியவந்துள்ளது. அவர் இறந்து பல ஆண்டுகள் கழித்து, 1996ம் ஆண்டு இதை செய்துள்ளனர். இந்த தகவலை அமெரிக்காவில் உள்ள ரட்கி என்பவருக்கு மார்மோன் தேவாலயம் தற்போது தெரிவித்துள்ளது. இதை இந்து மத ஆர்வலர் ராஜன் செத் என்பவருக்கு ரட்கி, சுமெயில் மூலம் தெரிவித்துள்ளார். மேலும், காந்திக்கு ஞானஸ்நானம் செய்வித்தது தொடர்பான ஆவணங்களை மார்மோன் தேவாலயத்தில் கடந்த 16ம் திகதி, தான் பார்த்ததாகவும், அதன்பிறகு அந்த ஆவணங்கள் காணாமல் போய் விட்டதாகவும் அவர் கூறியுள்ளார். அமெரிக்காவில் வசித்து வரும் மகாத்மா காந்தியின் பேரன் அருண் காந்தி இச்செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவில் சோனியாவிற்கு எதிராகப் போராட்டம்

மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றுள்ள கொங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியை அமெரிக்காவில் இருந்து வெளியேற்றக் கோரி அமெரிக்காவில் வாழும் சீக்கியர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.



அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சகம் முன்பு திரண்ட சீக்கியர்கள், சோனியாவை அமெரிக்காவில் இருந்து வெளியேற்றுமாறு கோசங்கள் எழுப்பினர். மேலும், ஹிலாரி கிளின்டனுக்கு எழுதியுள்ள கடிதத்தில், சட்ட விதி முறைகளுக்கு எதிராக அமெரிக்காவில் தங்கியிருக்கும் சோனியா காந்தியை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று கூறியுள்ளனர்.

## 2014ம் ஆண்டு சந்திரனுக்கு செல்லும் சந்திரயான்–2

சந்திரனுக்கு சந்திரயான்-1 விண்கலத்தை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் ஏற்கனவே அனுப்பினார்கள். இந்த விண்கலம் சந்திரனில் தண்ணீர் இருப்பதை உறுதி செய்தது. இதைத் தொடர்ந்து சந்திரனுக்கு சந்திரயான்-2 விண்கலத்தை அனுப்ப இந்திய விண்வெளித்துறை விஞ்ஞானிகள் ஏற்பாடு செய்து வருகிறார்கள். இந்த விண்கலத்தை 2013ம் ஆண்டு செலுத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. பல்வேறு தொழில்நுட்பக் காரணங்களால் 2014ம் ஆண்டு தொடக்கத்தில் தான் இந்த விண்கலம் சந்திரனுக்கு அனுப்ப வாய்ப்பு இருக்கிறது. இந்த தகவலை, இந்திய விண்வெளித்துறை முன்னாள் குழு இயக்குநர் சுரேஷ் நாயக் ஒரு நிகழ்ச்சியில் பேசுகையில் வெளியிட்டார். அவர் மேலும் கூறுகையில், 'சந்திரயான்-2 சந்திரனில் தரை இறங்கும். அந்த விண்கலம் சந்திரனின் மேல் பரப்பை தெள்ளத் தெளிவாக ஆராய்ச்சி செய்து மேலும் பல புதிய தகவல்களை அனுப்பும்" என்றார்.



## போதையில் இந்தியா முதலிடம்!

### ஐ.நா. குழு அறிக்கை

தெற்காசியாவிலேயே இந்தியாவில் தான் ஹெராயின் போதைப் பொருள் அதிகமாக பயன்படுத்தப் படுவதாக ஐ.நா. சபையின் போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரியம் அறிக்கை வெளியிட்டுள்ளது. இது குறித்து போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரியத்தின் இயக்குநர் ஜெனரல் ஓ.பி.எஸ். மாலிக் கூறிய தாவது, ஹெராயின் போதைப் பொருள் ஆப்கானிஸ்தானில் இருந்து தெற்காசியா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவுக்கு கடத்தப் படுகிறது. தெற்காசியாவிலேயே



இந்தியாவில் மட்டும் ஆண்டுக்கு 17 தொன் ஹெராயின் பயன்படுத் தப்படுகிறது. அதன் மதிப்பு 7,000 கோடி ரூபா.

தெற்கு மற்றும் மேற்கிந்தியாவின் பெருநகரங்களில் உள்ள மாணவர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாக உள்ளதுதான் இதற்கு காரணம். இந்தியாவில் சுமார் 30 இலட்சம் பேர் போதைப் பொருட்களுக்கு அடிமையாக உள்ளனர். ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்கு கடத்தி வரப்படும் ஹெராயின் இங்கிருந்து அண்டை நாடுகளான வங்கதேசம், நேபாளம் மற்றும் இலங்கைக்கு கடத்தப்படுகிறது. இந்தியாவில் சுமார் 7,500 ஹெக்டேர் நிலப் பரப்பில் சட்டவிரோதமாக ஓபியம் பயிரிடப்படுகிறது. இங்கு ஹெராயின் தவிர கொக்கைனுக்கும் மவுசு அதிகரித்துள்ளது என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

# கூட்டமைப்பு தமிழர்கள் அணிந்திருக்கும் ...

எந்தக் கொள்கைகளைத் தாங்கிக் கொண்டு அரசியலுரிமைப் போரை நடத்தினரோ அதையே கூட்டமைப்பு முன்வைத்திருந்தது. அதற்கே மக்கள் வாக்களித்தனர். யுத்தத்திற்குப் பின்னர் கூட்டமைப்பு புதிதாக ஒன்றையும் உருவாக்கவில்லை, அவ்வாறு உருவாக்கியிருந்தால் அடையாளமே தெரியாதவர்களாக மாற்றப்பட்டிருப்பார்கள். இது கூட்டமைப்பிற்கும் கூடத்தெரியும்.

மக்கள் அன்றிருந்த நிலைப்பாட்டிலேயே இன்றும் இருந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை கூட்டமைப்பு மறந்துவிட்டதோ என்ற எண்ணப்பாடும் தோன்றத்தான் செய்கின்றது. எண்ணப்பாட்டிற்கு நியாயமும் இருக்கின்றது. அதனை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரே உருவாக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். இதற்கு மீண்டும் தனிநாடு கோரி போராடச் சொல்வது அர்தமாகாது. எப்படி

**படித்த பட்டதாரிகளும், பொறியியலாளர்களும், ஏன் சட்டத்தரணிகளும் கூட போராளிகளாக இருந்தார்கள். அவர்களால் நிச்சயமாக கையேந்தி, அல்லது யார் பின்னாலாவது வால் பிடித்து வாழ்ந்திருக்க முடியும். ஆனால் அப்படி அவர்கள் வாழவில்லை. ஏனென்றால் அவர்களிடமிருந்தது தீர்க்கமான சுதந்திர எண்ணம், அவர்களிடமிருந்தது தங்கள் இனத்தின் நாடித்துடிப்பு. ஆனால் உங்களிடம் எதுவுமேயில்லை.**

ஜனநாயக ரீதியிலான போராட்டத்தில் அன்றைய தமிழ் தலைமைகள் ஏமாற்றப்பட்டதை, ஆயுதக்கரங்கள் கொண்டு அடக்கப்பட்டதை, அடுத்துவந்த ஆயுதப் போராட்டம் தனது பக்க நியாயப்பாட்டிற்குப் பயன்படுத்திக் கொண்டதோ அவ்வாறு ஆயுதப் போராட்டத்தின்போது, எமது இனத்தின் மீது நடந்த அடக்குமுறைகள், அழிப்புக்கள் சமகால அரசியலுரிமைப் போராட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

உதாரணத்திற்கு இன்று உலகம் முழுவதும் போர்க் குற்றச்சாட்டுக்கள் பற்றிய பேச்சுக்கள் அல்லது மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது. யார் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் யுத்தத்தின் இறுதித் தருணங்களில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட அனைத்து தாக்குதல் சம்பவங்கள், அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவற்றுக்கொரு நியாயம் கிடைக்கவேண்டும் என்பதில் உன்மையில் போரில் பாதிக்கப்பட்ட மக்கள் உறுதியுடன் இருக்கின்றார்.

இந்த உறுதியும், எதிர்பார்ப்பும் வெறுமனே குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்படவேண்டும், தண்டணை வழங்கப்படவேண்டும் என்பதற்கு அப்பால் இதையொரு ஊடகமாகப் பயன்படுத்திக் கொண்டு தமிழரின் நீண்டகால அரசியலுரிமைப் போராட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதே நடந்த அனைத்திற்குமான நியாயமாகும். இந்த வரலாற்குக் கடமையினை கூட்டமைப்பே செய்யவேண்டும். ஏனெனில் மக்கள் கூட்டமைப்பிற்கே அந்த பொறுப்பை வழங்கியிருக்கின்றார்கள்.

ஆனால் கூட்டமைப்பும் தனது பொறுப்பிலிருந்து வழுகி வருகின்றது என்ற விமர்சனம் அண்மைக் காலமாக வலுவாக எழுந்திருக்கின்றது. அதில் உன்மையும் இருக்கின்றது. யுத்தத்தின் பின்னர் கூட்டமைப்பு தனது அரசியல் நகர்வுகளில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் வெளிப்படையாக தனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தார்கள். அவர்களுக்காக தம்மால் இயன்றதை அன்றும், இன்றும் செய்கிறார்கள்.

மேலும் சிலர் நடந்து கொள்ளும் விதம் மன்னிக்க முடியாதவைபோன்று எண்ணத்தோன்றுகின்றது. 'போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பேசினால் சிங்கள மக்கள் அதை பகையாக நினைக்கின்றார்கள்.' என்றும். 'கம்போடியாவைப்போன்று நீண்ட கால அவகாசம் கொடுத்து போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பேசலாம்.' என்றும். 'யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் ஆத்திரமுற்ற, விரக்திநிலையடைந்த, வேலையற்ற இளைஞர்களே' என்றும், எள்ளி நகையாடுகின்றார்கள்.

உண்மையில் இவர்களுக்கு தமிழர்களுடைய உளப்பாங்கு என்ன என்று தெரியவில்லை, மக்கள் கடந்த 30 வருடம் வாழ்ந்த வாழ்வும், சுமந்த வலிகளும் புரியாதவர்கள் என்றே சொல்லவேண்டும். இந்நிலையில் இந்த அதிமேதாவிகள் தமிழர்களை ஒரு நல்வழியில் எப்போதுமே கொண்டு செல்லப்போவதில்லை. வடகிழக்கில் வாழ்ந்த தமிழர்களால் அதரிக்கப்பட்ட ஒரு போராட்டத்தை கொச்சைப்படுத்துவதன் மூலம் இவர்கள் தங்கள் இனத்தையே கொச்சைப் படுத்துகின்றார்கள்.

போரில் இறந்துபோன ஆயிரமாயிரம் போராளிகள் நினைத்திருந்தால் இவர்களைப் போன்று வசதியாகவும், செல்வாக்குள்ளவர்களாகவும் வாழ்ந்திருக்க முடியும். ஆனால் அவர்கள் ஆயுதங்களைச் சுமந்து கொண்டிருக்கும்போதெல்லாம் வாய்மூடி மௌனிகளாக இருந்த இவர்கள், வரலாற்றின் இறுக்கமான பக்கங்கள் தெரியாத இவர்கள், அவலங்களின் வலி அறியாத இவர்கள் மக்களைப் பற்றியும், அவர்களது போராட்டத்தைப் பற்றியும் பேசுவதற்கு அருகதையற்றவர்கள்.

போரில் ஈடுபட்டு ஜனநாயக வழிக்கு பின்னர் திரும்பியிருந்த பல முன்னாள் போராளிகள் இன்று கூட்டமைப்பில் முக்கிய நிலைகளில் உள்ளார்கள். அவர்கள் பேச வேண்டும். வேலையில்லாமையினாலா? ஆத்திரமும் விரக்தி நிலையும் அடைந்தமையினாலா போராடப்போனீர்கள்? நிச்சயமாக இல்லை. வடகிழக்கில் ஆயுதப்போராட்டங்கள் முனைப்புப் பெற்ற காலத்தில் அந்தப் போராட்டத்தை மக்கள் தங்கள் மடியில் வைத்து வளர்த்துவிட்ட கதை, ஒவ்வொரு போராளியையும் தங்கள் வீடுகளிற்குள் ஒளித்து வைத்து வளர்த்த கதை உணர்வுபூர்வமானது.

ஆயுதங்களை யாரும் விரும்பிச் சுமக்கவில்லை. வேலையின்மைக்கும், விரக்திநிலைக்கும், ஆத்திரத்திற்கும் ஆயுதம் ஒருபோதும் தீர்வாகாது. தன்னுடைய இனம் சிதைக்கப்பட்டபோது, தன்னுடைய இனத்தின் மீது இன அழிப்பு கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த போது தூய்மையான சுதந்திர எண்ணத்தோடு, தன்னுடைய இனத்தின், தன்னுடைய மக்களின் நின்மதிக்காக தங்கள் உயிரையும் பறிகொடுக்கத் தயாரானார்கள். உங்களைப்போல் அல்ல. அதேபோல் வடகிழக்கிலிருந்த ஆயுதப் போராட்டமும் எந்தச் சந்தர்ப்பத்திலும் சிங்கள மக்களுக்கு எதிராக திரும்பியிருக்கவில்லை.

படித்த பட்டதாரிகளும், பொறியியலாளர்களும், ஏன் சட்டத்தரணிகளும் கூட போராளிகளாக இருந்தார்கள். அவர்களால் நிச்சயமாக கையேந்தி, அல்லது யார் பின்னாலாவது வால் பிடித்து வாழ்ந்திருக்க முடியும். ஆனால் அப்படி அவர்கள் வாழவில்லை. ஏனென்றால் அவர்களிடமிருந்தது தீர்க்கமான சுதந்திர எண்ணம், அவர்களிடமிருந்தது தங்கள் இனத்தின் நாடித்துடிப்பு. ஆனால் உங்களிடம் எதுவுமேயில்லை என்கிறபோது நீங்கள் மக்களையும், அவர்களது போராட்டத்தையும் எள்ளிநகையாடுவதில் தவறில்லை.

எது எப்படியிருந்தாலும், நிச்சயமாக கொள்கை தவறிய பயணம், மக்களை நிராகரித்த பேச்சுக்கள், ஏளனமான நடத்தைகள், அனைத்திற்குமே காலம் பதில் சொல்லும், அதாவது காலம் மாறும்போது மக்கள் பதில் சொல்வார்கள். இராஜதந்திரம் என்பதற்காக உண்மைகளை விற்க முடியாது. கூட்டமைப்பு தமிழர்கள் அணிந்திருக்கும் ஆடைதான். அடையாளம் அல்ல. இந்த உண்மையை புரிந்து கொண்டாலே நிறைய விடயங்கள் புரியும் என நினைக்கின்றோம்.

# போர்க்குற்றங்கள் தொடர்பாக சிறிலங்காவை மன்னித்துவிடக் கூடாது

தருஸ்மன்

சிறீலங்கா இராணுவத்தினரின் எறிகணை வீச்சில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என நாம் எமது அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயத்தை கற்றுக்கொண்ட பாடங்களுக்கான ஆணைக்குழுவானது புலிகளின் எறிகணையில் அல்லது துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டதாக பதிலளித்துள்ளதாக ஐ.நா அறிக்கையை தயாரித்த தருஸ்மன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் தருஸ்மன் மேலும் தெரிவித்திருப்பதாவது, இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட யுத்த கால மீறல்கள் தொடர்பான உண்மைகளை நாம் கண்டறிந்து அறிக்கையாக தயாரித்தோம். எமது விசாரணையின் முடிவில், இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தில் பங்கு கொண்ட இரு தரப்புக்களும் சட்ட விதிமுறைகளை திட்டமிட்ட வகையில் மீறி நடந்து கொண்டதற்கான நம்பகமான ஆதாரங்களையும், சாட்சியங்களையும் நாம் கண்டுகொண்டோம்.

இரு தரப்புக்களும் யுத்த விதிமுறைகளை மீறியதால் 40,000 வரையானவர்கள் தமது உயிர்களை இழந்துள்ளனர் என்ற உண்மையையும் நாம் கண்டறிந்து கொண்டோம். அதாவது லிபியா அல்லது சிரியாவில் இடம்பெற்ற யுத்தத்தின் போது கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கையின் பல மடங்காக இது காணப்படுகிறது. இவ்வாறு இலங்கையில் கொல்லப்பட்ட மக்களில் பெருமளவானவர்கள் சிறீலங்கா அரசாங்கப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட செறிவான எறிகணை மற்றும் வான் குண்டுத் தாக்குதலின் போதே படுகொலைசெய்யப்பட்டனர். இதில் வைத்தியசாலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும் உள்ளடங்குகின்றன. சிறீலங்கா அரசாங்கமானது தனது எல்லா மக்களுக்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் தனது மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதை உறுதிப்படுத்த வேண்டிய தனது கடப்பாட்டை அனைத்துலக சமூகமானது தட்டிக்கழிக்காது, அதனை நிறைவேற்ற வேண்டிய காலம் இதுவாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கையில் செயற்படுத்த நாம் ஒரு போதும் இடமளிக்க மாட்டோம் என சிங்கள தீவிர இனவாத அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவினுடைய பரிந்துரைகளை செயற்படுத்துவோம் என அரச தரப்பினர் அமெரிக்காவில் மட்டுமே தெரிவிக்கலாம். ஆனால் அதனை இலங்கையில் நடைமுறைப்படுத்த ஒருபோதும் அனுமதியளிக்க மாட்டோம் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தனது தேவைக்காகவே சிறீலங்காவை குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவதற்கு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. அத்துடன் ஹிலாரி கிளிண்டனின் தேவைக்கு நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்து சிறீலங்கா அரசு தன்னுடைய தலையில் தானே மண்ணையள்ளிப் போட்டுள்ளது. அத்துடன் எமது மக்களது தேவைக்காக நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்படவில்லை. இதனால் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டியது அவசியம் இல்லையெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை சிறிலங்காவில் அமுல்படுத்துவதற்கு தொடர்ந்தும் எதிர்ப்புக்களை வெளிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கடை விற்பனைக்கு

Métro École vétérinaire de Maisons-Alfort ற்கு அண்மையில் தற்பொழுது தையல்கடை நடைபெறும் 25 M2 விஸ்தீரணமுள்ள கடையும், Caveம் விற்பனைக்கு உள்ளது.

restaurant தவிர்ந்த ஏனைய வர்த்தகங்களுக்கு அனுமதி உள்ளது.

9, rue Maréchal Juin
94700 Maisons Alfort

தொடர்புகளுக்கு
01 48 93 07 91 / 06 67 77 06 60

# வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

## கார் தயாரிப்பு நிறுவனங்களின் விற்பனைத் தரவரிசை

சர்வதேச அளவில், 2011ம் ஆண்டில் மிகப் பெரிய கார் தயாரிப்பு நிறுவனமாக அமெரிக்காவின் ஜெனரல் மோட்டார்ஸ் உருவெடுத்துள்ளது. கார்கள் விற்பனை அடிப்படையில் சென்ற ஆண்டில் முன்னிலை வகிக்கும் நிறுவனங்கள் பற்றி அண்மையில் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, 90.30 இலட்சம் கார்களை விற்பனை செய்து ஜெனரல் மோட்டார்ஸ் முதலிடத்தை பிடித்துள்ளது. இந்நிறுவனம் உலகம் முழுவதுமாக 2.02 இலட்சம் பணியாளர்களைக் கொண்டுள்ளது. கடந்த ஆண்டில் இந்நிறுவனத்தின் விற்பனை மதிப்பின் அடிப்படையில் 15,030 கோடி டொலரை எட்டியது.



இதேவேளை, விற்பனையான கார்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஜேர்மனியை சேர்ந்த வோல்ஸ் வேகன் நிறுவனம் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. 2018ம் ஆண்டுக்குள் உலகின் முதல்தர கார் நிறுவனமாக உருவெடுக்க இந்நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது. சர்வதேச அளவில் 4 இலட்சம் பணியாளர்களை கொண்டுள்ளது. முதல் முறையாக சென்ற ஆண்டில் 83 இலட்சம் கார்களை விற்பனை செய்துள்ளது. மூன்றாவது இடத்தை ரொனோட்–நிசான் நிறுவனமும், நான்காவது இடத்தை ஜப்பானிய டொயோட்டாவும் பிடித்துள்ளன. தென் கொரியாவின் ஹுண்டாய் ஐந்தாவது இடத்தை பிடித்துள்ளது. அமெரிக்காவின் ஃபோர்ட் ஆறாவது இடத்தில் உள்ளது.

## சர்வதேச அளவில் செல்பேசிச் சேவை நிறுவனங்களின் வருமானம் என்ன?

2015ம் ஆண்டுக்குள் சர்வதேச அளவில் செல்பேசி சேவை நிறுவனங்கள் ஈட்டும் வருவாய் மட்டும் 1.10 இலட்சம் கோடி டொலரை எட்டும் என ஜி.எஸ்.எம். தொடர்பாடல் அமைப்பு (Global System for Mobile Communications) நடத்திய ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. செல்பேசி நிறுவனங்கள் தற்போது 98,400 கோடி டொலர் வருவாய் ஈட்டிவருகின்றன. எனினும், செல்பேசி விற்பனை மற்றும் சேவை நிறுவனங்களின் வருவாய் 2015ம் ஆண்டில் 1.90 இலட்சம் கோடி டொலராக அதிகரிக்கும் எனவும் ஜி.எஸ்.எம் சங்கத்தின் தலைமை இயக்குனர் அனி போவெரட் தெரிவித்தார்.



இந்த கால கட்டத்தில் 79,300 கோடி டொலர் புதிய முதலீடுகளை ஈர்க்க உள்ள இத்துறை 460 கோடி வாடிக்கையாளர்களுக்கு 910 கோடி இணைப்புக்களை வழங்கியிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்சமயம் உலக அளவில் 660 கோடி இணைப்புகளுடன் 360 கோடி வாடிக்கையாளர்கள் உள்ளனர். செல்பேசி சேவை துறை கல்வி, ஆரோக்கிய பராமரிப்பு, பணபரிவர்த்தனை மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக திகழ்கிறது. ஒட்டுமொத்த உலகையும் இணைப்பதில் இதற்கு நிகர் வேறெதுவுமில்லை என போவெரட் மேலும் கூறினார். இதேபோன்று வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதில் இத்துறையின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய அவர், தற்போது சுமார் 80 இலட்சம் பேருக்கு வேலை வழங்கியுள்ளதாகவும், அடுத்த 3 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 1 கோடியாக அதிகரிக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். செல்பேசிகளின் இணைப்புகள் 10 சதவீதம் அதிகரித்தால் வளர்ச்சியடைந்த நாடுகளில் 0.6 சதவீதமும், வளர்ந்து வரும் நாடுகளில் 0.81 சதவீதமும், நடுத்தர வளர்ச்சி கொண்ட நாடுகளில் 1.4 சதவீதமும் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் என ஆய்வறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

## குறைந்த கட்டண விமான சேவை

ஜப்பானில் முதல் முறையாக குறைந்த கட்டண விமான் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டு விமான வழித்தடத்தில் இவை இயக்கப்படும். பீச் ஏவியேஷன் லிமிடெட் என்ற நிறுவனம் இந்தச் சேவையைத் தொடங்கியுள்ளது. விமான மற்றும் தொடருந்து சேவை நிறுவனங்களிடையே ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்தும் நோக்கில் இந்த சேவை தொடங்கப்பட்டுள்ளது. தொடருந்துக் கட்டணத்துக்கு இணையான கட்டணமே இந்த விமானத்தில் வசூலிக்கப்படுவதால் இதை பறக்கும் தொடருந்து என்று அழைக்கின்றனர். இந்த விமானத்தில் கட்டணம் குறைவாக இருந்தாலும் விமானத்தில் வழங்கப்படும் உணவு, கம்பளி உள்ளிட்டவற்றுக்கு கட்டணம் வசூலிக்கப்படும். இதன் மூலம் குறைந்த கட்டண சேவையால் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்ட முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மகிந்தவின் ஆலோசகர் இப்படி இருந்தால் மகிந்தர் எப்படி இருப்பார்?

முட்டாள் ராஜாவும் மதிகெட்ட மந்திரிகளும் இருந்தால் நாடு இப்படித்தான் சிந்திக்கும் என்பதற்கு இது நல்லதொரு உதாரணம். மேற்குலக நாடுகளின் சவால்களை சிறீலங்கா எதிர்கொள்ள முடியாது என்றும், சதாம் ஹுசேன், கடாஃபி கதியை மகிந்த ராஜபக்சவுக்கு ஏற்படுத்தும் வெறித்தனத்திலேயே இன்று மேற்குலக நாடுகள் செயற்படுகின்றன என்றும் எச்சரித்துள்ள மகிந்தவின் வழக்கறிஞர் எஸ்.எல்.குணசேகர அதிலிருந்து தப்புவதற்கு மகிந்தவிற்கு ஆலோசனையும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறிய ஆலோசனையைக் கேளுங்கள்... ஜெனீவா மனித உரிமை பேரவையில் மேற்கு நாடுகளின் சவால்களை எதிர்கொள்ள முடியாது. எனவே, அர்த்தம் உள்ளதும் நடைமுறையில் சாத்தியப்படக் கூடியதுமான உத்திகளை கையாள வேண்டுமே தவிர, உள்நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதால் எவ்விதமான பயனும் கிடைக்கப்போவதில்லை. எனவே, சிறீலங்காவிற்கு எதிராக ஜெனீவா அமைக்கப் போகும் விசாரணைக் குழுவை முட்டாளாக்க வேண்டும். அக்குழுவில் உள்நாட்டவர்கள் யாராவது சாட்சியளித்தால், அவர்களை குடும்பங்களோடு ஒதுக்கி வைக்க வேண்டும். எவ்விதமான சிவில் உரிமைகளும் அவர்களுக்கு வழங்கக் கூடாது. அவர்களை உள்நாட்டிலேயே ஒதுக்கி வைக்க வேண்டும். மேற்குலக நாடுகள் பேராசைக்காரர்கள். ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் போன்ற நாடுகளில் மேற்குலக நாடுகள் பெரும் பேரழிவுகளை ஏற்படுத்தி விட்டுள்ளன. அங்கு பெரிய மனித உரிமை மீறல்கள் இடம்பெற்ற போதும் அவை விசாரணைகளுக்கு உட்படுத்தப்படவில்லை. வியட்னாமில் இவ்வாறான நிலையை தோற்றுவிக்க முயற்சித்த போதிலும் அது படுதோல்வி நிலையிலேயே முடிந்தது. எனவே இலங்கை ஒரு சிறிய நாடு என்பதால் மேற்குலக நாடுகளின் சவால்களுக்கு முகம் கொடுப்பது சவாலான விடயமாகும். இதற்கு ஏனைய வலய நாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமே தவிர உள்நாட்டில் பொதுமக்களை பேருந்துகளில் ஏற்றி வந்து ஆர்ப்பாட்டங்கள் செய்வதால் எவ்விதமான நன்மையும் இல்லை. அரசாங்கம் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை மாற்றியமைக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

### சர்வதேசம் உரிய தீர்வை.....

இந்நிலையில், வறுமையால் பாதிக்கப்பட்டு பல்லைக்கழகக் கல்வியைத் தொடர முடியாத பல மாணவர்களுக்கு தேசியத் தலைவர் நிதியத்திலிருந்து தமிழீழ கல்விக் கழகத்தினூடாக மாதாந்தம் உதவு தொகை வழங்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்தச் சேவை தாயகத்திலும் புலத்திலும் வாழ்கின்ற பல தமிழ் மக்களுக்கே இன்று வரை தெரியாத நிலையில் சிறீலங்கா அரச படையின் புலனாய்வாளர்களின் காதுகளுக்கும் தற்போது தான் இவ்விடயம் தெரியவந்திருக்கிறது. இதனாலேயே புலிகளின் நிதியில் கல்வி கற்ற மாணவர்களை அச்சுறுத்தி அடிபணியவைக்க சிங்களப் புலனாய்வுத்துறை முயன்று வருகிறது.

தமிழ் இளைஞர், யுவதிகளை அச்சுறுத்தி அடிபணிய வைக்கலாமென்று சிறீலங்கா இராணுவமும் புலனாய்வுத்துறையும் நம்பிக்கொண்டிருக்கிறது. ஒன்றை மட்டும் இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். வீரம் விளையாடிய மண்ணில் பிறந்தவர்கள் சோரம் போக மாட்டார்கள். தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்கு முறைகளுக்கு எதிராக தொடங்கப்பட்ட ஆயுதப் போராட்டம் இன்னும் முற்றுப் பெறவில்லை. பாரியதொரு திருப்பத்தில் வந்து நிற்கின்றது. சர்வதேசம் உரிய தீர்வை வழங்க மறுத்தால் தமிழினம் மீண்டும், 'தலைவன் சொன்ன வேதம் கேட்டு யாகம் செய்யப் புறப்படுமே தவிர அமைதியாக அடங்கியிருக்காது'.

### காத்திருக்கும் மக்களும்....

இருப்பதாகவே நினைக்கின்றோம். அண்மையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் ஜனாதிபதியை தனியே சந்தித்திருந்தார். இதன்போது தெரிவுக் குழுவில் கலந்துகொள்ள மாட்டோம் என திட்வட்டமாக தெரிவித்துவிட்டதாக வாய்ச்சவடால் விட்டிருந்தார். ஆனால் நடந்தது வேறு.

அன்று நடந்த சந்திப்பில், புலிகள் அழிக்கப்பட வேண்டும் என சம்பந்தர் கூறியதையும், அதன்போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவார்கள், அதை நாம் பார்த்துக் கொள்கின்றோம், கூட்டமைப்பு வாயை மூடிக்கொண்டிருக்கும், அதற்கு நான் பொறுப்பு என ஜனாதிபதிக்கும் சம்பந்தருக்குமிடையில் யுத்தத்திற்கு முன்னர் நடந்த சம்பாசனையை ஜனாதிபதி நினைவுபடுத்தியிருப்பார். இதன் முடிவில் கூட்டமைப்பு ஜெனீவாவிற்குச் செல்லக்கூடாது எனவும் அவர் நிர்ப்பந்தித்திருப்பார். எனவே இவரும் ஆமாம் போட்டுவிட்டு வந்திருப்பார். இதுதான் ஜெனீவா அமர்வுகளை கூட்டமைப்பு தவிர்த்தமைக்கான உண்மை.

கூட்டமைப்பு ஜெனீவா செல்லவில்லை என தெரியப்படுத்த சம்பந்தர் ஒரு அறிக்கை விடுத்திருந்தார். அதில் விசரர், பைத்தியக்காரர்களுக்குச் சொல்வதைப்போன்று சில விடங்களை சொல்லியிருக்கின்றார். இதிலிருந்தே நாம் புரிந்து கொண்டோம், எல்லாம் செப்படிவித்தையென்று. எனவே இன்றும் நாம் நம்பியிருக்கின்றோம் புலம்பெயர்ந்த சொந்தங்களை, அடக்குமுறைகளுக்குள்ளும், காட்டிக்கொடுப்பாளர்களுக்கும், வெள்ளைவேட்டி, சட்டையணிந்த துரோகிகளுக்குமிடையில் ஒரு இனம் காத்திருக்கின்றது. விடுதலைப் போராட்டத்திலும், எமது சுதந்திரத்திலும் மதிக்கப்படும் மனிதர்கள் நீங்கள் மட்டும்தான்.

தமிழ் தொலைக்காட்சிகளின் புதிய இணைப்புகள்
Digital Aerial Installation, CCTv Installation, Home Cinema Setup, Tv Wall Mount, Computer Repair & Sales
சட்டலைட் இணைப்பு இல்லாமல் HD தரத்தில் தமிழ் தொலைக்காட்சிகள்!!
8 தமிழ் தொலைக்காட்சிகள் மாத சந்தா £5.99.
12 தமிழ் தொலைக்காட்சிகள் மாத சந்தா £8.99.
13 தமிழ் தொலைக்காட்சிகள் மாத சந்தா £13.99 மட்டுமே!!
மலிவான விலையில் Double LNB பொருத்தித் தரப்படும்
இலவச தொலைக்காட்சி பார்க்க 2 காட் போடக்கூடிய ரிசீவருடன் சட்டலைட் இணைப்பு மலிவாகச் செய்து தரப்படும்
VIJAY TV 1 வருட சந்தாவுடன் மற்றும் Hotbird & Eurobird இலவச தொலைக்காட்சிளுடன் 2 Cart போடக்கூடிய Receiver பூட்டும் செலவு உட்பட
~~£195~~ Now £175கள் மட்டுமே!!!
1வருட உத்தரவாதம்
Thiru - 07429037336
- 07404107604

# 4ம் ஆண்டு நினைவில்

## லெப்.அகமகன்

### யோகேஸ்வரன் ரமேஸ்

யாழ் மாவட்டம்

| தாய் மடியில் | தாய் மண்ணில் |
|---|---|
| 30-07-1987 | 03-03-2008 |



நான் உயிருக்குயிராக நேசித்த தோழர்கள், என்னோடு தோளோடு தோள் நின்று போரடிய தளபதிகள் நான் பல்லாண்டு காலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழும் போதெல்லாம் எனது இதயம் வெடிக்கும். ஆயினும் சோகத்தால் நான் சோர்ந்து போவதில்லை. இந்த இழப்புக்கள் எனது இலட்சிய உறுதிக்கு மேலும் உரமூட்டியிருக்கின்றன.

தமிழீழத் தேசியத் தலைவர்


# ASCES

22 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

எமது பாடசாலையில் Collège, Lycée வகுப்பு பாடங்கள் கற்பிக்க Bac +2 தகைமையுள்ள மாணவர்கள் தேவை

E-mail : asces@free.fr Tél : 06 68 12 57 19

4வது கிளை DRANCYஇல் ஆரம்பம்
Grande section முதல் lycée வகுப்புகள் வரை
église Saint Louis
33, rue George Marie 93700 Drancy
Gare அருகில்
திங்கள் - வியாழன் வெள்ளி 17.30 மணி

பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்பு
03.03.2012 சனி - ஞாயிறு 1.30 மணி
12.02.2012 ஞாயிறு 10.30 மணி (ஒருநாள் வகுப்பு La Courneuve )
13.02.2012 திங்கள் 10.30 மணி (ஒருநாள் வகுப்பு Paris)
20.02.2012 திங்கள் - செவ்வாய் பி.ப 15.30 மணி
09.02.2012 வியாழன் - வெள்ளி 11 மணி (Bobigny)

LYCEE வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன
LA COURNEUVEஇல்
35, rue Maurice Lachâtre
93120 La Courneuve
சனி - ஞாயிறு 9.30 -18.30 மணி
திங்கள் - வெள்ளி 14 - 20 மணி

Cambridge University பரீட்சைக்கான வகுப்புகள் (Starters, Movers, Flyers, Ket, Pet,Fle)

கணனி வகுப்பு Photoshop
03-03-2012 சனி 11 மணி
windows,office,hardware,web design

Crimée
3, place de joinville 75019 paris
சனி - ஞாயிறு 9.30 - 18.30 மணி
புதன் 14 - 17 மணி

அண்மையில் இலங்கையிலிருந்து வந்த மாணவர்களுக்கான விசேட பிரஞ்சு வகுப்புகள் ஏழு நாட்களும்

Bobigny
38, rue Garston Crepin 93000 Bobigny
திங்கள் - புதன் 17.30 - 19.30 மணி
சனி 14 -18 மணி

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ, நடனம், சங்கீதம் வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன் கிட்டார் வகுப்புகள்
தையல் icing, hairstyle, facial வகுப்புகள் ஆரம்பம்

# தமிழக, உலகத்...

நிலைப்பாடு மாற வேண்டும் என்று வலியுறுத்தியும் சென்னையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை எழுச்சியுடன் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் என்பன இடம்பெற்றுள்ளது. த.பாண்டியன் தலைமையில் இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியினர் உண்ணாவிரதப் போராட்டத்தில் இன்று செவ்வாய்க்கிழமை ஈடுபட்டுள்ளனர்.




இதேவேளை, சிறீலங்காவிற்கு ஆதரவாக மத்திய அரசு செயற்படக்கூடாது, போர்க் குற்றவாளியைக் காப்பாற்றக் கூடாது என்பதை வலியுறுத்தி மும்பையிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி உட்பட கட்சிகளும் பிரமுகர்களும் இந்தியா பிரேரணைக்கு ஆதரவாகச் செயற்பட்டு தமிழர்களுக்கு இழைத்த கொடுமைக்கு நீதி தேடவேண்டும் என வலியுறுத்திவரும் அதேவேளை, புலம்பெயர்ந்த தமிழர்களும் இந்தியா சிறீலங்காவிற்கு ஆதரவாக செயற்படக்கூடாது என்பதை வலியுறுத்திவருகின்றார்கள்.

தமிழக கட்சிகளிடம் இருந்தும் தமிழ் மக்களிடம் இருந்தும் இவ்வாறான கடுமையான அழுத்தங்கள் எழுந்துள்ள நிலையில், மனித உரிமைகள் சபையில் இந்தியா என்ன முடிவை எடுக்கப்போகின்றது, அதன் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்ற கேள்விகள் எழுந்திருந்தன. இந்நிலையில் ஒட்டுமொத்த தமிழர்களின் கோரிக்கையைப் புறந்தள்ளிவிட்டு மகிந்த அரசாங்கத்தை காப்பாற்றும் முடிவையே இந்தியா எடுத்துள்ளதாக தெரியவருகின்றது. அதாவது மிகவும் நெருக்கடியான நிலை தோன்றியுள்ள இவ்வேளையில், குறிப்பிட்ட (சுமார் ஆறு மாதம் என்று கூறப்படுகின்றது) கால அவகாசத்தைப் பெற்று தற்காலிகமாகவேனும் பிரேரணை கொண்டுவருதை தடுத்து சிறீலங்காவை இந்த நெருக்கடியில் இருந்து காப்பாற்றுவதே இந்தியாவின் தற்போதையை நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




மும்பையில் கடந்த 5ம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற சிறீலங்காவிற்கு எதிரான போராட்டத்தில் இருந்து...

இதுதொடர்பாக ஜெனீவாவில் நிலைகொண்டுள்ள டில்லி அரசின் இராஜதந்திரிகள், அமெரிக்காவின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் இவ்விவகாரம் தொடர்பில் முக்கியமான பேச்சுகளை நடத்தியபோதும் அமெரிக்கா இதற்கு இசைந்து வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரேரணை தொடர்பில் தளர்வுப் போக்கைக் கடைப்பிடிக்குமாறு அமெரிக்காவிடம் இந்தியா இராஜதந்திர அடிப்படையிலான வேண்டுகோளை விடுத்தது. அத்துடன், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு சிறீலங்காவிற்கு கால அவகாசம் வழங்குமாறும் இந்தியா கோரியுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மகிந்த அரசு முன்னெடுத்துவரும் அபிவிருத்தி நடவடிக்கை, மீள்கட்டுமான செயற்பாடுகள், புனர்வாழ்வு உட்பட கொழும்புக்குச் சாதகமான வகையிலான காரணிகளையும் இந்தியா மேற்குலகத்திடம் எடுத்துரைத்துள்ளது. எனினும், அமெரிக்கா அவர்களது கோரிக்கையை நிராகரித்துள்ளதாக ஜெனீவாவில் இருந்து வெளிவரும் செய்திகளில் இருந்து அறியமுடிகின்றது.

சிறீலங்கா அரசு, சர்வதேசம் வழங்கிய சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்தத் தவறிவிட்டது. எனவே, இனிமேலும் கால அவகாசத்தை வழங்க தாம் தயாரில்லை எனத் திட்டவட்டமாக அறிவித்துள்ள அமெரிக்கா, பிரேரணை சபைக்கு வந்தேதீரும் என ஆணித்தரமாக இடித்துரைத்துள்ளது என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் ஜெனீவாவில் சிறீலங்காவிற்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள தீர்மானம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவுடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்போவதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளதாக இந்து நாளேடு தெரிவித்துள்ளது. எனினும், பிரதமர் மன்மோகன் சிங்குடன் தொலைபேசியில் தொடர்புகொள்ள ம.தி.மு.க பொதுச்செயலர் வைகோ முயன்றுவந்ததாகவும் ஆனால், அவர் தொடர்புக்கு வருவதாக இல்லை. தன்னை அவர் தவிர்ப்பதன் மூலமே இந்தியாவின் நிலைப்பாட்டை தன்னால் அறிந்துகொள்ள முடியும். இது மிகவும் கவலைக்குரியது. இவர்கள் வரலாற்றுத் தவறொன்றை செய்துகொண்டிருக்கின்றனர். இலங்கையில் தமிழர் பாதுகாப்பு ஒன்றே இந்தியாவினது பூகோள பாதுகாப்புக்கு உறுதுணையாக இருக்கும். இந்திரா காந்தி அம்மையாருக்கு அந்த தொலைநோக்கு பார்வை இருந்தது. இன்று அது யாரிடமும் இல்லை. மன்மோகன்சிங் நல்ல மனிதர். ஆனால், நல்ல பிரதமர் அல்லர். சோனியா காந்தியால் ஆட்டுவிக்கப்படும் பொம்மை அவர் என்று வைகோ அவர்கள் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவிற்கு எதிரான பிரேரணை 19ம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்படவேண்டும். ஏனெனில் 21ம் திகதி கூட்டத்தொடர் முடிவடைவதால் மனித உரிமைகள் பேரவையுடன் சட்டப்பிரகாரம் உறுப்புநாடொன்று பிரேரணையொன்றை சமர்ப்பிக்கவேண்டுமாயின், மாநாடு நிறைவடைவதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும். எனவே, சிறீலங்காவிற்கு எதிரான பிரேரணை 19ம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்படலாம் என்ற நிலையில், அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவில்லை. இதனால், சிறீலங்காவைக் காப்பாற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் ஏனைய உறுப்பு நாடுகள் குறிப்பாக ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன் பேச்சுகளை நடத்துவதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சிறீலங்காவுக்கு எதிரான தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு வழங்கும் என தான் நம்புவதாக இந்தியப் பிரதமர் செயலகத்துக்கான மத்திய இணையமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார். சிறிலங்காவுக்கு எதிரான ஐ.நா தீர்மானத்தின் போது, சிறிலங்காவுக்கு ஆதரவாக இந்தியா செயற்படும் என வெளியாகிய செய்திகளையடுத்து எழுந்துள்ள நெருக்கடிகளையடுத்து, செய்தியாளர்களுடனான சந்திப்பில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். 2009ம் ஆண்டு ஜெனீவாவில் கொண்டுவரப்பட்ட சிறீலங்காவுக்கு எதிரான மனித உரிமை மீறல் குறித்த தீர்மானத்தில், சிறீலங்காவுக்கு ஆதரவாக இந்தியா செயற்பட்டதைச் சுட்டிக்காட்டிய செய்தியாளர்கள், தற்போது மட்டும் இந்தியா எவ்வாறு எதிர்க்க முடியும் எனக் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த இணையமைச்சர் நாராயணசாமி, தமிழ்நாட்டு மக்கள், அரசியல் கட்சியினர் ஆகியோரின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு இந்தியா வாக்களிக்கும் எனத் தான் நம்புவதாகத் தெரிவித்தார். இந்த விவகாரம் தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து சிறீலங்காவுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று வலியுறுத்தியதாகவும் அவர் அங்கு குறிப்பிட்டார். சிறிலங்காவுக்கு எதிரான தீர்மானத்துக்கு தமிழ்நாடு கொங்கிரஸ் கட்சி முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவரது கருத்து இவ்வாறிருக்க, இந்திய அரசு தற்போது பின்பற்றிவரும் வெளியுறவு கொள்கைகளுக்கு ஏற்பவே ஜெனீவா விவகாரத்தில் முடிவெடுக்கும் என கொங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனார்த்தனன் திவேதி தெரிவித்துள்ளார். இந்திய கொங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர்களில் ஒருவரும் செய்திப் பிரிவின் தலைவருமான திவேதி இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது, இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கைகள் மற்றும் வெளிநாடுகளுடனான இராஜதந்திர உறவுகள் தொடர்பில் மத்திய அரசு எடுக்கும் முடிபுகளில் நாட்டில் உள்ள எந்த அரசியல் கட்சிகளும் தலையிடுவதில்லை.

இந்திய அரசியல் கட்சிகள் மத்திய அரசு எடுக்கும் வெளியுறவு தொடர்பான கொள்கைகள் மற்றும் முடிபுகளில் தலையிடுவதில்லை. நாடு சுதந்திரம் பெற்ற நாள் முதற்கொண்டு இத்தகைய நடைமுறையைத்தான் இந்திய அரசியல் கட்சிகள் இதுவரை பின்பற்றி வந்துள்ளன. அதேபோல இலங்கையில் நடைபெற்ற இறுதிக் கட்டப் போரின் போது நிகழ்ந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா். சபையில் கொண்டுவரப்பட உள்ள தீர்மானம் குறித்தும் மத்திய அரசு முடிவை எடுக்கும். இம் முடிவுதான் உறுதியானது. இந்த விவகாரத்தில் கொங்கிரஸ் கட்சி எந்த வகையிலும் தலையிடாது என்று ஜனார்த்தனன் திவேதி திட்டவட்டமாக தெரிவித்தார். தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, பிரதமர் மன்மோகன் சிங்கை டில்லியில் சந்தித்து இந்தியா முழு ஆதரவு அளிக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ள நிலையில் தி.மு.க வுடன் கூட்டணி வைத்துள்ள கொங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஜனார்த்தனன் திவேதி தெரிவித்துள்ள கருத்து தி.மு.க. வட்டாரங்களில் கொந்தளிப்பை ஏற்படுத்தும் என்று கூறப்படுகின்றது.

இதுஇவ்வாறிருக்க, சிறீலங்காவிற்கு ஆதரவாக மலேசியா வாக்களிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில், சிறீலங்கா மீது முன்வைக்கப்படும் அமெரிக்காவின் பிரேரணைக்கு ஆதரவு அளிப்பதை உறுதி செய்யும்படி மலேசிய பிரதமர் நஜிப் துன் ரஸாக்கிற்கு குறிப்பாணை ஒன்றை கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பி வைத்துள்ளதாக மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.மனோகரன் தெரிவித்துள்ளார். மலேசியாவில் உள்ள இந்திய தமிழ் சமூகத்தின் கோரிக்கைக்கு மலேசிய பிரதமர் செவிசாய்க்க வேண்டும் என அதில் மனோகரன் கேட்டுக் கொண்டுள்ளார். அடுத்த பொதுத் தேர்தலில் இந்திய தமிழ் சமூகத்தின் ஆதரவை பரிசன் தேசிய புத்ரஜயா (Barisan Nasional Putrajaya) கட்சி பெற வேண்டுமானால் சிறீலங்கா மீதான பிரேரணையை மலேசியா ஆதரிக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். பிரேரணை நிறைவேற்றப்படுவதன் மூலம் இலங்கையிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கபறினா இறைச்சிக்கடை



தினமும் உடன் இறைச்சி வகைகளையும், விசேடமாக ஆட்டிறைச்சிப் பங்கையும் பெற்றுக்கொள்ள...

BOUCHERIE GABARINA

62, Rue Louis Blanc 75010 Paris — 207, rue fbg st Denís 75010 Paris

Mo : La Chapelle Ou Gare du Nord

Tel : 01 40 34 05 35 — Tel : 01 46 07 46 35

Fax : 01 40 34 09 76 — Fax : 01 46 07 41 30

## Bail விற்பனைக்கு

Metro 4 : Marcadet Porcadetஇற்கு அருகாமையில் rue labat 75018 paris என்னும் முகவரியில் 130 m விஸ்தீரணமுள்ள மேல்தளமும் 170m sous -sol விஸ்தீரணமுள்ள கடை Bail விற்பனைக்கு உள்ளது

வாடகை 3200 € CC

தொடர்பு: 07 51 01 59 63

## 3S VDR

Tamil, Hindi video

Cartes Teléphoniques



21. Bd de la Chapelle 75010 Paris

01 42 09 87 70 / 06 17 06 76 33

## La Courneuve Cash & Carry

உங்கள் மளிகைத் தேவைகள் அனைத்திற்கும்

1, rue des Prevoyants 93120 La Courneuve

Tél.: 06 60 20 61 47

## VIJAI COIFFURE



ஆண்கள் சிறுவர்களுக்கான சிகையலங்காரம் மற்றும்

ஆண்களுக்கான முக அலங்காரம் செய்யப்படும்

51, rue Louis Blanc, 75010 Paris

Tel.: 09 54 28 63 50

Ⓜ La chapelle, Louis blanc, Gare du Nord

## சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்

நகர சபையில் திருமணம் செய்ய, நகர சபையில் திருமண அறிவிப்பு கொடுக்க, குடும்பத்தை ஸ்பொன்சர் செய்ய, வெளிநாட்டு அமைச்சு மூலம் ஸ்பொன்சர் செய்ய, தேசிய பிரஜா உரிமை கோர, போலீசில் வாகனச்சாரதிப் பத்திரம் மாற்ற, போலீசில் வதிவிட உரிமைப் பத்திரம் (விசா) பெற, நீதிமன்றத்தில் பெயர் மாற்றம் செய்ய, ஒப்ரா மற்றும் கமிசனுக்கு விண்ணப்பிக்க

- எமது மொழிபெயர்ப்புக்கள் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்பு கொள்ள

SAGADEVAN Pierre

26, rue Philippe de Girard,75010 Paris

Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06

E.mail: saga_de_van@yahoo.fr

## MINI MARCHÉ

பலசரக்கு வாணிபம்

உங்கள் அனைத்து மளிகைத் தேவைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

4, rue Ernest Prevost 93330 Aubervilliers

01 49 37 15 97

## NIPPON COIFFEUR



La Courneuve இல் அனுபவமிக்க சிகை அலங்கரிப்பாளர்களின் கைவண்ணத்தில்

19 Av Paul Vaillant Couturier Port: 0751301218

93120 LA COURNEUVE M° La Courneuve

## Serendib Lanka Travels Ltd

*Discover the world with....*

Colombo Special

Srilankan....£515.00 Emirate....£477.00

Gulf Air.......£605.00 Etihad.....£454.00

பாடசாலை விடுமுறையின் போது இலங்கை செல்வோருக்கு விசேட சலுகைகள்

JET AIRWAYS Brand new Boeing 777-300 ER Flights

Colombo: £545.00 Baggage: 32 k.g + 7 k.g

Chennai: £ 475.00 Baggage: 46 k.g + 7 k.g

| Very popular Destination special Only on Srilankan Airlines | |
|---|---|
| Colombo | £515.00 |
| Chennai | £515.00 |
| Tirchi | £515.00 |
| Kuala Lumpur | £485.00 |
| Singapore | £485.00 |

All fares mentioned are low seasons including taxes

| Popular Destination Special | |
|---|---|
| Sydney | £855.00 |
| Melbourne | £650.00 |
| Oslo | £152.50 |
| Zurich | £116.50 |
| Geneva | £112.90 |
| Toronto | £458.53 |
| Montreal | £461.53 |
| New York | £386.93 |



இலங்கை, இந்தியா, கனடா மற்றும் அனைத்து உலக விமான பயணத்தையும் குறைந்த செலவில் மேற்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

LEWISHAM : 020 8318 7775 Mob : 07983437835

15 Marischal Road, Lewisham, London SE13 5LE

E.Mail : info@serendib-lanka.co.uk

IATA

## Garage Mahendran

- வாகனங்களை விற்பதற்கும் வாங்குவதற்கும்,

திருத்த வேலைகள்,

- Carosserie வேலைகள்,

மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனைக்குண்டு.

- வாகனங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் தரமான முறையில் கழுவி துப்பரவு செய்து தரப்படும்.



85-87, rue de Strasbourg, 93200 St Denis

Tél.: 01 48 21 93 31 / 06 17 91 47 66

Hôpital Delafontaineக்கு அருகாமையில்

Lundi au Samedi 8h30 à 19h

## GYPS Pest Control Services

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்



எலி

சுண்டெலி

மூட்டைப் பூச்சி



கரப்பான்

எறும்பு

மற்றும் பல பூச்சிகள்



இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நிம்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly pest Control Vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:

079 8358 9993

077 2346 7012

## மணமகன்,மணமகள் தேவை

லண்டனில் வசிக்கும் யாழ் இந்து படித்த Student visaவில் இருக்கும் மணமகளுக்கும் சுவிசில் வசிக்கும் பிராஜாவுரிமையற்ற 46வயது சகோதரனுக்கும் மணமக்கள் தேவை.

தொடர்புகளுக்கு : 07402901896

தகவல்:செல்வி

## தன இலட்சுமி மஹால்

THANAA LAKSHMI MAHAL — Textiles & Jeweleries



ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன் குறுகியகால இடைவெளியில் தரமாகச் செய்து கொடுக்கப்படும்

பொன்னுருக்கல், தோடு குத்துதல், சிறப்பாக நடாத்தப்படும்

நவரத்தினக் கற்கள் பதித்த மோதிரங்கள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

Tél.: 01 48 36 40 75 - Port 06 50 17 51 91 - Fax: 01 79 64 12 61

122, Av P.V. Couturier - 93120 La Courneuve

அமெரிக்கா

# ஈரானுக்கு எதிரான கடைசித் தெரிவு இராணுவத் தாக்குதல்

## அதிபர் பராக் ஒபாமா எச்சரிக்கை

பொருளாதாரத் தடைகள் மூலம் ஈரானின் அணுசக்தி இலட்சியங்களை நிறுத்த முடியாவிட்டால் இறுதித் தெரிவாக, ஈரானிய அணுசக்தித் திட்டங்களை அழிப்பதற்கு இராணுவத்துக்கு தான் உத்தரவிடுவேன் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார். அனைத்து தெரிவுகளும் மேசையில் உள்ளன. இறுதித் தீர்வானது இராணுவு அம்சமாகும் என அவர் கூறினார். அதேவேளை, ஈரான் மீது இஸ்ரேல் காலோசிதமற்ற தாக்குதல் நடத்துவதற்கு எதிராகவும் பராக் ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார். இவ்வாறன நடவடிக்கையானது ஈரான் தன்னை பாதிக்கப்பட்டவராக சித்தரிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திவிடும் என அவர் கூறியுள்ளார்.



இவ்வாரம் வெள்ளை மாளிகையில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹுவை சந்திக்கத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில் த அத்லாண்டிக் சஞ்சிகைக்கு அளித்த செவ்வியில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இவ்வாறு கூறியுள்ளார்.

'திட்டவட்டமான எமது நோக்கங்கள் என்ன என்பதை, கொள்கை அடிப்படையில், நான் விளம்பரப்படுத்திக் கொள்ளப்போவதில்லை. எனினும் ஈரான் அணுவாயுதங்களை கொண்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாம் அதை அர்த்த பூர்வமாக கூறுகிறோம் என்பதை ஈரான் மற்றும் இஸ்ரேலிய அரசாங்கங்கள் புரிந்துகொள்ளும் என எண்ணுகிறேன்' என அவர் தெரிவித்துள்ளார்.

ஈரானுடனான விவகாரத்தில் 'ஒரு இராணுவ அம்சம்' என்பது தடைகள், இராஜதந்திரம், கடந்த காலத்தில் நுட்பமாக உணர்த்தப்பட்ட தாக்குதல் அச்சுறுத்தல் முதலானவை கலந்த பல தெரிவுகளில் ஒன்று என்பதை ஈரானும் இஸ்ரேலும் உணர்ந்துள்ளன என அவர் கூறினார்.

'ஈரான் மற்றும் அதன் ஒரேயொரு உண்மையான நட்பு நாடும் (சிரியா) பின்னடைந்துள்ள நிலையில் திடீரென ஈரான் தான் பாதிக்கப்பட்டவராக காட்டிக்கொள்ளக்கூடிய கவனச் சிதறலை நாம் ஏன் விரும்ப வேண்டும்?' எனவும் ஒபாமா கேள்வி எழுப்பினார். 'உலகில் மிக கொந்தளிப்பான ஒரு பிராந்தியம் குறித்து நீங்கள் பேசுகிறீர்கள். அப்பிராந்தியத்திலுள்ள 'பல நாடுகள் தாம் அணுவாயுதம் வைத்திருக்காதபோது, ஈரான் அணுவாயுதங்களை வைத்துக்கொள்வதை சகித்துக்கொள்ள முடியாதனவாக உள்ளன. ஈரானானது பயங்கரவாத அமைப்புகளுக்கு அனுசரணை வழங்குவதற்காக அறியப்பட்டதாகும். எனவே அணுவாயுத பரவல் அச்சுறுத்தலானது தீவிரமாகி வருகிறது' என ஒபாமா மேற்படி செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, ஈரான் நாடாளுமன்றத் தேர்தலில் அதிபர் மெஹ்மூத் அகமத்நிஜாத் கட்சிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. தனது சொந்த ஊரிலேயே அதிபரின் சகோதரி பர்வீன் அகமத்நிஜாத் தோல்வியைத் தழுவியுள்ளார். ஈரான் தலைநகர் தெஹ்ரானுக்கு தென்கிழக்கில் உள்ள நகரத்தில் வெளியான முதல்கட்டத் தேர்தல் முடிவுகள் அதிபரின் கட்சிக்குப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக மெர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. அதிபரின் சகோதரி பர்வீன், கர்ம்சார் தொகுதியில் போட்டியிட்டார். இவர் கொன்சர்வேட்டிவ் உறுப்பினரிடம் தோல்வியடைந்தார். மேலும் கொன்சர்வேட்டிவ் உறுப்பினர்களே அதிக இடங்களைப் பிடித்துள்ளனர். 290 தொகுதிகளுக்கான தேர்தலில் முடிவுகள் வெளியான 60 இடங்களில் 46 இடங்கள் கொன்சர்வேட்டிவ் கட்சியினரே வெற்றியடைந்துள்ளனர். நாடு முழுவதும் தேர்தல் முடிவுகள் வாரத்தின் இறுதியில் அல்லது அடுத்த வாரத்தில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய நாடாளுமன்றக் கூட்டம் வரும் யூன் மாதம் தொடங்க உள்ளது. இந்த தேர்தல் முடிவுகள் அடுத்த ஆண்டு நடைபெறும் அதிபர் தேர்தலில் மெஹ்மூத் அகமத்நிஜாத்துக்கு பெரும் சவாலாக இருக்கும் எனவும் இதனால் இத்தேர்தல் முடிவை அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரான்ஸ்


# சிறுநீர் கழித்ததை படம்பிடித்த கூகிள் மீது வழக்கு

பூமிப் பந்தின் முழுப் பிரதேசத்தையும் படம் பிடித்துள்ள கூகிள், அடுத்த கட்டமாக கடலுக்கு அடியிலும் படம்பிடித்து தரவேற்றம் செய்யும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. ஆனால், அதன் நடவடிக்கைக்கு எதிராக ஆங்காங்கே வழக்குகளையும் அது எதிர்கொண்டுவருகின்றது. பிரான்சில் தனியார் ஒருவரின் வீட்டிற்கு செல்லும் பாதையை படம் பிடித்துத் தரவேற்றம் செய்தமையால் வழக்கை எதிர்கொண்ட கூகிள் இப்போது, தரவேற்றம் செய்துள்ள படம் ஒன்றில் (கூகுளின் ஸ்ரீட் வியூ அப்ளிகேஷன் - தெரு நிகழ்வுகளைக் காணும் வசதி) தனது வீட்டின் தோட்டத்தில் சிறுநீர் கழித்துக் கொண்டிருந்த ஒருவரைப் படமாக்கியதில் சிக்கலை எதிர்கொண்டுள்ளது. தனது வீட்டினுள் செய்த நிகழ்வொன்றை படமாக்கி வெளியிட்டு தனக்கு பெரும் கெட்ட பெயரை ஏற்படுத்தி விட்டதாக கூகுள் மீது பிரெஞ்சுக்காரர் ஒருவர் வழக்குத் தொடர்ந்துள்ளார். பிரான்சின் Angers (Maine-et-Loire) பகுதியைச் சேர்ந்த 50 வயதான ஜோன் என்பவர் தனது வீட்டு முன்பகுதியில் சிறுநீர் கழித்துள்ளார். இது கூகுளின் ஸ்ட்ரீட் வியூ அப்ளிகேஷனில் பதிவானது. உடனே கூகுள் அந்த படத்தில் உள்ள ஜோனின் முகத்தை மங்கலாக்கி அதை இணையதளத்தில் வெளியிட்டது. என்ன தான் முகம் மங்கலாக இருந்தாலும் ஜோனின் கிராமத்தினர் அது ஜோன் என்று கண்டுபிடித்து கேலி பேசி சிரிக்க ஆரம்பித்தனர். இதனால் பாதிக்கப்பட்ட ஜோன், கூகுள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். தான் சிறுநீர் கழிக்கும் படத்தை வெளியிட்டதற்காக 10 ஆயிரம் ஈரோ அபராதம் கோரியுள்ளதுடன், உடனடியாக படத்தையும் அகற்றுமாறு கேட்டுள்ளார். இந்த வழக்கு ஆங்கர்ஸ் நகரில் உள்ள நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இந்த வழக்கை இரத்து செய்யுமாறு கூகுள் நிறுவனத்தின் வழக்கறிஞர் கேட்டுக் கொண்டுள்ளார். ஆனால், இந்நாட்டில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் இருக்கும் ஜனநாயக உரிமைக்கும், இரகசியத்திற்கும் இது பங்கம் விளைவித்துள்ளதாக ஜோனின் வழக்கறிஞர் கூறியுள்ளார். இந்நிலையில் வரும் 15ம் திகதி தீர்ப்பு வழங்கப்படுகிறது.

ரஷ்யா

# பிரதமர் புட்டினைக் கொல்ல சதி இருவர் கைது

ரஷ்ய பிரதமர் விளாடுமீர் புட்டினை தற்கொலை தாக்குதல் மூலம் கொலை செய்ய நடந்த சதி முறியடிக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. ரஷ்யாவில் வருகிற மார்ச் 4ம் திகதி அதிபருக்கான தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் தற்போதைய பிரதமர் புட்டின் வெற்றி பெறுவதற்கான



வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இந்த நிலையில், பிரதமர் புட்டினை தற்கொலைத் தாக்குதல் நடத்தி கொலை செய்ய நடந்த சதி திட்டம் முறியடிக்கப்பட்டு இருப்பதாக ரஷியாவின் சேனல் ஒன் தொலைக்காட்சி தகவல் வெளியிட்டது. இந்த சதித்திட்டத்தில் ஈடுபட முயன்ற தீவிரவாதிகளில் இருவர் உக்ரைன் நாட்டில் உள்ள ஒடேசா பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், ஒருவர் பலியாகி விட்டதாகவும் அந்த செய்தியில் கூறப்பட்டது.

இதுகுறித்து, உக்ரைன் பாதுகாப்பு படையின் செய்தி தொடர்பாளர் கூறியதாவது, இந்த ஆண்டு தொடக்கத்தில், ஜனவரி 4ம் திகதியன்று ஒடேசா பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில், தீவிரவாதிகள் வெடிகுண்டுகள் தயாரித்துக் கொண்டிருந்தபோது, ஏற்பட்ட விபத்தில் ஒருவர் பலியாகி விட்டார். காயங்களுடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த மற்றொரு தீவிரவாதியை உக்ரைன் பாதுகாப்பு படையினர் கைது செய்தனர். இந்தநிலையில், பிப்ரவரி 4ம் திகதியன்று அதேபகுதியில் வேறொரு அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் பதுங்கி இருந்த மற்றொரு தீவிரவாதியும் கைது செய்யப்பட்டார். அவர்கள் இரண்டு பேரிடமும், உக்ரைன் பாதுகாப்புப் படையினர் மற்றும் ரஷ்ய உளவுத் துறையினர் கூட்டாக விசாரணை நடத்தி வருகிறார்கள் என்று அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டுள்ள தீவிரவாதிகள் இருவரும் ரஷ்யாவின் வடக்கு காகாஸஸ் பகுதியில் இஸ்லாமியர்களுக்கென்று தனியாக நாடு கேட்டு தொடர் தாக்குதல்களை நடத்தி வரும் செசன்யா நாட்டு தீவிரவாத குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்றும், புட்டினை கொலை செய்வதற்காக தீவிரவாதிகளை அனுப்பியது செசன்யா

(22ம் பக்கம் பார்க்க)

### படிப்பதற்காக பாலியல் தொழில்

'அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல், அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்ற பாரதியார். எழுத்தறிவிற்காக தங்கள் உடலை விற்கும் நிலை இன்று அதிகரித்திருக்கின்றது. அதுவும் வளர்ச்சியடைந்த நாடான பிரித்தானியாவில் என்பதுதான் அதிர்ச்சிதரும் தகவல். பிரித்தானியாவில் கல்லூரியில் படிக்க கல்வி கட்டணம் செலுத்துவதற்காக மாணவ, மாணவிகள் பாலியல் தொழிலில் ஈடுபடும் பரிதாப நிலை அதிகரித்து வருவதாக சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரம் ஒன்று அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது. இந்த ஆய்வில் 10 பேரில் ஒருவர் இந்த தொழிலில் ஈடுபடுவதாக தெரியவந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு 4 சதவீதமாக இருந்த நிலை தற்போது இரண்டரை மடங்கு அதிகரித்து இருக்கிறது. இதில் பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் தான் இந்த வழியை தேர்ந்தெடுத்திருக்கிறோம் என 93 சதவீதம் பேர் ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள் என்கின்றது அந்த ஆய்வு

### 10வது குழந்தையைச் சுமக்கும் வாடகைத்தாய்!

வாடகைத் தாயாக செயல்பட்டு 10வது முறையாக குழந்தை பெறப் போகிறார், பிரித்தானியா பிரிங்டன் நகரை சேர்ந்த ஜில் ஹாக்கின்ஸ் என்ற 48 வயதுப் பெண். இவர் இதுவரை 8 முறை வாடகைத் தாயாக



செயல்பட்டு, 8 குழந்தைகளை பெற்றெடுத்து, அதற்கு உரியவர்களிடம் கொடுத்திருக்கிறார். இப்போது அவர் மீண்டும் கர்ப்பமாக இருக்கிறார். இந்த முறை அவர் ஹோம் கவுண்டிஸ் நகரை சேர்ந்த ஒரு தம்பதிக்காக செயற்கைத் தாய் ஆகி இருக்கிறார். இந்த முறை அவரது வயிற்றில் இரண்டு குழந்தைகள் உருவாகி வளர்ந்து வருகின்றன. இந்த குழந்தைகளின் உண்மையான தாயார் 40 வயதான ஆசிரியை. அவரது கணவருக்கு 42 வயதாகிறது. இந்த தம்பதிக்கு ஏற்கனவே 9 வயதில் ஒரு மகள் இருக்கிறார். 2வது முறையாக கணவர் மூலம் இயற்கையான முறையில் கர்ப்பம் தரிக்க தகுதி அற்ற உடல் நிலையில் இருக்கும் ஆசிரியை, வாடகை தாய் ஜில் ஹாக்கின்சை அணு

கினார். இதன்படி இந்தத் தம்பதியின் உயிர் அணுக்கள், ஜில் ஹாக்கின்சின் கருப்பையில் மருத்துவ ரீதியாக செலுத்தப்பட்டதனால் ஜில் ஹாக்கின்சின் வயிற்றில் 2 குழந்தைகள் உருவாகி இருப்பதை மருத்துவர்கள் உறுதி செய்து இருக்கிறார்கள். வாடகைத் தாயாக 10வது குழந்தை பெறும் சாதனை பற்றி ஜில் ஹாக்கின்ஸ் கூறுகையில், "எனக்கு இன்னும் சில மாதங்களில் இரட்டை குழந்தைகள் பிறக்க இருக்கிறார்கள். நான் 8வது குழந்தையை பெற்ற போதே, இனி எனது உடல் நிலை பிரசவத்துக்கு தாங்காது என்று கூறினார்கள். மற்றவர்களுக்குத் தானம் கொடுப்பதில் எனக்கு எப்போதுமே மகிழ்ச்சி உண்டு. அதன்படி நான் மற்றவர்கள் மகிழ்ச்சிக்காக குழந்தை பெற்று கொடுப்பதில் பெருமை கொள்கிறேன்" என்றார்.

### பேருந்தில் இருந்து இறக்கி 18 பேர் சுட்டுக்கொலை

பாகிஸ்தானின் வடக்கே அமைந்துள்ள கைபர்-பக்துங்வா பிராந்தியத்தில் உள்ள ஜில்கிட் பகுதியில் ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கிறார்கள். கடந்த 28ம் திகதி ராவல்பிண்டியில் இருந்து ஜில்கிட் என்ற இடத்திற்கு சென்ற பேருந்தில் ஏராளமான ஷியா முஸ்லிம்கள் பயணம் செய்தனர். அந்த பேருந்து ஹர்பான் என்ற இடத்தில் செல்லும் போது துப்பாக்கிகளுடன் வந்த கும்பல் தடுத்து நிறுத்தியது. பேருந்தில் இருந்தவர்களை கீழே இறக்கி அவர்களிடம் இருந்த அடையாள அட்டைகளை வாங்கி சோதனை போட்டனர். பின்னர் இவர்களை வரிசையாக நிற்க வைத்து துப்பாக்கியால் சுட்டுத்தள்ளினார்கள். இதில் 18 பேர் உயிர் இழந்தனர். மேலும் 7 பேர் படுகாயமடைந்தனர். இந்த கொடூர தாக்குதலில் 5 முதல் 10 பேர் கொண்ட கும்பல் ஈடுபட்டதாக அந்த பகுதி சட்டமன்ற பிரதிநிதி அப்துல் சத்தார் தெரிவித்தார். பலியான அனைவரும் ஷியா முஸ்லிம்கள் என்றும் சன்னி முஸ்லிம்கள் வசிக்கும் பகுதியில் பேருந்து செல்லும் போது இந்த சம்பவம் நிகழ்ந்ததாக காவல்துறை அதிகாரி கூறினார்.

### தடுத்து வைப்பதற்கு அவுஸ்திரேலியாவில் புதிய முகாம்

சட்டவிரோதமாக குடியேறும் இலங்கை உட்பட ஏனைய நாடுகளின் அகதிகளை தடுத்துவைப்பதற்கு அவுஸ்திரேலியா தடுப்பு நிலையமொன்றை அமைத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரே



லியாவின் கிழக்கு பேர்த்தில் நோர்த்தாம் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் இந்த தடுப்பு நிலையம்

தீவிரவாதக் குழுவின் தலைவர் உமரோவ் என்பதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

விசாரணையில், 'தீவிரவாதிகள் 3 பேரும் ஐக்கிய அரபு எமிரேட்சில் இருந்து துருக்கி வழியாக உக்ரைனுக்கு தொடருந்தில் வந்ததாகவும், அதிபருக்கான தேர்தல் நடைபெறும் திகதியில், ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் விளாடிமிர் புட்டினை கொலை செய்ய வேண்டும்'' என்று தங்களுக்கு உத்தரவிடப்பட்டு இருந்ததாகவும், தீவிரவாதிகள் கூறியுள்ளனர். உயிருடன் பிடிபட்டுள்ள தீவிரவாதிகளில் ஒருவனான இலியா பியான்சின் கூறுகையில், 'மொஸ்கோவிற்கு சென்று ரஷ்ய பிரதமர் புட்டினை கொல்ல வேண்டும் என்பதே தங்களுடைய நோக்கம்'' என்று தெரிவித்துள்ளார்.

நோர்வே

## சமாதானத்துக்கான நோபல் பரிசுக்கு 231 பேர் விண்ணப்பம்

2012ம் ஆண்டிற்கான சமாதானத்திற்கான நோபல் பரிசுக்கு 231 பேர் விண்ணப்பித்திருப்பதாக கூறியுள்ள நோபல் குழு அதில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன், ஜேர்மனியின் முன்னாள் ஆளுநர் ஹெல்மட் ஹோஹ் மற்றும் பிரட்லிமன்னிஸ் ஆகியோரின் பெயர்களும் உள்ளடங்குவதாக தெரிவித்துள்ளது. வழமையில் இந்த விருதுகளுக்கு விண்ணப்பிப்போரும் சில புதியவர்களும் இம்முறை விண்ணப்பித்துள்ளனர். உலகின் நான்கு திசைகளினதும் விண்ணப்பங்கள் வந்துள்ளன என நோபல் குழு தலைவர் கெய்ர் லுண்டே ஸ்ரட் தெரிவித்துள்ளார். கடந்த வருடம் இவ் விருதுக்கு 241 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில் இம்முறை 188 தனிநபர்களும் 43 அமைப்புக்களுமாக 231 விண்ணப்பங்கள் இவ்விருதுக்காக இடம்பெற்றிருப்பதாக கூறப்பட்டுள்ளது. இதேவேளை பில் கிளின்டன் ஜேர்மனியின் முன்னாள் ஆளுநர் ஹெல்மூட் ஹொஹ்ல், உக்ரெய்னின் முன்னாள் பிரதமரும் தற்பொழுது சிறைவாசம் அனுபவித்து வருபவருமான எதிர்க்கட்சி தலைவர் யூலியா திமோசெங்கோ ஆகியோரும் இப்பட்டியலில் அடங்குவர். அத்துடன் விக்கிலீக்ஸ் இணையதளத்திற்கு தகவல்கள் வழங்கி வருவதாக 22 குற்றச்சாட்டுகளுக்காக சிறைவாசம் அனுபவித்து வரும் அமெரிக்க சிப்பாய் மன்னிங்கும் இந்த விருதுக்கு விண்ணப்பித்துள்ளார். மேலும் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் ஐரோப்பிய ஒன்றியமும் இந்த விருதுக்கு விண்ணப்பித்துள்ளது.




ஈராக்

## ஏழுவருட வன்முறைகளில் 69,263 பேர்தான் பலியாம்!

ஈராக்கில் 2004 முதல் 2011 வரையிலான காலப்பகுதியில் நிகழ்ந்த பல்வேறு வன்முறைச் சம்பவங்களில் 69 ஆயிரத்து 263 பேர் பலியாகியுள்ளதாக ஈராக் அரசு தெரிவித்துள்ளது. ஈராக்கின் அப்போதைய ஜனாதிபதி சதாம் ஹுசைன் மீதான குற்றச்சாட்டின் அடிப்படையில் 2003 இல் அங்கு புகுந்த அமெரிக்கப் படைகள் கடந்தாண்டு டிசம்பர் 18ம் திகதி வெளியேறின.

இக்காலகட்டத்தில், போர், பயங்கரவாத சம்பவங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்களில் பலியானோர் எண்ணிக்கையை ஈராக்கில் சுகாதாரத்துறை அமைச்சகம் மற்றும் தேசிய பாதுகாப்பு சபை இரண்டும் இணைந்து கடந்த 29ம் திகதி வெளியிட்டன. அதன்படி 2004 ஏப்ரல் 5 முதல் - 2011 டிசம்பர் 31ம் திகதி வரையிலான கால கட்டத்தில் 69 ஆயிரத்து 263 பேர் பலியாகியுள்ளனர். இரண்டு இலட்சத்து 39 ஆயிரத்து 133 பேர் காயமடைந்துள்ளனர்.

போர் உச்சத்தில் இருந்த போது 21 ஆயிரத்து 539 பேர் பலியாகியுள்ளனர். 39 ஆயிரத்து 329 பேர் காயமடைந்துள்ளனர். 2011 இல் 2,777 பேர் பலியாகியுள்ளனர். 2009 ஒக்டோபரில் ஈராக் மனித உரிமைகள் அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையின்படி 2004 - 2008 காலகட்டத்தில் 85 ஆயிரத்து 694 பேர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போதைய அறிக்கை அதைவிடக் குறைவானவர்களையே பட்டியலில் காண்பித்துள்ளது. அதேபோல் அமெரிக்க அறிக்கையின்படி 76 ஆயிரம் பேரும், பிரித்தானியாவைச் சேர்ந்த தனியார் இணையத்தள அறிக்கையின்படி ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பேரும் ஈராக் போரில் இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ஈராக்கின் முன்னைய ஆய்வுகள் சுமார் ஆறு இலட்சம் வரையான மக்கள் கொல்லப்பட்டதாக தெரிவித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனி

# மலடாக்குதல் அறுவை சிகிச்சைக்கு தடை விதிக்க வேண்டும்

மனித உரிமை கழகம்


ஜேர்மனியில் பாலியல் குற்றங்களில் ஈடுபட்டு பலமுறை கைதாகும் நபர்களுக்கு அளிக்கப்படும், மலடாக்குதல் தண்டனை அளிப்பதைத் தடை செய்யுமாறு, ஐரோப்பிய மனித உரிமை கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜேர்மனி நாட்டில் பாலியல் குற்றங்களில் தொடர்ந்து பல முறை கைதாகி வரும் குற்றவாளிகளுக்கு மலடாக்கும் அறுவை சிகிச்சை செய்யப்படுகின்றது. இந்த வகையில் ஆண்டுக்கு குறைந்தது 5 பேராவது அறுவை சிகிச்சை மூலம் மலடாக்கப்படுகின்றனர். இதன்மூலம் மருத்துவ ரீதியாக பாலியல் குற்றவாளிகள் முடக்கப்படுகின்றனர். இதனால் வழக்கத்திற்கு மாறான பாலியல் குற்றங்களைத் தடுக்க முடியும் என்று ஜேர்மனி அரசு கூறப்படுகின்றது.

இது இன்று நேற்றல்ல, கடந்த 15ம் நூற்றாண்டில் இருந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறதாம். கடந்த 1970ம் ஆண்டு முதல் 1980ம் ஆண்டு வரைள் 104 பேருக்கு இப்படி மலடாக்கும் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இதில் 3 சதவீதம் பேர் மட்டுமே மீண்டும் பாலியல் குற்றங்களில் ஈடுபட்டனர். ஆனால் மேற்கண்ட சிகிச்சை செய்யாமல் சிறை தண்டனையுடன் விடுவிக்கப்பட்ட 53 குற்றவாளிகளில், 46 பேர் மீண்டும் பாலியல் குற்றங்களில் ஈடுபட்டதாக ஜேர்மனி அரசு தெரிவிக்கின்றது.

ஆனால் இதுபோன்ற தண்டனைக்கு தடை விதிக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஆலோசனை, சித்திரவதை மற்றும் மனிதத்தன்மையற்ற தண்டனைகள் தடுப்பு சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து அச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, பாலியல் குற்றவாளிகளுக்கு மலடாக்கும் அறுவை சிகிச்சை தேவையற்றது. இதனால் எதிர்மறையான விளைவுகள், மனம் மற்றும் உடல்நல பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு அதிகம். இதனால் இதுபோன்ற தண்டனைகளுக்குத் தடை விதிக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலடாக்கும் அறுவை சிகிச்சைத் தண்டனையை



நிறைவேற்றும் மற்றொரு நாடான செக் குடியரசிடம், கடந்த 2009 பெப்ரவரி மாதம் இதே போல கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் அதனை கண்டுகொள்ளாத செக் குடியரசு, தொடர்ந்து மலடாக்கும் தண்டனையை தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றது. ஐரோப்பாவில் உள்ள பல நாடுகளில் இந்த மலடாக்கும் தண்டனை இன்னும் நிறைவேற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கியூபா

## சாவேசை சந்தித்தார் ஃபிடல் கஸ்ரோ

கியூபாவில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் வெனிசூலா அதிபர் ஹ்யூகோ சாவேசை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்து நலம் விசாரித்துள்ளார். கியூபா முன்னாள் அதிபர் பிடல் கஸ்ரோ. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த வெனிசூலா அதிபர் ஹ்யூகோ சாவேசை தற்போதைய அதிபர் ரெவுல் கஸ்ரோவும் சந்தித்தார்.

புற்றுநோய்க்காக கியூபா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார் சாவேஸ். கடந்த திங்கள்கிழமை அவருக்கு சத்திரசிகிச்சை மூலம் புற்றுநோய்கட்டி அகற்றப்பட்டது. மருத்துவமனையில் சென்று சாவேசைப் பார்த்த ஃபிடல் கஸ்ரோ சுமார் இரண்டு மணி நேரம் அவருடன் இருந்ததாக வெனிசூலா தகவல் தொடர்புத்துறை அமைச்சர் ஆன்ட்ரெஸ் இஸ்ரா தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான்

## இராணுவத்தில் தலிபான்கள் இணைந்துள்ளனர்

ஆப்கானிஸ்தானில் பல்வேறு மோசடி உத்திகளை கையாண்டு இராணுவத்தில் தலிபான்கள் சேர்ந்து வருவதாக அந்நாட்டு இராணுவ தெற்கு மண்டல தளபதி அப்துல் ஹமீது குற்றம் சுமத்தியுள்ளார். அந்நாட்டின் இராணுவ உயர் அதிகாரி ஒருவரே இவ்வாறு கூறியுள்ளது அங்கு பாதுகாப்பு பணியை மேற்கொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் நிலவும் பாதுகாப்பு சூழல் குறித்து 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்கு தொலைபேசி மூலம் அளித்த பேட்டியில் அவர் இவ்விதம் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ தளத்தில் கடந்த மாதம் இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆன் தீயிட்டு கொளுத்தப்பட்டது. இதையடுத்து அங்கு முகாமிட்டுள்ள அமெரிக்க இராணுவத்தினர் மீது தொடர்ந்து தாக்குதல் நிகழ்த்தப்பட்டு வருகிறது. இத்தாக்குதலில் ஆப்கான் இராணுவச் சிப்பாய

# பிரித்தானியத் தமிழ்ப் பெண் கொள்ளுப்பிட்டியில் படுகொலை

## தேன்நிலவு இறுதி இரவானது

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள விடுதி ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட தமிழ்ப் பெண்ணின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொள்ளுப்பிட்டியில் சுதர்ஷனி சகிலா கனகசபை என்ற 48 வயதான தமிழ்ப் பெண்ணின் கொடூரமான படுகொலைச் சம்பவம் தொடர்பில் அதிர்ச்சிகரமான தகவல்கள் கசிந்துள்ளன. தேனிலவுக்காகச் சென்ற பெண்ணை யார் கொலை செய்தது? அவர் எப்படிக் கொலை செய்யப்பட்டார் என பல்வேறு கோணங்களில் எழுந்த கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் பதில் கிடைத்துள்ளது. மூடிய அறைக்குள் அரங்கேற்றப்பட்ட இந்தக் கொலைச் சம்பவத்தால் கொள்ளுப்பிட்டிப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டன. முதலிரவு எப்படி இறுதி இரவாக மாறியது?

நடந்தது இது தான்: சம்பவத்தில் கொல்லப்பட்ட சுதர்ஷினியும், சந்தேக நபரான ஞானச்சந்திரனும் ஆரம்பம் முதலே நட்பு ரீதியில் பழகிவந்துள்ளனர். இருசாராரின் குடும்பங்களும் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டதால் இருவருக்கும் இடையிலான நட்பு வலுத்துள்ளது. இந்நிலையில், உறவினர்களின் சம்மதத்துடன் சுதர்ஷனி மற்றுமொருவரை மணந்துள்ளார். பின்னர், 1981ம் ஆண்டில் சுதர்ஷினி பம்பலப்பிட்டியிலிருந்து தனது கணவர், பிள்ளைகள் சகிதம் பிரித்தானியா சென்றுள்ளார். அங்கு குடியுரிமையும் பெற்று அங்கேயே வாழ்ந்துவந்துள்ளார். இந்நிலையில் திடீர் விபத்தொன்றில் ஞானச்சந்திரனின் மனைவியும், பிள்ளைகளும் உயிரிழந்த சம்பவம் சுதர்ஷினியின் காதுகளுக்குச் சென்றடைய, அவர் உடனடியாக ஞானச்சந்திரனுடன் தொடர்பு கொண்டு விசாரித்துள்ளார். இதனையடுத்து, முறிந்திருந்த நட்பு மீண்டும் மலர ஆரம்பித்துள்ளது.

இதன் பின்னர் இருவரும் பல தடவைகள் வெளிநாடுகளில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதுடன், நட்பு காதலாக உருவெடுக்கவும் தொடங்கியது. இதனால், தனது கணவரை விவாகரத்துச் செய்துவிட்டு ஞானச்சந்திரனை



மணம் முடிப்பதற்கு சுதர்ஷினி முடிவெடுத்தார். அவ்வாறு விவாகரத்துப் பெற்ற பின்னர், சுதர்ஷினி கடந்த 14ம் திகதி அங்கு வந்துள்ளார். வந்த கையோடு தனது காதலனை கரம் பிடித்துள்ளார். திருமணம் முடிவடைந்த கையோடு பிரித்தானியா திரும்பவேண்டும் என்பதுதான் சுதர்ஷினியின் எதிர்பார்ப்பாக இருந்தது. இந்நிலையில், கொள்ளுப்பிட்டியிலுள்ள விடுதியொன்றில் தேன்நிலவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

புதியதொரு வாழ்க்கை, புதிய எதிர்பார்ப்புகள் எனப் பல்வேறு கனவுகளோடு கொள்ளுப்பிட்டி ரேணுகா விடுதி அறையில் காத்திருந்தார் சுதர்ஷனி. அப்போது, ஞானச்சந்திரனும் வந்தார். இருவரும் தங்களது எதிர்காலம் குறித்து பலதும் பத்தும் பேசியுள்ளனர். அன்பான வார்த்தைகளைப் பரிமாறவேண்டிய தறுவாயில் சுதர்ஷனி, 'பிரித்தானியா சென்று வாழ்வோம்' எனத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளார். இதற்குப் பிரபல வியாபாரியான ஞானச்சந்திரன் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். இதனால், இருவருக்குமிடையில் தர்க்கம் ஏற்பட்டது. நீண்டநேரத்துக்குப் பின்னர் இருவரும் சமாதானமடைந்தனர். அதன் பின்னர் இருவரும் இணைந்து மது அருந்தியுள்ளனர். பகையை மனதிலேயே வைத்திருந்த ஞானச்சந்திரன், சுதர்ஷனிக்கு மது உச்சத்தை எட்டியதையடுத்து கத்தியால் அவரின் கழுத்தை வெட்டிக் கொலை செய்துள்ளார்.

இந்தக் கொடூரமான சம்பவம் அரங்கேறிய பதற்றத்தால், விடுதியின் பின்புறத்திலுள்ள ஜன்னலின் ஊடாகப் பாய்ந்து தப்பியோடியுள்ளார் ஞானசந்திரன். மறுநாள் காலை சுதர்ஷனி சடலமாகக் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்ற விடுதி நிர்வாகத்தினர் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். பெண்ணின் நகைகள் மற்றும் பணம் ஆகியன அறையில் பத்திரமாக இருந்ததால் கொள்ளையடிக்கும் நோக்கத்திற்காக இக்கொலை இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து, விசேட தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட கொள்ளுப்பிட்டி காவல் துறையினர் 24 மணித்தியாலங்களுக்குள் சந்தேக நபரைக் கைதுசெய்துள்ளனர்.

இப்பெண் பிரித்தானியாவில் இருந்து தனது தாயாருடன் கடந்த ஜனவரி மாதம் இரண்டாம் வாரத்தில் இலங்கைக்கு வந்ததாகவும் எனினும் அவரின் தாயார் சில நாட்களின்பின் திரும்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



கள் சிலரும் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் இது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த இராணுவத் தளபதி அப்துல் ஹமீது மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் கூறியது, இராணுவத்துக்குள் புகும் தலிபான்கள் இராணுவத்தை சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இராணுவத்தினருக்கே அவர்கள் தீவிரவாத பயிற்சி அளிக்கின்றனர். அவர்களை தங்கள் வசம் கொண்டு வர முயற்சிக்கின்றனர்.

இதுபோன்றவர்கள்தான் அமெரிக்க இராணுவத்தினர் மீது தாக்குதலை நிகழ்த்தி வருகின்றனர். இதை அனுமதிப்பது அபாயகரமானது. இதனால் இராணுவத்துக்கு ஆட்தேர்வு செய்வதில் கடுமையான நடை முறையைப் பின்பற்ற வேண்டும். எந்த விதத்திலும் இராணுவத்துக்குள் தலிபான்கள் புகாத வண்ணம் ஆட்தேர்வு நடைமுறையை மாற்றி அமைக்க வேண்டும்.

மேலும், இராணுவத்தினர் இராணுவத்துக்கு வெளியில் யாருடன் எல்லாம் தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்பதை கண்காணிக்க வேண்டும். அவர்களது செல்பேசி பேச்சு பதிவு செய்யப்பட வேண்டும்.

இதையெல்லாம் செய்தால்தான் இராணுவத்துக்குள் தலிபான்கள் சேர்வதை தடுத்து நிறுத்த இயலும் என்றார். ஆப்கானிஸ்தானில் இராணுவம் மற்றும் காவல்துறை ஆகிய இரண்டிலும் சேர்த்து மொத்தம் இரண்டரை இலட்சம் பேர் பணியாற்றுகின்றனர். இதை மூன்றரை இலட்சமாக உயர்த்த அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. இந்நிலையில், இச்செய்தி அந்நாட்டு அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.நா.

## புதிய துணை பொதுச்செயலாளராக சுவீடன் முன்னாள் அமைச்சர் நியமனம்

ஐ.நா.சபையின் புதிய துணை பொதுச்செயலாளராக ஜோன் எலியசன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சுவீடன் நாட்டின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சராவார். அத்துடன் அவர் ஐ.நா. சபையின் சிறப்பு தூதராக இருந்து பல்வேறு நாடுகளில் மனிதவள மேம்பாட்டுக்கு பாடுபட்டவர். இவர் யூலை முதலாம் திகதி பொறுப்பை ஏற்கிறார். இந்த தகவலை ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கி மூன் அறிவித்தார். தற்போது துணை பொதுச்செயலாளர் பதவி வகிக்கும் ஆஷா ரோஸ் மிகிரோ பணி நிறைவு பெற்றதும் தனது சொந்த நாடான தான்சான்யா திரும்புவார். இதுதவிர அர்ஜென்ரீனா நாட்டை சேர்ந்த சூசனா மல்கோர்ரா என்பவர் ஐ.நா. பொதுச்செயலாளரின் தலைமை அதிகாரியாக ஏப்ரல் முதலாம் திகதி முதல் செயல்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போலந்து

## தொடருந்துகள் மோதல்

### 14 பேர் பலி – 50 பேர் காயம்

போலந்து நாட்டில் இடம்பெற்ற தொடருந்து விபத்தில் 14 பேர் பலியானதுடன், 50 பேர் காயமடைந்துள்ளனர். தென்போலந்தின் ஸ்ஸெகோசினி நகரில் கடந்த சனிக்கிழமை மாலை பயணித்துக்கொண்டிருந்த இரு அதிவேக தொடருந்துகள் நேருக்குநேர் மோதி விபத்திற்குள்ளாகின. ஒரு அதிவேக தொடருந்து தவறான தண்டவாளத்தில் சென்றதாலேயே இந்த விபத்து சம்பவித்ததாக அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவசர வாகனங்கள் மன்றும் உலங்குவானூர்தி மூலம் காயமடைந்தவர்கள் வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். சம்பவ இடத்திற்கு போலந்து பிரதமர் டொனால்ட துஸ்க் மற்றும் 3 அமைச்சரவை நாடாளுமன்ற உறுப்பினர்களும் சென்று பார்வையிட்டுள்ளனர். அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் தொடருந்து விபத்துக்களில் இது மோசமான விபத்துச் சம்பவமாக உள்ளது என போலந்து நாட்டு போக்குவரத்து அமைச்சர் ஸ்லாவுமீர் நோவேக் கூறினார்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் கட்டுமானப் பணிகள் இழுபறிக்குள்ளாகியுள்ளதால் மார்ச் மாதமே பணிகள் முடிவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் கடைசிப் பகுதியிலேயே இத்தடுப்பு முகாம் செயற்படத் தொடங்குமென தெரிவிக்கப்படுகிறது. இந்த தடுப்பு நிலையத்தில் இலங்கை, ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 600 அகதிகள் தடுத்து வைக்கப்படவுள்ளனர்.

## காப்புறுதிப் பணத்திற்காக மனைவி கொலை

காப்புறுதிப் பணம் பெறுவதற்காக, தனது மனைவியை கொலை செய்வதற்கு ஒருவரை ஒப்பந்தத்தில் நியமித்த ஒருவருக்கு ருமேனிய நீதிமன்றமொன்று 16 வருடம் 8 மாதங்களும் சிறை தண்டனை விதித்துள்ளது. அத்துடன் ஒப்பந்தத்திற்காக கொலை செய்த நபருக்கு 16 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சட்டத்தரணியான விக்டர் டியோரெஸ்கு என்பவரே தனது மனைவி வயலெட்டாவை கொலை செய்வதற்கு தூண்டியுள்ளார். அப்பெண் கொலை செய்யப்பட்டால் அவரின் பெயரில் செய்யப்பட்டிருந்த ஆயுள் காப்புறுதி மூலம் 150,000 ஈரோக்களை பெற்றுக்கொள்ள முடியுமென அவர் எண்ணியிருந்ததாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இதற்காக அவர் தனது கட்சிக்காரர் ஒருவரின் மகனான ஏர்வின் விக்டர் பிரெஸ்மெரீனு என்பவரை ஒப்பந்தத்தில் நியமித்தார். கடந்த வருடம் வயலேட்டா கழுத்தில் 25 தடவைகள் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இக்கொலையின்போது விக்டர் பிரெஸ்மெரீனுவின் கைரேகை அடையாளங்கள் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் அவர் காவல்துறையினரால் பின்தொடரப்பட்டு கைது செய்யப்பட்டார். தான் எவ்வாறு அவ்வீட்டினுள் நுழைய வேண்டும் என்பது தொடர்பில் தனக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அடங்கிய கடிதங்களையும் அவர் விசாரணையின்போது காவல்துறையினரிடம் வழங்கியுள்ளார். இதனையடுத்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

## அதிவேக தொடருந்துக்கு எதிர்ப்பு

அதிவேக தொடருந்துகளை இயக்குவதில் பல்வேறு நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு இத்தகைய தொடருந்துகளை அறிமுகம் செய்து வருகின்றன. ஆனால் இதற்கு நேர்மாறாக இத்தாலி நாட்டில் தூரின் நகரில் வாழும் மக்கள், 'எங்களுக்கு அதிவேக தொடருந்து வேண்டாம்' என கூறி போராட்டம் நடத்துகிறார்கள். அங்கு அதிவேக தொடருந்துகள் செல்வதற்காக சுரங்கப்பாதை மற்றும் தொடருந்து தண்டவாளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது வன்முறையும் வெடித்தது. இதனால் காவல்துறையினர் கண்ணீர்ப்புகை குண்டுகளை பிரயோகித்து ஆர்ப்பாட்டக்காரர்களை கலைத்தனர்.



# Mohan Jewellery Mart



பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

**3/4 Fois sans Frais**
(Piéce d'identité + Rib + C.B)

201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82
Mo: La Chapelle / Gare du Nord

## ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!

**உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்**




DIAPHANE CONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107

- எலிகள் – சுண்டெலிகள்
- கரப்பான் பூச்சிகள்
- தொல்லைகொடுக்கும் பூச்சிகள்

Tél.: 01 76 58 42 07
Fax: 01 48 59 09 95

அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம் ஒரே தடவையில் பயன்பெற்றிட நாடுங்கள்
77 bis rue Robespierre
93100 Montreuil
சுதா / விமல் : 06 34 18 80 04

## வன்னி இறைச்சிக்கடை





M°: La Courneuve
Tram T1 - Arét : Danton

105, Avenue Jean Jaurés
93120 La Courneuve
Tél : 01 48 37 20 89

## ESOL with Citizenship

விரைவாக நிரந்தர
வதிவிட உரிமை பெறவேண்டுமா???

ESOL வகுப்புகள் உங்கள் நிரந்தர
வதிவிட உரிமைக்கு வழிவகுக்கின்றது.




ஒரே கட்டணத்தில் சித்தியடையும்
வரை பயிற்சியளிக்கப்படும்

சித்தியடைவது கடினமா????? தயாராகுங்கள்...

- தனிநபர் கவனிப்பு
- தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள்
- குறைந்த கட்டணத்தில் மிகுந்த சேவை

Exam Preparation Classes **£175 Only**

**Food Hygiene Seminar**

**Personal Licence (Off Licence)**

**English Classes £88 Per month**
★ Speaking & Listening ★ Reading & Writing

**IELTS Exam Preparation**

For more information call:
**020 8903 9580**
Hazel House, 1-3 Lancelot Road, Wembley HA0 2AL

## உங்கள் தேவைகள் எங்கள் சேவைகள்

**We&You** Event management
Group Foto Elanges





புகைப்படம்
வீடியோ
மணவறை
மண்டப அலங்காரம்
மணப்பெண் அலங்காரம்
விழாக்களுக்கான உணவு சேவை
விழாக்களுக்கான உடைகள்

www.fotoelanges.com

01 43 83 95 26 - 06 45 83 90 64

## Délices De L'INDE

DRANCYயில் புதிய உதயம்

அனைத்துவகையான சைவ உணவுவகைகளையும், பலகார வகைகளையும் அனுபவம் வாய்ந்த சமையலாளர்களால் சுத்தமாக தயாரித்து வழங்குகிறோம்.

விழாக்கள் கொண்டாட்டங்களுக்கு தேவையான பலகார வகைகளையும், உணவு வகைகளையும் குறிப்பிட்ட நேரத்தில் விநியோகம் செய்கிறோம்



220 rue Anatole France,
93700 Drancy. Tél : 01 57 42 48 16